www.Padasalai.Net
www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

சுராவின்

# தமிழ் உரைநூல்



## 12ஆம் வகுப்பு



இலவசம்
சுய மதிப்பீடு
பயிற்சி நூல்



### சிறப்பம்சங்கள்

- புதிய பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், மொழித்திறன் பயிற்சிகள்(கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி மொழிபெயர்ப்பு, மொழியாக்கம்) ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 (அ.மா.வி.), **பிடிஏ 1 முதல் 6 மாதிரி வினாத்தாள்கள்**, காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள்–2019 – காலாண்டு, அரையாண்டுத்தேர்வு 2019 வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.
- மார்ச் வினாத்தாள் – 2020 விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

Ph: 9600175757 / 8124201000
orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

Sample Materials www.surabooks.com



2020-21 பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-81-8449-976-6
குறியீட்டு எண் : SG142

**எழுதி வழங்கியவர்கள்**

**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA
**க. மதிமாறன்,** M.A., M.Ed, M.Phil, PGDCA
**கமலா**, M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
✆96001 75757 / 81242 01000 / 81243 01000,
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's Smart English & Tamil Translation
- Sura's Smart English Practice Workbook
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com



# பொருளடக்கம்

மனப்பாடச் செய்யுள் பகுதி ........................................................ 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி<br>**உயிரினும் ஓம்பப் படும்** | இளந்தமிழே! (செய்யுள்) | 5-46 | ஜூன் |
| | | தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு நடராசன்(உரைநடை) | | |
| | | தண்டியலங்காரம் (செய்யுள்) | | |
| | | பாரதியின் கடிதம் (துணைப்பாடம்) | | |
| | | தமிழாய் எழுதுவோம் (இலக்கணம்) | | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**பெய்யெனப் பெய்யும் மழை** | பெருமழைக்காலம் (உரைநடை) | 47-82 | ஜூன் |
| | | பிறகொரு நாள் கோடை (செய்யுள்) | | |
| | | நெடுநல்வாடை (செய்யுள்) | | |
| | | முதல்கல் (துணைப்பாடம்) | | |
| | | நால்வகைப் பொருத்தங்கள் (இலக்கணம்) | | |
| 3. | பண்பாடு<br>**சுற்றத்தார் கண்ணே உள** | தமிழர் குடும்ப முறை (உரைநடை) | 83-144 | ஜூலை |
| | | விருந்தினர் இல்லம் (செய்யுள்) | | |
| | | கம்பராமாயணம் (செய்யுள்) | | |
| | | உரிமைத்தாகம் (துணைப்பாடம்) | | |
| | | பொருள் மயக்கம் (இலக்கணம்) | | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | | |
| 4. | கல்வி<br>**செல்வத்துள் எல்லாம் தலை** | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் (உரைநடை) | 145-204 | ஆகஸ்ட் |
| | | இதில் வெற்றி பெற (செய்யுள்) | | |
| | | இடையீடு (செய்யுள்) | | |
| | | புறநானூறு (செய்யுள்) | | |
| | | பாதுகாப்பாய் ஒரு பயணம் (துணைப்பாடம்) | | |
| | | பா இயற்றப் பழகலாம் (இலக்கணம்) | | |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம்<br>**நாடென்ப நாட்டின் தலை** | மதராசப்பட்டினம் (உரைநடை) | 205-252 | ஆகஸ்ட் |
| | | தெய்வமணிமாலை (செய்யுள்) | | |
| | | தேவாரம் (செய்யுள்) | | |
| | | அகநானூறு (செய்யுள்) | | |
| | | தலைக்குளம் (துணைப்பாடம்) | | |
| | | படிமம் (இலக்கணம்) | | |




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

# மனப்பாடச் செய்யுள்

**இயல் - 1**

## தன்னேர் இலாத தமிழ்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! **- தண்டி**

**பா வகை : நேரிசை வெண்பா**

**அணி : பொருள் வேற்றுமை அணி**

**இயல் - 2**

## நெடுநல்வாடை

அ.மா.வி 2019; பிடிஏ–3

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க **- நக்கீரர்**

**பாவகை : நேரிசை ஆசிரியப்பா**

**இயல் - 3**

## கம்பராமாயணம்

பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019

2. 'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**பாவகை : கலிவிருத்தம்**

9. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை. **- கம்பர்**

**பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## திருக்குறள்

**இல்வாழ்க்கை**

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**செய்ந்நன்றி அறிதல்**

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது பிடிஏ–2
அன்றே மறப்பது நன்று.

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை பிடிஏ–4,6
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**வெஃகாமை**

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

**வெகுளாமை**

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019
தன்னையே கொல்லும் சினம்.

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**ஊழ்**

15. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் பிடிஏ–5
உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

**இயல் – 4**

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

– சுரதா

பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

Sample Materials www.surabooks.com

இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம் **கவிதைப்பேழை**

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பாலசுப்பிரமணியம் |
| **புனைப் பெயர்** | : | சிற்பி |
| **பெற்றோர்** | : | பொன்னுசாமி – கண்டியம்மாள் |
| **பிறந்த ஊர்** | : | ஆத்துப் பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்) |
| **பிறப்பு** | : | 1936, ஜூலை 29 |
| **பணி** | : | முதலில் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர். இரண்டாவதாக கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர். |
| **படைப்புகள்** | : | **கவிதை நூல்கள்** ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி, மௌன மயக்கங்கள், நீலக்குருவி போன்றவை. மேலும் கவிதைநாடகம், சிறுவர் நூல்கள், புதினங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றவற்றைப் படைத்துள்ளார். |
| **சிறப்பு** | : | கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் என்று பன்முகச் சிறப்பு கொண்டவர்.<br>சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக உள்ளார்.<br>இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார். |
| **விருதுகள்** | : | சாகித்திய அகாதெமி விருது (2001–ஆம் ஆண்டு, அக்கினி சாட்சி – மொழிபெயர்ப்பு நூல்)<br>சாகித்திய அகாதெமி விருது (2002–ஆம் ஆண்டு, ஒரு கிராமத்து நதி – கவிதை நூல்)<br>தமிழக அரசு விருது (1982–ஆம் ஆண்டு, மௌன மயக்கங்கள் – கவிதை நூல்)<br>தமிழக அரசு விருது (1998–ஆம் ஆண்டு, பூஜ்யங்களின் சங்கிலி – கவிதை நூல்)<br>தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009–ஆம் ஆண்டு, சிறந்த படைப்பாளி)<br>இவை தவிர்த்து மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார். |
| **சிற்பி அறக்கட்டளை** | : | 1996–இல் இவரால் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. |

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், கன்னடம், மலையாளம், இந்தி, மராத்தி

## பாடப்பகுதி

சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **நிலவுப்பூ** என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

### இளந்தமிழே!



**செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!**
**தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்**
**தாழுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்**
**விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்**
**வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட**
**எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்**
**ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!**



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com

Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.surabooks.com

## குறுவினா

1. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்'' – யார், யாரைப் பற்றி கூறியது? பிடிஏ–5

சிற்பி பாலசுப்பிரமணியன் தமிழ்த்தாயைப் பற்றிக்கூறியது.

## சிறுவினா

1. சிற்பி பாலசுப்பிரமணியம் – குறிப்பு வரைக. பிடிஏ–1

சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிய குறிப்புகள்:

ஆற்றியபணி : பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.
ஆற்றுகின்ற பணி : சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர்.
சிறப்பு : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்.
விருது : 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலிற்காகவும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.
படைப்புகள் :

| | |
|---|---|
| கவிதை நூல்கள் | நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலியவை |
| உரைநடை நூல்கள் | இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் |
| மொழிபெயர்ப்பு நூல்கள் | மலையாளக் கவிதைகள் மற்றும் புதினங்களை மொழிபெயர்த்துள்ளார். |

இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் : ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

# கூடுதல் வினாக்கள்

இயல் 1

## பலவுள் தெரிக.

1. சிற்பி பாலசுப்பிரமணியம் என்பவர் ........

(i) கவிஞர் (ii) பேராசிரியர் (iii) மொழிபெயர்ப்பாளர் (iv) இதழாசிரியர்

அ) (i) மட்டும் (ii) சரியானவை ஆ) (i) மட்டும் (iii) சரியானவை
இ) (iii) மட்டும் (iv) சரியானவை ஈ) அனைத்தும் சரியானவை

விடை: ஈ) அனைத்தும் சரியானவை

2. சிற்பி பாலசுப்பிரமணியன் ......... பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

அ) சென்னை ஆ) பாரதியார் இ) காமராஜர் ஈ) தஞ்சை விடை: ஆ) பாரதியார்

3. சிற்பி பாலசுப்பிரமணியன் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்?

அ) ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) நான்கு முறை

விடை: ஆ) இரண்டு முறை

4. "எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால் ஏற்ற துணை வேறுண்டோ" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள கவிதை நூல் ......... .

அ) பூஜ்யங்களின் சங்கிலி ஆ) ஒளிப்பறவை
இ) நிலவுப் பூ ஈ) சர்ப்பயாகம் விடை: இ) நிலவுப் பூ

5. சிற்பி பால சுப்பிரமணியத்தின் 'அலையும் சுவடும்' என்பது ......... நூலாகும்.

அ) கவிதை ஆ) மொழிபெயர்ப்பு இ) உரைநடை ஈ) புதினம் விடை: இ) உரைநடை

6. கருத்து 1: செந்நிறப் பூக்கள் செறிந்திருந்த வானம் போல் தொழிலாளர்களின் கை சிவந்திருந்தது.

கருத்து 2: தொழிலாளர்களின் முகத்தின் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) 1 மற்றும் 2 சரியானவை ஈ) 1 மற்றும் 2 தவறானவை விடை: அ) 1 மட்டும் சரி

சரியான கருத்து: தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


உயிரினும் ஓம்பப் படும் - மொழி

இயல் 1

# தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல் - தண்டி

கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

தமிழ் மொழியின் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றுள் அணி இலக்கணத்தைப் பற்றி மட்டும் கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும்.



**காவியதர்சம்** என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நூல் அமைப்பு :** இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | தண்டி |
| **காலம்** | : | கி.பி. (பொ.ஆ) 12–ஆம் நூற்றாண்டு |
| **ஊர்** | : | சோழநாட்டைச் சேர்ந்தவர் |

**பாடப்பகுதி :** பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஓங்கலிடை வந்து | - உயர்ந்த மலையின் மீது தோன்றி |
| உயர்ந்தோர் தொழ விளங்கி | - பண்பில் சிறந்த சான்றோர்கள் வணங்குமாறு தோன்றி |
| ஏங்கல் ஒலி நீர் | - ஆரவார ஒலியை எழுப்பும் கடல் நீர் சூழப்பட்ட |
| ஞாலத்து இருள் அகற்றும் | - உலகின் இருளை நீக்கும் |
| ஆங்கவற்றுள் | - அப்படி இருக்கக் கூடியவற்றுள் |
| மின்னேர் | - மின்னலுக்கு நிகரான ஒளியைத் தருகின்ற |
| தனியாழி | - ஒற்றைச் சக்கரத்துடன் |
| வெங்கதிர் ஒன்று | - வெம்மையான சூரியன் ஒன்றாகும் |
| ஏனையது | - மற்றொன்று |
| தன்னேர் இலாத தமிழ் | - தனக்கு நிகரில்லாத தமிழ் மொழியாகும். |

## பொருளுரை

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக விளங்குவது மற்றொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ் மொழி.

## விரிவான விளக்கம்

உலகின் இருளான புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் உலகின் இயக்கம் நடைபெறாது. தமிழ்மொழி இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் சூரியனையும் தமிழையும் வணங்குகிறார்கள்.




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**9.** **கூற்று 1 : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்...... என்னும் செய்யுளில் பொருள் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.**
**காரணம் 2 : இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.**

அ) கூற்றும், காரணமும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும், காரணமும் தவறு

விடை: **அ) கூற்றும், காரணமும் சரி**

**10.** **இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறி பின் வேறுபடுத்திக் காட்டும் அணி ........**

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) தன்மையணி
இ) பொருள் வேற்றுமை அணி ஈ) உருவக அணி

விடை: **இ) பொருள் வேற்றுமை அணி**

## குறுவினா

**1.** **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
(i) தண்டியலங்காரம் (ii) மாறனலங்காரம் (iii) குவலயானந்தம்.

**2.** **அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
(i) தொல்காப்பியம் (ii) வீரசோழியம் (iii) இலக்கண விளக்கம் (iv) தொன்னூல் விளக்கம்
(v) முத்துவீரியம்.

**3.** **உலகத்தின் புற இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு பொதிகை மலையில் தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது **ஒளிர்கின்ற கதிரவன்** ஆகும்.

**4.** **மக்களின் அறியாமை இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது தமிழ்மொழியாகும்.

**5.** **தண்டி - குறிப்பெழுதுக.**
தண்டியலங்காரம் என்ற நூலின் ஆசிரியர் தண்டி ஆவார். இவர் கி.பி (பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

**6.** **தண்டியலங்காரத்தின் பெருமை யாது?**
இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் தண்டியலங்காரம் ஆகும்.

☆ ☆ ☆

**இயல் 1** — உயிரினும் ஓம்பப் படும் - மொழி

# தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

விரிவானம்

## பாடப் பகுதி

ரா.அ. பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் உள்ள மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

## பாடச் சுருக்கம்



மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதியவை, 'உன்னுடைய அறிவு ஒவ்வொரு நாளும் வளர்ச்சி பெற்று வருகிறது. உன் மனம் என்ற தாமரையில் **பேரறிவு** என்ற கதிரவனின் கதிர்கள் படுவதால் உனக்கு நல்லின்பம் உண்டாகட்டும்.'

நம்மைவிட மெலியாருக்கு உதவி செய்து அவர்களை நமக்குச் சரிசமமாக உயர்த்துவதால் நாம் வலிமை பெறமுடியும்.

பிறமொழிகளை நீ அறிந்திருந்தால், பிறமொழி பத்திரிகைகளைப் படித்து, அவற்றில் காணும் புதுமைகளை தமிழ் பத்திரிகைகளில் புகுத்திட முடியும். தமிழை வளர்ப்பதை உன் கடமையாகக் கொள்ள வேண்டும். புதியவைகள் அனைத்தையும் தமிழில் கொண்டு வரவேண்டும்.

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1904 | மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 'விவேகபானு' என்ற இதழில் இவரது கவிதை முதன்முதலாக வெளிவந்தது. |
| 1904 – 1906 | கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் நட்பு கிடைத்தது. தாதாபாய் நௌரோஜி தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதா தேவியைச் சந்தித்து தனது குருவாக ஏற்றுக் கொண்டார். 1905 இல் 'சக்கரவர்த்தினி' என்ற இதழைத் தொடங்கினார். |
| 1907 | 'இந்தியா' என்னும் வார இதழையும் 'பாலபாரதம்' என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றார். அங்கு திலகர், அரவிந்தர், லாலா லஜபதிராய் ஆகியோரை சந்தித்தார். |
| 1908 | 'சுதேச கீதங்கள்' என்ற தனது முதல் நூலை வெளியிட்டார். ஆங்கிலேய அரசு இவரைக் கைது செய்ய எண்ணியதால் புதுவை சென்றார். அங்குக் குவளைக் கண்ணனின் நட்பு கிடைத்தது. |
| 1909 | பாரதியின் இரண்டாம் கவிதைத் தொகுதியான 'ஜன்ம பூமி' வெளியானது. |
| 1912 | கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற கவிதை நூல்களை இயற்றினார். 'பகவத் கீதை'யை தமிழில் மொழிபெயர்த்தார். |
| 1918 | கடலூர் அருகே பாரதி கைது செய்யப்பட்டு 34 நாள்கள் சிறையில் இருந்தார். விடுதலையானவுடன் கடையத்திற்குச் சென்றார். |
| 1919 | மீண்டும் சென்னை வந்தார். இராஜாஜியின் இல்லத்தில் மகாத்மா காந்தியை சந்தித்தார். |
| 1920 | மீண்டும் சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். |
| 1921 ஜூலை | திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை பாரதியாரைத் தாக்கியதில் நோயுற்றார். |
| 1921 செப்டம்பர் 12 | பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்தார். |



2. **காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனை கடிதம் ஒன்றினை எழுதுக.**

இடம் : மொடையூர்,
நாள் : 20.05.2020.

அன்புள்ள மகாகவி பாரதி அவர்களுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீங்கள் நலமா? உங்களுடைய உடல் நலம் நன்றாக இருக்கும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். உங்களுடைய படைப்புகள் அனைத்தையும் நான் படித்துள்ளேன். ஒரு சிறந்த மனிதனாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் உங்களுடைய படைப்புகளை மட்டும் படித்தாலே போதும். உங்கள் படைப்புகளில் எனக்கு மிகவும் பிடித்தது.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?"

இந்தப் பாடலானது நம் வீரத்தின் அடையாளமாக திகழ்கிறது எனலாம்.

நேர்மையின் மறு உருவம் நீ! ஒழுக்கத்தின் உருவமே! வீரத்தை வளர்த்த வீரமே! உன்னால் இந்நாட்டில் வீரம் பிறந்தது. அதனால் விடுதலை பிறந்தது. இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்த நம் நாட்டை, வீரம் மிகுந்த பாடல்களைப் பாடி ஒவ்வொரு குடிமகனையும் வீரனாக்கி விடுதலை பெற செய்தவனே! உன் புகழ் என்றென்றும் வாழும், வளரும். முதன்முதலில் பெண்ணடிமையைப் பேசியவன் நீயே. உன்னால் பெண்களும் ஆணாதிக்கத்திலிருந்து விடுபட்டு கல்வி கற்று அனைத்து அரசாங்க பதவிகளில் இருக்கிறார்கள்.

உன்னால் மட்டுமே முடியும், எல்லாவற்றையும் சாதித்துக்காட்ட. உன் வழியை பின்பற்றினால் என்னாலும் முடியும். உன் புகழ் ஓங்குக. வாழ்க.

இப்படிக்கு
செ. ஜெயஸ்ரீ செந்தாமரை

உறைமேல் முகவரி

| |
|---|
| மகாகவி பாரதியார்,<br>எண் – 153, பெருமாள் கோயில் சன்னதி,<br>எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம். |


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

(i) வைகுறு விடியல் காண்பது வனப்பு

(ii) அதிகாலை விடியல், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். (வனப்பு - அழகு)

(iii) கன்னி விடியல் கவினுறு வனப்பு. கன்னி விடியலை வைத்து கவிஞர் கவிதை எழுதுவர். அக்கவிதை அழகு தரும்.

## சிறுவினா

1. **சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

**சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் என்ற பண்பு அமைந்துள்ள விதம் :** பிடிஏ–2; அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

| சங்கப்பாடல் | ஒலிக்கோலம் |
|---|---|
| "கடந்தடு தானை மூவிருங்கூடி<br>உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"<br>எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் | இப்பாடலில் மெல்லின, இடையின மெய்களை விட வல்லின மெய்கள் அதிகமாக அமைந்துள்ளன. |
| "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்<br>கடாஅ யானைக் கலிமான் பேக"<br>என்ற புறநானூற்றுப் பாடல் | உயிர் நெடில் ஒலிகள் அதிகமாக அமைந்துள்ளன. |
| "புணரின் புணராது பொருளே; பொருள்வயின்<br>பிரியின் புணராது புணர்வே"<br>என்ற நற்றிணைப் பாடல் | ஒரே சொல் மீண்டும் மீண்டும் அமைந்துள்ளது. |
| "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை"<br>என்ற புறநானூற்றுப் பாடல் | ஒரே சொல் மீண்டும் மீண்டும் அமைந்திருப்பதுடன் சொல் விளையாட்டும் சேர்ந்து அமைந்துள்ளது. |

2. **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.** அரையாண்டுத் தேர்வு 2019

(i) மாலைநேரத்தில் செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மலையுச்சியின் மீது சென்று மறையும் காட்சியானது, கதிரவன் தன் தலையைச் சாய்த்து உறங்குவது போல் உள்ளது.

(ii) கதிரவன் மறைகின்ற மாலை நேரத்தில் வானம் முழுவதும் சிவந்த நிறத்தில் காணப்படும். அக்காட்சியானது, வானத்தில் செந்நிறப்பூக்கள் செறிந்து, பூக்காடு போல் காட்சியளிக்கிறது.

3. **ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** பிடிஏ–1, 2; காலாண்டுத் தேர்வு 2019

(i) **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் பொருளணியில் இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.

(ii) **பொருள் :** மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோர்களால் (உயர்ந்தோர்) வணங்கப்படுகின்ற கதிரவன், ஓசை நிறைந்த கடல் நீரால் சூழப்பட்டுள்ள இந்த உலகத்தின் புற இருளை நீக்குகிறது.

(iii) **விளக்கம் :** மலையில் தோன்றி சான்றோரால் வணங்கப்படுகின்ற, இருளைப் போக்குகின்ற பொருள்கள் இரண்டு உள்ளன. ஒன்று மின்னலைப்போல் ஒளிர்கின்ற கதிரவன். மற்றொன்று பொதிகைமலையில் தோன்றி, வளர்ந்த, மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்குகின்ற தனக்கு நிகரில்லாத தமிழாகும்.

4. **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பரமணியம் |




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**கற்கும் திறன் – பயன் :**

மாணவர்களின் ஆற்றலை தாய்மொழிக் கல்வி வளப்படுத்துகிறது. அவர்களின் படைப்பாற்றலை அதிகப்படுத்துகிறது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். எளிதாகப் பாடங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால் ஆசிரியர்கள் எளிதில் கலந்துரையாடலில் ஈடுபட முடியும். இதனால் மாணவர்களின் பங்களிப்பு உள்ள ஒரு கல்வி முறை உருவாகிறது.

**இன்றைய நிலை :**

தாய்மொழிக் கல்வி கற்றால் முன்னேற முடியாது ஆங்கிலவழி கல்வி மட்டுமே உயர்ந்தது என்ற கருத்து பெற்றோர்களிடையே நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன் ஆகியோர் தமிழ் வழியில் (தாய்மொழியில்) கல்வி கற்றவர்கள்தாம். கல்வியும் மொழியும் நமது இரு கண்கள் ஆகும்.

**முடிவுரை :**

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு”

என்றார் பாரதிதாசன். அப்புகழுக்கெல்லாம் சொந்தமான தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் தாய்மொழியில் கல்வி பயின்று மொழியைச் சிறப்பிப்போம்.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**

| | |
|---|---|
|  | ஓர் இனத்தின் வரலாறு தமிழன்.<br>உளி வைத்த இடங்களெல்லாம் சிலைகளும் ஓவியங்களும்.<br>ஆதியில் எண்ணங்களைத் தெரிவிக்க சைகைகளைக் காட்டினான்.<br>பிறகு குரலைப் பயன்படுத்தினான், சொற்களைக் கற்றுக்கொண்டான்<br>தலைமுறைக்குத் தெரிவிக்க எண்ணி பாறைகளில் குறியீடாக்கினான்<br>எழுத்து வடிவங்களை கல்வெட்டுகளில் பொறித்தான்.<br>உடைகளில்லா காலத்திலேயே உளியால் செதுக்கியவன் தமிழன்<br>கலைகளின் தலைமகன் தமிழன்டா.. |

**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

| | |
|---|---|
| குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்<br>தாயின் குரலில் உயிரின் ஒலி. | விடை:<br>உயிரின் ஒலி அது உள்ளத்தின் ஒலி<br>உள்ளத்தின் ஒலி உண்மை பேசும்<br>உண்மையைப் பேசி குழந்தையை வளர்க்கும். |

**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

எ.கா. கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். விடை: **மறைமலை அடிகள்**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். விடை: **தமிழ்ஒளி**
3. சிறுகதை ஆசிரியர் ; முதல் பாதி நவீனம். விடை: **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். விடை: **கோதை**




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

பெய்யெனப் பெய்யும் மழை - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

இயல் 2

# பெருமழைக்காலம்

உரைநடை உலகம்

## பாடச் சுருக்கம்

இயற்கையின் சமநிலை மாறும்போது இயல்பான பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு புயல், பெருமழை, பெருவெள்ளம், புவி வெப்பமயமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் ஏற்படுகின்றன.

அண்மைக் காலங்களில் தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், உத்தரகாண்ட், கேரளா, பீஹார் முதலான மாநிலங்களில் பெருவெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

நம் வாழ்வின் அடிப்படையைப் பாதித்த பெரும்புயல்கள் **நிஷா, தானே, வர்தா, ஒக்கி, கஜா** முதலானவையாகும்.

கடந்த 15 ஆண்டுகளில் 5 முறை நம்நாட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளது. மும்பையில் ஒரே நாளில் 994 மி.மீ மழை பெய்தது. 2010 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலிருந்த 'லே' என்ற பகுதியில் 30 நிமிடங்களில் **150 முதல் 250 மி.மீ** வரை மழை பெய்தது. ('லே' என்ற பகுதி லடாக் என்ற யூனியன் பிரதேசத்தில் தற்போது அமைந்துள்ளது)

### புவி வெப்பமயமாதல்:

கார்பன்டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்ற **பசுமைக் குடில் வாயுக்கள்** அதிகரிக்கும் போது புவி வெப்பமடையத் துவங்குகிறது. மனிதன், இயற்கை வளங்களை அழித்ததால் புவி வெப்பமடைகிறது. இதன் விளைவாக ஆர்டிக் பகுதி, கடந்த **30 ஆண்டுகளில், நான்கு இலட்சம் சதுரமைல்கள்** உருகியுள்ளது. இதைத்தான் இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் **டேவிட் கிங்** "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கல்" என்று கூறுகிறார்.

**தெரிந்து தெளிவோம்**

சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைப்பதற்கு உருவாக்கியுள்ள கூட்டமைப்பின் படி, வங்கக்கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்கு, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன் மற்றும் தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டுப் பெயர்களைப் பரிந்துரை செய்துள்ளன. அந்தப் பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

மாற்று ஆற்றல்களான **சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல்** போன்ற கார்பன் இல்லாத ஆற்றல்களைப் பயன்படுத்தினால் புவி வெப்பமடைதலை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும்.

### ஐக்கிய நாடுகள் அவை:

இந்த அவை 1992 -இல் **ரியோ டி ஜெனிரோவில்** காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியது. தொடக்கத்தில் 50 நாடுகளும் தற்போது 193 நாடுகளும் உறுப்பினர்களாக உள்ளன. ஆண்டுதோறும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்த உரையாடல்களை இந்த அவை மேற்கொண்டு வருகிறது.

### பசுமைக்குடில் வாயுக்களை தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றும் நாடுகள்:

சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகியவை முன்னணியில் உள்ளன. இந்தியாவும் இந்தப் பட்டியலில் உள்ளது.

### புவி வெப்பமாதலால் ஏற்படும் விளைவுகள்:

(i) இந்திய வானிலை ஆய்வுத் துறையினர் **2009-ஆம் ஆண்டை** கடந்த 110 ஆண்டுகளில் மிக வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.

(ii) **2001** ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் வெப்பம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

(iii) அடுத்த **50 ஆண்டுகளில்** கடல்நீர்மட்டம் உயர்ந்து உலகத்தில் **200 கோடி மக்கள்** வெள்ளத்தால் சூழப்படுவர் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

### வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள்:

பெருமழையைத் தாங்கக் கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால், வெள்ளச் சமவெளிகள் ஆகியவற்றை அழித்து கட்டடங்கள் கட்டப்படுள்ளன.

நெகிழி மற்றும் திடக்கழிவுகள் நீர்வழிப் பாதைகளில் கொட்டப்படுகின்றன. ஆற்றில் மணல் அள்ளுவதால் வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85% வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டவையாகும்.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2. மழைநின்று போனதால் தனக்குள் ஏற்பட்ட வருத்தங்களை அய்யப்ப மாதவன் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?**

(i) மழையைப் பற்றி மட்டுமே பேசி வந்த அவ்வூர் மக்கள் அந்த எண்ணங்களில் இருந்து விடுபட்டனர். ஆனால் தான் மட்டும் மழையைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

(ii) வீட்டுச் சுவரில் செங்குத்தாய் மழை இறங்கிய காட்சி இன்னும் மனதை விட்டு நீங்கவில்லை.

(iii) கைகளை நீட்டி மழைத்துளிகளைப் பெற்றுக் கொண்ட போது ஏற்பட்ட குளிர்ச்சி, உடல் நரம்புகளுக்குள் இன்னும் மறையவில்லை.

(iv) நின்று போன மழை மீண்டும் வருமென்று எதிர்பார்த்திருந்த போது கோடைகாலம் வந்துவிட்டது என்று அய்யப்ப மாதவன் தன் வருத்தங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

☆ ☆ ☆

**பெய்யெனப் பெய்யும் மழை – இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்**

# இயல் 2

# நெடுநல்வாடை

– நக்கீரர் **கவிதைப்பேழை**

## நூற்குறிப்பு



(i) இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும்.
(ii) இந்நூலில் 188 அடிகள் உள்ளன.
(iii) இந்நூலின் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.
(iv) இந்நூல் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது.

**நூலின் பெயர்க்காரணம் :**

(i) தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுதியால் **நெடுவாடையாக** அமைந்துள்ளது.
(i) போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான **நல்வாடையாக** அமைந்துள்ளது. எனவே **நெடுநல்வாடை** எனப் பெயர் பெற்றது.
(ii) நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை

## ஆசிரியர் குறிப்பு

**பெயர்** : நக்கீரர்
**தந்தை** : மதுரைக் கணக்காயனார்
**படைப்புகள்** : இறையனார் களவியல் உரை, திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை
**சங்கத் தொகைநூல்களுள் இவர் பாடல் இடம் பெற்றுள்ள நூல்கள்** : அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு.

**பாடப்பகுதி :** நெடுநல்வாடையில் 1 முதல் 12 அடிகள் வரை பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

## பாடல்

**வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென**

**சொல்லும் பொருளும் :**

வலன் ஏர்பு வளைஇ – தாங்கள் தங்கியிருந்த மலைப்பகுதியை வலமாகச் சூழ்ந்து எழுந்த
பொய்யா வானம் – பருவம் பொய்க்காமல் உரிய காலத்தில் மழையைப் பொழியும் மேகமானது
வையகம் பனிப்ப – உலகமெல்லாம் குளிரும்படி
புதுப்பெயல் பொழிந்தென – புது மழையைப் பொழிந்தன

**பொருளுரை :**

தாங்கள் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகங்கள் உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தன.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. மா – விலங்கு | 3. மந்தி – குரங்கு |
| 2. கூர – குளிர்ச்சி மிகவிலங்குகள் | 4. பானாள் – நள்ளிரவு |

**பிரித்தெழுதுக:**

| |
|---|
| 1. குளிர்ப்பன்ன – குளிர்ப்பு+ அன்ன |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. மறப்ப – பெயரெச்சம் | 3. வீழ – பெயரெச்சம் |
| 2. ஒழிய – பெயரெச்சம் | 4. அன்ன – உவம உருபு |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**மறப்ப – மற + ப் + ப் + அ**
மற – பகுதி
ப் – சந்தி
ப் – எதிர்கால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**பா வகை, திணை, துறை**

**பா வகை** : நேரிசை ஆசிரியப்பா
**திணை** : வாகைத் திணை
**திணை விளக்கம்** : வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.
**துறை** : கூதிர்ப் பாசறை
**துறை விளக்கம்** : போருக்குச் சென்ற அரசன் தங்கும் படை வீடு கூதிர்ப்பாசறை எனப்படும்.



## கற்பவை கற்றபின்

1. **தற்கால வாழ்க்கை முறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**கருணாகரன்** : வணக்கம் சூர்யா.
**சூர்யா** : வணக்கம். கருணாகரன் எப்படி இருக்கிறாய்?
**கருணாகரன்** : நலமாக இருக்கிறேன்.
**சூர்யா** : மழை பெய்து கொண்டே இருக்கிறது.
**கருணாகரன்** : ஆமாம், மக்கள் யாரும் வேலைக்குப் போக முடியவில்லை. காய்கறிகள் கிடைக்கவில்லை, விலை அதிகமாகி விட்டது.
**சூர்யா** : ஆமாம். கருணா, நீ சொல்வது உண்மைதான். எங்கள் வீட்டிலேயே கஞ்சிதான் குடித்தேன்.
**கருணாகரன்** : சாலை முழுக்க தண்ணீர். வாகனம் ஓட்ட முடியவில்லை. இதனால் போக்குவரத்து நெரிசல். மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கிறது.
**சூர்யா** : நானும் செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்தேன். மக்களிடம் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
**கருணாகரன்** : நம் நாட்டில் தண்ணீர் சேமிக்க அணைகள் இல்லை. தண்ணீர் போக கால்வாய்கள் சரியாக இல்லை. இதனால்தான் மனிதனுடைய இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. விடாமல் மழையும் பெய்கிறது.
**சூர்யா** : மழைக்காலங்களில் இப்படி என்றால் குளிர்காலங்களில் பனிமூட்டம் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

**2.** **உத்தம சோழன் 'முதல் கல்' என்ற சிறுகதையில் இயற்கையை எவ்வாறு நயம்பட உரைத்துள்ளார்?**

(i) ஊரில் உள்ள வீரன் கோயில் குளத்தின் கரை நெடுகத் தண்ணீர்க் குளியலில் மினுமினுக்கும் தென்னை மரங்கள் அமைந்திருந்தன.

(ii) இரவு வந்துவிட்டதாக எண்ணி, குளம் முழுக்க சிரித்தபடி செவ்வல்லி மலர்கள் பூத்து நின்றன.

**3.** **வடிவாய்க்கால் பணியை சீரமைக்க பிரேம்குமார் கூறிய வழி யாது?**

அரசாங்கத்தில் பி.டபிள்யூ.டி என்ற துறையில் மனு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் அவர்கள் வந்து சீரமைப்பார்கள் என்று பிரேம்குமார் வடிவாய்க்காலை சீரமைக்க வழி கூறினான்.

☆ ☆ ☆

**பெய்யெனப் பெய்யும் மழை – இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்**

# இயல் 2 நால்வகை பொருத்தங்கள்

**இனிக்கும் இலக்கணம்**

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1.** **தமிழில் திணைப்பாகுபாடு .................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.** பிடிஏ–4

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**விடை: அ) பொருட்குறிப்பு**

**2.** **"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே''**
**-இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்.........................**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை: இ) தொல்காப்பியம்**

**3.** **யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ........**

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

**விடை: ஆ) உயர்திணை, அஃறிணை**

**4.** **பொருத்தி விடை தேர்க.**

அ) அவன் அவள் அவர் – 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை
ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் – 2) உளப்பாட்டுத் தன்மைப்பன்மை
இ) நாம் முயற்சி செய்வோம் – 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்
ஈ) நாங்கள், நாம் – 4) பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

**விடை: அ) 4, 1, 2, 3**

**5.** **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?**

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உதவுவன திணை, பால், எண், இடம் என்பனவாகும்.

**6.** **உயர்திணைப் பன்மைப்பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.** அ.மா.வி 2019

(i) இரண்டு மனிதர்கள் நேற்றிரவு வந்தனர். (ii) புலவர்கள் புத்தகங்களைக் கொடுத்தனர்.

## பிடிஏ மாதிரி வினா-விடை

**1.** **இருதிணைக்கும் பொதுவாக வரும் சொற்கள் .................** பிடிஏ–5

அ) குழந்தை, கதிரவன் ஆ) மரம், மனிதர்கள்
இ) சீதா, இராமன் ஈ) நாம், நாங்கள்

**விடை: அ) குழந்தை, கதிரவன்**



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

**8. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
இடம் மூன்று வகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாகும்.

**9. தன்மைப்பெயர் என்றால் என்ன?**
பேசுபவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் பெயர் தன்மைப்பெயர் எனப்படும்.
எ.கா : (i) நான், யான் – தன்மை ஒருமை; (ii) நாம், நாங்கள், யாம், யாங்கள் – தன்மைப் பன்மை

**10. தன்மைப் பன்மை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
(i) தன்மைப் பன்மை இரண்டு வகைப்படும். அவை
(ii) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்பனவாகும்.

**11. உளப்பாட்டுத் தன்மை என்றால் என்ன?**
(i) பேசுபவர் (தன்மை) முன்னிலையில் உள்ளவரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.
(ii) எ.கா : நாம் முயற்சி செய்வோம். நாம் இந்தியர்கள்
இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கும்.

**12. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்றால் என்ன? சான்று தருக.**
பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை எனப்படும்.
சான்று : (i) நாங்கள் முயற்சி செய்வோம். (ii) நாங்கள் தமிழர்கள்.

**13. பதிலிடுபெயர்கள் அல்லது மாற்றுப்பெயர்கள் பற்றி எழுதுக.**
(i) ஒரு பெயர்ச்சொல்லுக்கு மாற்றாகப் பயன்படும் பெயர் பதிலிடுபெயர் (அ) மாற்றுப்பெயர் எனப்படும்.
(ii) எ.கா : கலையரசன் இங்கு வந்தான். பிறகு, அவன் தன் வீட்டிற்குச் சென்றான்.
இதில் அவன் என்பது கலையரசனுக்கு மாற்றாக வந்தது.
நாய் வேகமாக ஓடிவந்தது. அது தன் குட்டிக்குப் பால் கொடுத்தது.
அது – மாற்றுப்பெயர்.



## கற்பவை கற்றபின்

**1. இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப் பகுதியிலிருந்து சான்று காட்டுக.**
(i) இடப்பாகுபாடு என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும்.
(ii) பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.
(iii) தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர, ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை.
சான்று : நான் புத்தகம் கொடுத்தேன்.
என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய, ஆணா பெண்ணா என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால் பாகுபாட்டை அறிய முடியாது. தன்மை பன்மையில் **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை** எனவும், **உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை** எனவும் இருவகை உண்டு.
(iv) பேசுபவர் (தன்மை) முன்னிலையில் உள்ளவரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டு தன்மைப் பன்மை ஆகும்.
சான்று : நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை). இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.
(v) பேசுபவர் முன்னிலையில் உள்ளவரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.
சான்று : நாங்கள் முயற்சி செய்வோம் (உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை).

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

இயல் 3

சுற்றத்தார் கண்ணே உள - பண்பாடு

# தமிழர் குடும்ப முறை

உரைநடை உலகம்

## பாடப்பகுதி

பக்தவத்சலபாரதி எழுதி 'பனுவல்' காலாண்டு இதழில் (தொகுதி II, 2010) வெளிவந்த கட்டுரையின் சுருக்கம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடச் சுருக்கம்

குடும்பம் என்பது மனித சமூகத்தின் அடிப்படை அலகாகும்.

குடும்பம் ⟶ குலம் ⟶ கூட்டம் ⟶ பெருங்குழு ⟶ சமூகம் என்று குடும்பம் விரிவடைகிறது.


### குடும்பம்:

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையான திருமணம் என்பது, குடும்பத்துடன் சார்ந்தே செயல்படுகிறது.

'திருமணம்', 'குடும்பம்' என்ற இரண்டு சொற்களும் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் இடம்பெறவில்லை. குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் (1029) இடம் பெற்றுள்ளது.

- **சங்க இலக்கியத்தில் குடும்பம் பற்றி இடம் பெற்றுள்ள சொற்கள்:** **குடம்பை, குடும்பு, கடும்பு**. குடம்பை 20 இடங்களில் இடம் பெற்றுள்ளது. 'குடும்பு' என்றால் **'கூடி வாழ்தல்'** என்பது பொருளாகும். குடும்பு என்ற சொல்லுடன் **'அம்'** விகுதி சேர்த்ததால் **குடும்பம்** என்ற பெயர் அமைந்தது.
- **தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள்:** **'இல்'**, **'மனை'** என்ற இரண்டு பெயர்களை வாழிடங்களாக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.
- **சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் வாழிடங்கள்:** இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூனர், வரைப்பு, முற்றம், நகர், மாடம்.
- **மருதத்திணை குறிப்பிடும் வாழிடங்கள்:**
  தம்மனை - மனைவியின் இல்லம்
  நும்மனை - கணவனின் இல்லம் என்று மகளிர் குறிப்பிட்டுள்ளனர்.
- தற்காலிகமாகத் தங்குமிடம் **'புக்கில்'** என்று புறநானூறு குறிப்பிடுகிறது.
- திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழுமிடம் **தன்மனை** என சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

### தெரிந்து தெளிவோம்




### மணந்தகம்:

மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டம் **மணந்தகம்** எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. இளந்தம்பதியருக்கு அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி **செவிலிக்கு** உரியது என்று தொல்காப்பியம் கூறுகிறது.

### தாய்வழிக் குடும்பம்:

சங்காலத்தில் கண சமூகத்துக்கு தாயே தலைமையேற்றிருந்தாள். தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி இருந்ததற்கான சான்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ள சேரநாட்டு மருமக்கள் தாயமுறையாகும். சங்ககாலத்தில் திருமணம் முடிந்த பின்னும் பெண், தாய் இல்லத்திலேயே இருந்தாள் என்றும் கணவன், மனைவி இல்லத்திற்குச் சென்று வாழ்வது நடைமுறையாக இருந்தது என்றும் **அகநானூறு** குறிப்பிட்டுள்ளது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்து, வளங்கள் மற்றும் செல்வங்கள் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்பதை **குறுந்தொகையிலுள்ள மருதத்திணைப்** பாடல் விளக்குகிறது.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


**சிறுவினா**

1. **பக்தவத்சல பாரதி இயற்றிய நூல்கள் யாவை?**

**பக்தவத்சல பாரதி இயற்றிய நூல்கள் :**

(i) இலக்கிய மானிடவியல் (ii) பண்பாட்டு மானிடவியல்
(iii) தமிழர் மானிடவியல் (iv) தமிழகப் பழங்குடிகள்
(v) பாணர் இனவரைவியல் (vi) தமிழர் உணவு போன்றனவாகும்.

2. **சங்க இலக்கிய நூல்களின் துணைக்கொண்டு தாய்வழிக்குடும்பம் பற்றி எழுதுக.**

சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(i) சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம் -270)
(ii) செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம் -276)
(iii) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம் -277)
(iv) முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம் -278)
(v) என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் (கலி - பாலை 8)

முதலான தொடர்களில் இவளது மகன் என்றே கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை இருந்துள்ளது. தாய்வழிக்குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக கருதப்பட்டனர். தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என குறுந்தொகையில் உள்ள மருதத்திணைப் பாடல் ஒன்று கூறுகிறது.

3. **சங்ககால குடும்ப அமைப்பில் செவிலித்தாயின் பங்கு குறித்து எழுதுக.**

(i) சங்ககால குடும்ப அமைப்பில் நற்றாய் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளான நற்றாய் மகளின் தோழியும் முதன்மையாக இருந்துள்ளனர்.
(ii) செவிலித்தாய் சமூகத் தாயாகவும் விளங்கினாள். சங்க காலத்தில் ஒவ்வோர் ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.
(iii) திருமணம் முடிந்த பின் இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்கு உரியது எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

4. **சங்ககாலத்தில் தாய்வழிக் குடும்பத்தின் நடைமுறைகள் குறித்து விளக்குக.**

(i) சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.
(ii) பெண் திருமணம் செய்த பின்னரும் தாயின் இல்லத்திலேயே கணவனுடன் வாழ்ந்து வந்தாள்.
(iii) தாய் வழிமுறையில் குடும்பத்தின் சொத்து, வளங்கள் மற்றும் செல்வங்கள் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டன.

5. **சங்ககாலத்தில் தந்தை வழிக்குடும்பத்தின் நடைமுறைகள் குறித்து எழுதுக.**

(i) பெண், திருமணத்திற்குப் பின்னர் கணவனுடைய தந்தையகத்தில் வாழ்ந்தாள்.
(ii) பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்தாள்.
(iii) தந்தைவழிக் குடும்பமுறையை விளக்கும் சமூகக் களங்களாக பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் போன்றவை இருந்தன.

☆ ☆ ☆

சுற்றத்தார் கண்ணே உள - பண்பாடு

இயல் 3

# விருந்தினர் இல்லம்

- ஜலாலுத்தீன் ரூமி

கவிதைப்பேழை

**நூற் குறிப்பு**

ஜலாலுத்தீன் ரூமி என்ற பாரசீகக் கவிஞரின் கவிதைகளில் குறிப்பிட்ட சிலவற்றை **கோல்மன் பார்க்ஸ்** என்பவர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளார். ஆங்கிலப் பதிப்பினை **என்.சத்தியமூர்த்தி** என்பவர் தமிழில் '**தாகங்கொண்ட மீனொன்று**' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை (சிலவற்றை) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.**
அ) ஜி.யூ. போப் ஆ) கால்டுவெல்
இ) என். சத்தியமூர்த்தி ஈ) கோல்மன் பார்க்ஸ்
விடை: **ஈ) கோல்மன் பார்க்ஸ்**

2. **கோல்மன் பார்க்ஸ் – ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்த கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.**
அ) என். சத்தியமூர்த்தி ஆ) கால்டுவெல்
இ) ஜி.யூ. போப் ஈ) வீரமாமுனிவர்
விடை: **அ) என். சத்தியமூர்த்தி**

3. **'விருந்தினர் இல்லம்' என்னும் கவிதையை வடித்தவர்.**
அ) ஜலாலுத்தீன் ரூமி ஆ) என். சத்தியமூர்த்தி
இ) ஜி.யூ. போப் ஈ) கால்டுவெல்
விடை: **அ) ஜலாலுத்தீன் ரூமி**

4. **மனித வாழ்க்கையை ஜலாலுத்தீன் ரூமி எதனுடன் ஒப்பிட்டுள்ளார்?**
அ) விருந்தினர் இல்லம் ஆ) சிறைச்சாலை
இ) சொர்க்கம் ஈ) போர்க்களம்
விடை: **அ) விருந்தினர் இல்லம்**

5. **எதிர்பாராத விருந்தாளிகளாக நம் வாழ்க்கையில் வந்து செல்பவற்றுள் பொருந்தாதது எது?**
அ) ஆனந்தம் ஆ) மனச் சோர்வு
இ) அற்பத்தனம் ஈ) வக்கிரம்
விடை: **ஈ) வக்கிரம்**

6. **கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி .......... நாட்டில் பிறந்தார்.**
அ) பாகிஸ்தான் ஆ) ஆப்கானிஸ்தான்
இ) ஈரான் ஈ) ஈராக்
விடை: **ஆ) ஆப்கானிஸ்தான்**

7. **'மஸ்னவி' என்ற கவிதைத் தொகுப்பில் நிரம்பியுள்ள கருத்துகள் எதனைச் சார்ந்தவை?**
அ) ஆன்மிகம் ஆ) வரலாறு
இ) இயற்கைக் காட்சிகள் ஈ) அரசியல்
விடை: **அ) ஆன்மிகம்**

### குறுவினா

1. **கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி பற்றி சிறுகுறிப்பு வரைக.**
**கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி:**
(i) இவர் ஆப்கானிஸ்தான் நாட்டில் கி.பி (பொ.ஆ) 1207 ஆம் ஆண்டு பிறந்தார்.
(ii) பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்களுள் ஒருவர்.
(iii) இவருடைய புகழ்பெற்ற படைப்புகள் 'மஸ்னவி' மற்றும் 'திவான் – ஈ – ஷம்ஸ் – ஈ – தப்ரீஸி' ஆகியனவாகும்.

2. **'மஸ்னவி' என்ற கவிதைத் தொகுப்பினைக் குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**
**மஸ்னவி கவிதைத் தொகுப்பு:**
(i) இந்நூல் பாரசீகக் கவிஞர் ஜாலுத்தீன் ரூமி என்பவர் இயற்றியதாகும்.
(ii) சூஃபி தத்துவப் படைப்பான இந்நூலில் 25,600 பாடல்கள் உள்ளன என்று கூறப்படுகிறது.
(iii) இது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக் கவிதைகளின் தொகுப்பாகும்.

3. **எதிர்பாராத விருந்தாளிகளாக நம் வாழ்வில் வந்து செல்பவை யாவை?**
ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவை நம் வாழ்வில் வந்து செல்லும் விருந்தாளிகள் ஆகும்.

4. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை மொழிபெயர்த்தவர்கள் யாவர்?**
ஜலாலுத்துன் ரூமியின் கவிதைகளில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் **கோல்மன் பார்க்ஸ்** ஆவார். அவற்றைத் தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் என்.சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ளார்.

கற்றத்தார் கண்ணே உள

www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


சுற்றத்தார் கண்ணே உள - பண்பாடு

இயல் 3

# பொருள் மயக்கம்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.** காலாண்டுத் தேர்வு 2019

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

**விடை: இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

**2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

அ) பாலை பாடினான் – 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.
ஆ) பாலைப் பாடினான் – 2) தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் – 3) பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் – 4) பாலைத் திணை பாடினான்

அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

**விடை: இ) 4,3,1,2**

**3. வேறுபொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**

**மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

மாணவர்கள்வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

**4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

(எ.கா) : முன் – அவன் முன்வந்து கூறினான்.
அவன்முன் வந்து கூறினான்.

| | |
|---|---|
| தானே | கண்ணன் தானே எல்லாப் பணிகளையும் செய்தான்.<br>கண்ணன்தானே எல்லாப் பணிகளையும் செய்தான். |
| கொண்டு | பழத்தைக் கொண்டு சென்றான்.<br>பழத்தைக்கொண்டு இனிப்பு செய்தான். |
| விட்டான் | காகிதக் கப்பல் செய்து விட்டான்.<br>காகிதக் கப்பல் செய்துவிட்டான். |

**5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.**

(i) "அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்" இதன் பொருள் அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் என்பதாகும்.

(ii) "அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்" இதன் பொருள் அந்தப் பெண்ணுடைய அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் என்பதாகும்.

**6. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

(i) **சல சல :** அருவியில் இருந்து நீர் சலசலவென ஓடுகிறது.

(ii) **கல கல :** நாடகத்தில் வேடிக்கைக் காட்சியைப் பார்த்தவர்கள் கலகலவென சிரித்தனர்.

**7. திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?** பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019

(i) 'திருவளர் செல்வன்' சரியான தொடர் ஆகும்.

(ii) 'திருவளர் செல்வன்' என்பது வினைத்தொகை. வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# மொழியை ஆள்வோம்

## சான்றோர் சித்திரம்


பரிதிமாற் கலைஞர் (1870 – 1903)

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்து உன்னால் செயப்படுபொருள் இல்லை, ஆதலால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர்தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமேதரனாரால் போற்றப்பட்ட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப்.ஏ (F.A - First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும். உயர்தனிச் செம்மொழி' என்னும் கட்டுரையிலிருந்து, "பல மொழிகட்குத் தலைமையும், மிக்க மேதகைமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது. தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி. ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழியாம்."

இயல் 3

### வினாக்கள் :

**1. தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்று தன் பேச்சின் மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் .................. .**

அ) பரிதிமாற் கலைஞர் ஆ) மறைமலை அடிகள்
இ) சி.இலக்குவனார் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை: அ) பரிதிமாற் கலைஞர்**

**2. பரிதிமாற் கலைஞர் கீழ்க்காணும் எந்த மன்னரிடம் கல்விக்காக உதவித்தொகையைப் பெற்றார்?**

அ) விஜய ரகுநாத சேதுபதி ஆ) பாஸ்கர சேதுபதி
இ) உடையான் சேதுபதி ஈ) பவானி சங்கர சேதுபதி

**விடை: ஆ) பாஸ்கர சேதுபதி**

**3. "திராவிட சாஸ்திரி" என்ற பட்டத்தை பரிதிமாற் கலைஞருக்கு வழங்கியவர் .................. .**

அ) ந.மு.வேங்கடசாமி ஆ) இரா.பி.சேயதுப்பிள்ளை
இ) சி.வை.தாமோதரனார் ஈ) திரு.வி.கல்யாண சுந்தரனார்

**விடை: இ) சி.வை.தாமோதரனார்**

**4. பரிதிமாற் கலைஞர், மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து நடத்திய இதழ் .................. .**

அ) ஞானசாகரம் ஆ) ஞானபோதினி
இ) நவசக்தி ஈ) தேசபக்தன்

**விடை: ஆ) ஞானபோதினி**

**5. 'ஞான போதினி' என்பது,**

அ) வரலாற்று இதழ் ஆ) கவிதை இதழ்
இ) கட்டுரை இதழ் ஈ) அறிவியல் இதழ்

**விடை: ஈ) அறிவியல் இதழ்**



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com

Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

செய்யுள்

## நூற்குறிப்பு

(i) இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

(ii) **பெயர்க்காரணம் :** திரு + குறள் = திருக்குறள். சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் ஆதலால் இப்பெயர் பெற்றது. திரு – சிறப்பு அடைமொழி; குறள் – இரண்டடி வெண்பா. 'திரு' என்ற அடைமொழி பாட்டை உணர்த்தாமல் நூலை உணர்த்துவதால் இது **அடையடுத்த கருவியாகு பெயர்** ஆகும்.

(iii) **வேறு பெயர்கள் :** முப்பால், உத்தரவேதம், தெய்வ நூல், உலகப் பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழர் திருமறை, ஈரடி நூல், வான்மறை, அறவிலக்கியம்.

(iv) **மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :** ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் உள்ளிட்ட உலக மொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(v) **நூலின் சிறப்பு :** மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றுவதற்கு முன்னரே மனித வாழ்வின் மேன்மைகளையும் வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக் காட்டியது இந்நூலாகும்.

(vi) **நூலின் பெருமையை விளக்கும் பழமொழிகள் :**
"ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"
"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"
இவற்றுள் 'நால்' என்பது நாலடியாரையும் 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கின்றன.

(vii) **திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் :** தருமர், மணக்குடவர், நச்சர், தாமத்தர், பரிதி, பரிமேலழகர், திருமலையார், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர்.

## நூலமைப்பு

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற முப்பெரும் பிரிவுகளையும் 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது.

| பால் | அதிகாரங்களின் எண்ணிக்கை | இயல்களின் எண்ணிக்கை | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் (04)<br>இல்லறவியல் (20)<br>துறவறவியல் (13)<br>ஊழியல் (01) |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் (25)<br>அமைச்சு இயல் (32)<br>ஒழிபியல் (13) |
| இன்பம் | 25 | 2 | களவியல் (07)<br>கற்பியல் (18) |
| **மொத்தம்** | 133 | 09 | |

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** – திருவள்ளுவர்
**பெற்றோர்** – ஆதி, பகவன்
**ஊர்** – சென்னை மயிலாப்பூர்

இயல் 3


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com



**செய்ந்நன்றி அறிதல் :**

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது. உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும். இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும்.

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர். ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது. எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; ஒருவர் செய்த உதவியை மறந்து விட்டவர்க்கு உய்வே இல்லை.

**முடிவுரை :**

செய்ந்நன்றி அறிதலை திருவள்ளுவர் உணர்ந்து பிறர் அறியும் வண்ணம் உரைத்துள்ளார். அவர்தம் கருத்துகளை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடந்தால் இவ்வுலகம் நம்மை மதிக்கும்.

**2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.** பிடிஏ–1

**முன்னுரை :**

சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி நின்று தெரிந்து தெளிவோம்.

**வெகுளாமை எனும் அதிகாரம் உணர்த்தும் உண்மைகள் :**

தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்; செல்லுபடியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன? தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விடவேண்டும்.


முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை. ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்; காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும். சினம், தன்னைச் சேர்த்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

**முடிவுரை :**

திருவள்ளுவர் வெகுளாமை எனும் அதிகாரத்தின் வாயிலாக, சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைபடுத்தும் என்னும் கருத்தை வலியுறுத்துகிறார்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. படத்துக்கு பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடி.** அரையாண்டுத் தேர்வு 2019



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

ஈ) காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

**விடை: அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. திருக்குறள் ………… நூல்களில் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) சிற்றிலக்கிய

**விடை: இ) பதினெண்கீழ்க்கணக்கு**





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

செல்வத்துள் எல்லாம் தலை - கல்வி

# இயல் 4 பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

- உ.வே.சாமிநாதர் உரைநடை உலகம்

## பாடப்பகுதி

சுதேசமித்திரன் வார இதழில் வெளியான உ.வே.சா. அவர்களின் கட்டுரை பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இக்கட்டுரை **உயிர்மீட்சி** என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்ட உ.வே.சா. அவர்களின் இலக்கிய கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

## பாடச் சுருக்கம்

பண்டைய தமிழகத்தில் உபாத்தியாரின் (ஆசிரியர்) வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அது குருகுலம் எனப்பட்டது. உபாத்தியாரை **கணக்காயர்** என்றும், நூலை **கணக்கு** என்றும் அழைத்தார்கள்.

**மன்றங்கள்:** ஊர்தோறும் பெரிய மரத்தடியில் இருந்த மேடை, மன்றம் என்றும் **அம்பலம்** என்றும் அழைக்கப்பட்டது. அதுவே பின்னாளில் திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது.

**பள்ளிகள்:** மரத்தடியில் இருந்த பள்ளிகள் நாளடைவில் குடிசைகளாக மாறின. மடங்களிலும் பாடசாலைகள் நடைபெற்றன. 'பள்ளி' என்பது ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயராக வழங்கப்பெற்றது.

### திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்த அண்ணாவிகள் (ஆளுமைகள்):

| ஆளுமையின் பெயர் | பயின்ற திண்ணைப் பள்ளிக்கூடம் /வாத்தியார் | ஆளுமையின் சிறப்புகள் |
|---|---|---|
| வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் | திருநெல்வேலி தெற்குத் தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம் (4 ஆண்டுகள்) | மில்டனின் **சுவர்க்க நீக்கம்** என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தவர், உயிரின மருத்துவர் |
| டாக்டர் மா. இராசமாணிக்கனார் | மௌனகுரு (வாத்தியார்) | வரலாற்று ஆய்வாளர், தமிழறிஞர் |
| பின்னத்தூர் நாராயணசாமி | பின்னத்தூர் அருகேயுள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடம் | நற்றிணை நூலின் உரையாசிரியர் |
| நாவலர் சோமசுந்தர பாரதியார் | எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடம் | சுப்பிரமணிய பாரதியின் நண்பர், வழக்குரைஞர், தமிழறிஞர் |
| வேங்கடசாமி | வல்லம் குருசாமி வாத்தியார் | சிலப்பதிகார உரையாசிரியர் |
| டாக்டர் வ.சுப.மாணிக்கம் | மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம் | மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்தவர் |

### வித்தியாரம்பம்:

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் (வயதில்) வித்தியாப்பியாசம் செய்யும்போது பெற்றோர், பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக கொடுத்துவிடுவார்கள்.

பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் நாள், விசேட நாளாகக் கொண்டாடப்படும். ஏட்டின் மீது மஞ்சள் பூசி, பூசித்து மாணவனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.

**முறை வைப்பு என்று எதனைக் கூறுவார்கள்?** பிடிஏ–4

**முறைவைப்பு:** உபாத்தியார் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க, மாணாக்கர்கள் அதனைப் பின்பற்றிச் சொல்லும் முறை 'முறை வைப்பு' எனப்பட்டது. உபாத்தியருக்குப் பதில் சிலசமயம் **சட்டாம் பிள்ளை** சொல்லிக் கொடுப்பார்.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


**8. கல்வி கற்பதற்கான எல்லையை திருவள்ளுவர் எங்ஙனம் வகுத்துள்ளார்?**

'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு' என்ற குறளின் மூலம் திருவள்ளுவர், ஒருவன் இறக்கும் வரை படித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று கல்வியின் எல்லையை வகுத்துள்ளார்.

**9. நாடு விட்டு நாடு சென்று கல்வி பயிலும் முறை குறித்து எழுதுக.**

**ஓதற் பிரிவு:** இல்லறம் நடத்தும் காலத்தில் வேறு நாட்டுக்குச் சென்று நம் நாட்டவர் கல்வி பயின்றதை தொல்காப்பியம் ஓதற்பிரிவு என்று கூறுகிறது.

**முதலாம் இராஜராஜ சோழன் காலத்து தஞ்சை சாஸனம்:** இதன் மூலம் தஞ்சாவூரில் இருந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரிடத்தில் அயல்நாட்டைச் சேர்ந்த பலர் வந்து கல்வி கற்றதை அறிய முடிகிறது.

வங்காளத்தில் உள்ள 'நவத் வீபம்' என்ற ஊரிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கல்வி பயில பலர் வந்தனர். திருவாவடுதுறை மடம், தருமபுர மடம் முதலியன பல வருடங்களாக தமிழ்க்கல்லூரியாகவும், வடமொழிக் கல்லூரியாகவும் செயல்பட்டன.

☆ ☆ ☆

செல்வத்துள் எல்லாம் தலை - கல்வி

# இயல் 4 இதில் வெற்றிபெற

- சுரதா

கவிதைப்பேழை



## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரதா |
| இயற்பெயர் | : | தி. இராசகோபாலன் |
| சிறப்புப்பெயர் | : | உவமைக் கவிஞர் |
| பிறந்த ஊர் | : | பழையனூர் (நாகை மாவட்டம்) |
| காலம் | : | 23.11.1921 முதல் 19.06.2006 வரை |
| பெற்றோர் | : | திருவேங்கடம் – செண்பகம் |
| பெயர்க்காரணம் | : | பாவேந்தர் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரை 'சுப்புரத்தின தாசன்' என்று மாற்றிக் கொண்டார். அதன் சுருக்கமே 'சுரதா' ஆகும். |
| இயற்றிய நூல்கள் | : | தேன் மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள். |
| விருதுகள் | : | தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது |
| நடத்திய இதழ்கள் | : | விண்மீன், இலக்கியம், ஊர்வலம், காவியம். 'காவியம்' இதழ் முழுக்க கவிதைகளையே கொண்டு வெளிவந்தது. |
| சிறப்பு | : | மரபுக் கவிதைகளையே இவர் எழுதினார். இவர் எழுதிய 'தேன் மழை' என்ற நூல் தமிழக அரசின் 'தமிழ் வளர்ச்சித் துறை' வழங்கிய சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றது. |

## பாடப்பகுதி

கவிஞர் சுரதா இயற்றிய, 'துறைமுகம்' என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'இதில் வெற்றிபெற' என்ற கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

ஆசிரியப்பா மூன்று வகைப்படும். அவை 1. ஆசிரியத் தாழிசை, 2. ஆசிரியத் துறை, 3. ஆசிரிய விருத்தம்.

**ஆசிரிய விருத்தம் :** நான்கு அடிகள் கொண்டதாக, ஒவ்வோர் அடியிலும் அறுசீர்கள் கொண்டதாக நம்முள் அளவொத்து வருவது ஆசிரிய விருத்தம் ஆகும். எட்டு சீர்களைப் பெற்று வந்தால் 'எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்' எனப்படும்.

## கற்பவை கற்றபின்

1. **பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற உவமைச் சொற்களைத் தொகுக்க. இவை கருத்தை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பது குறித்துக் குழுவாக உரையாடுக.**

ஒரு பொருளை விளக்கவோ, அழகுபடுத்தவோ அதற்கு இயைபாக கூறப்படும் மற்றொரு பொருளை உவமைச் சொல் எனலாம்.

| | |
|---|---|
| (i) மதிமுகம் | (ii) பவளவாய் |
| (iii) தாமரைமுகம் | (iv) வேல்விழி |
| (v) மலர்க்கண் | (vi) வில்புருவம் |
| (vii) மலர்ப்பாதம் | (viii) முத்துப்பல் |
| (ix) மலரடி | (x) பூவிரல் |

குழு 1 : **மதிமுகம்** என்றால் நிலவு போன்ற முகத்தை உடையவள் என்று பொருள். ஒரு பெண்ணுடைய முகமானது நிலவு போன்று உள்ளது என்பதால் அந்த பெண்ணை அந்தளவிற்கு அழகாக வருணனை செய்வதால் பொருள் எளிதாக வெளிப்படுகிறது.

குழு 2 : "**வேல்விழி**" : வேல் போன்ற கூர்மையான விழியை உடையவள் அவள். அதாவது அந்தப் பெண்ணின் பார்வையானது வேல் போன்ற கூர்மையான பார்வையை கொண்டுள்ளது என்ற கருத்தை வெளிப்படுத்துவதற்கு மிகவும் எளிமையாக இருக்கிறது.

குழு 1 : **வில்புருவம் :** வில் போன்ற வடிவம் கொண்ட புருவத்தை உடையவள் என்று தன்னுடைய கருத்தை ஒரே வார்த்தையில் அழகாக வெளிப்படுத்தலாம்.

குழு 2 : **மலர்ப்பாதம் :** அவளுடைய பாதமானது மலர் போன்று மென்மையானது என்று தன்னுடைய கருத்தை எளிதாக வெளிப்படுத்த உதவுகிறது. நாம் ஒருவரை எளியதாக வருணனை செய்யவும், கருத்தை வெளிப்படுத்தவும் உவமைச் சொற்கள் மிகவும் பயன்படுகின்றன எனலாம்.

நன்றி! வணக்கம்.

## பிடிஏ மாதிரி வினா-விடை

1. **பூவில் தங்குவது எது? புலவர் பாடலில் தங்குவது எது?** பிடிஏ–3

பூவில் தங்குவது – வண்டு, புலவர் பாடலில் தங்குவது – புகழ்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **மக்கள் பேசும் எளிய சொற்களை தொடர்களாக அமைப்பது ..................**
அ) தூக்கு ஆ) கிளிமூக்கு இ) சட்டம் ஈ) அம்பலம் **விடை: அ) உரைநடை**

2. **சுரதாவின் ............ என்னும் கவிதைத் தொகுப்பில் 'இதில் வெற்றி பெற' என்னும் கவிதை இடம் பெற்றுள்ளது.**
அ) தேன்மழை ஆ) அமுதும் தேனும்
இ) துறைமுகம் ஈ) மங்கையர்க்கரசி **விடை: இ) துறைமுகம்**

3. **சுரதாவின் இயற்பெயர்**
அ) இராசகோபாலன் ஆ) வேங்கடராமன்
இ) வேதாசலம் ஈ) துரைராசு **விடை: அ) இராசகோபாலன்**





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


(vi) இதுவரை, வரும் போகும், ஒளிச்சேர்க்கை ஆகியவை இவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

(vii) 'தாவே தே ஜிங்' என்ற சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

(viii) தனது புதுக்கவிதைகளில் அங்கத உத்தியை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்.

(ix) இவரது புனைப் பெயர்கள் வே.மாலி, செல்வம் ஆகியனவாகும்.

(x) விளக்கு இலக்கிய விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது, ஆசான் கவிதை விருது, சிற்பி விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**3.** **“குதிரை வரையக் குதிரையே**
**வராது; கழுதையும் வரலாம்**

**இரண்டும் கலக்கலாம்” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :** கவிஞர் சி.மணியின் 'இடையீடு' என்ற கவிதையில் இந்த அடிகள் இடம்பெற்றுள்ளன.

**பொருள் :** குதிரை உருவத்தை ஓவியமாக வரைந்தால், குதிரை உருவம் வராமல் கழுதை உருவம் வரலாம் அல்லது குதிரை, கழுதை இரண்டும் கலந்த தோற்றம் வரலாம்.

**விளக்கம் :** ஒரு கவிதையை இயற்றும் போது அமையும் சொற்கள் நம்முடைய எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்தாமல் போகலாம். அமையும் சொற்கள் வேறு வடிவமாக அமையலாம். நம்முடைய எண்ணங்கள் மற்றும் வேறு வடிவம் ஆகிய இரண்டும் கலந்த சொற்களாகவும் அமைந்து விடலாம் என்று கவிஞர் கூறுகிறார்.

☆ ☆ ☆



**செல்வத்துள் எல்லாம் தலை – கல்வி**

**இயல் 4**

# புறநானூறு

– ஔவையார் **கவிதைப்பேழை**

## நூற்குறிப்பு

**பெயர்க்காரணம் :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய தொகை நூலாகும்.

- எட்டுத்தொகை நூல்களுள் இது ஒரு நூலாகும். இந்நூலில் உள்ள பாடல்கள், பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டதாகும்.
- இந்நூல் கி.பி 2-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.
- இந்நூலில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் உள்ளன.
- இந்நூலில் உள்ள சில பாடல்களை மேல்நாட்டு அறிஞரான ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.
- ஏட்டுச் சுவடிகளில் இருந்த இந்நூலை முறையாக அச்சில் ஏற்றி பதிப்பித்த பெருமை உ.வே. சாமிநாதர் அவர்களை சாரும். பதிப்பித்த ஆண்டு 1894 ஆகும்.
- இந்நூலின் வேறு பெயர்கள் புறம், புறப்பாட்டு.
- தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை இந்நூல் விளக்கமாக எடுத்துரைக்கிறது.

## ஆசிரியர் குறிப்பு



- இப்பாடலை இயற்றியவர் ஔவையார்.
- சிற்றரசனான அதியமான் நெடுமான் அஞ்சியிடம் நட்பு பாராட்டியவர். அதியமானுக்காக தூது சென்றவர். அதியமானின் அரசவைப் புலவராக இருந்து அரும் பணியாற்றியவர்.
- சங்கத்தொகை நூல்களில் நமக்குக் கிடைத்துள்ள இவரது பாடல்களாவன: அகநானூறு – 4, குறுந்தொகை – 15, நற்றினை – 7, புறநானூறு – 33. மொத்தம் 59 பாடல்கள் கிடைத்துள்ளன.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**5.** **"மரங்கொல் தச்சன் கைவல் சிறா அர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே" என்ற அடிகளில் பயின்று வந்துள்ள உவமைநயத்தை விளக்குக.**

**உவமை** : மரம் வெட்டும் தச்சனின், தொழிலில் வல்லமையுடைய பிள்ளைகள், கோடாரியுடன் காட்டுக்குச் சென்றால், அவர்கள் வெட்டுவதற்கு மரம் உறுதியாகக் கிடைக்கும்.

**உவமேயம்** : கலைத் தொழிலில் வல்லமையுடைய புலவர்களுக்கு (பரிசிலர்) இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிடைக்கும்.

**பொருத்தம்** :

| உவமை | உவமேயம் |
|---|---|
| பரிசிலர் | சிறுவர் |
| கல்வி | கோடாரி |
| எத்திசை | காடு |
| உணவு | மரங்கள் |

**உவம உருபு** : அற்று

☆ ☆ ☆

செல்வத்துள் எல்லாம் தலை - கல்வி

# இயல் 4 பாதுகாப்பாய் ஒரு பயணம்

விரிவானம்

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1.** **சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது** பிடிஏ–5

அ) புயல் அபாயக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்
இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்

**விடை: அ) புயல் அபாயக் குறியீடுகள்**

### நெடுவினா

**1.** **சாலை விபத்து ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

**சாலை விபத்து ஏற்படுவதற்கான காரணங்கள்:**

(i) தலைக்கவசம் அணியாமல் செல்வது
(ii) இரண்டு பேருக்கு மேல் பயணிப்பது
(iii) கைபேசியில் பேசிக்கொண்டே செல்வது
(iv) சாலையில் ஊர்தியை குறுக்கும் நெடுக்கமாக இயக்குவது
(v) போட்டி, பந்தயம் என்ற பெயர்களில் சாலைகளில் உச்சபட்ச வேகத்தில் செல்வது
(vi) காதணி கேட்பிகளைப் பொருத்திக் கொண்டு ஊர்திகளை ஓட்டுவது.
(vii) அவசரமாகச் செல்வது
(viii) ஓட்டுநரின் கவனக் குறைவு
(ix) போதிய பயிற்சியின்மை
(x) தட்பவெப்பநிலை மற்றும் இயந்திரக் கோளாறு
(xi) மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்வது.
(xii) இருப்புப்பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது.
(xiii) மது அருந்திவிட்டு ஊர்தி ஓட்டுவதால் மிகுதியான விபத்துகள் ஏற்படுகின்றன.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2.** **எதிர்பாராத சூழலில் ஏற்படும் சாலைவிபத்தையும், அவற்றைத் தடுக்கும் முறைகளையும் உள்ளடக்கிய நாடகம் ஒன்றை நடத்திக் காட்டுக.**

**காட்சி – 1**

**இடம் :** வகுப்பறை

**கதைமாந்தர்கள் :** செல்வம், அய்யனார், பாண்டியன், சூர்யா.

**செல்வம்** : அய்யனாரு, வண்டிய எடுக்காத. உனக்கு சரியா ஓட்ட தெரியாது. பதினெட்டு வயது ஆனாதான் வண்டி ஓட்டணும்.

**அய்யனார்** : எனக்கு வண்டி ஓட்டத் தெரியும்னு சொல்லிக் கொண்டே வண்டியே ஓட்டிச் செல்கிறான்.

(அரை மணி நேரம் கழித்து)

**பாண்டியன், சூர்யா** : அய்யோ செல்வம், அய்யோ...

**செல்வம்** : என்னடா ஆச்சி என்னன்னு சொல்லுங்கடா...

**பாண்டியன்** : அய்யனாரு வண்டியில இருந்து விழுந்துட்டான். தலையில பலமா அடிபட்டு இரத்தம் வருது. ஆஸ்பிட்டலுக்கு ஏத்திக்கிட்டு போறாங்க.

**செல்வம்** : நான் அப்பவே! சொன்னேன், வண்டிய எடுக்காதடானு கேட்டானா.

**காட்சி – 2**

**இடம் :** வகுப்பறை

**கதைமாந்தர்கள் :** செல்வம், காந்தி, கருணா

**கருணா** : ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுவது மிகப் பெரிய தவறு.

**காந்தி** : ஆமாம், உண்மைதான். அதேபோல் வாகனம் ஓட்டும்போது தலையில் தலைகவசம் அணிந்தால் உயிர் இழப்பைத் தடுக்க முடியும்.

**செல்வம்** : ஆமாம். நீங்கள் சொல்வது உண்மைதான் அண்ணா!

**கருணா** : மது அருந்தி விட்டு, வாகனம் ஓட்டக்கூடாது என்ற பதாகைகளைக் காண்பிக்கிறார்.

**காந்தி** : தலைக்கவசம் உயிர் கவசம்! மறக்காமல் வாகனம் ஓட்டும்போது அணிந்து கொள்ளுங்கள்.

**கருணா** : ஓட்டாதே! வேகமாக ஓட்டாதே! மீறாதே! மீறாதே! சாலை விதிமுறைகளை மீறாதே! என்றுக் கூறிக் கொண்டே பதாகைகளை காண்பிக்கிறார்.

**செல்வம்** : நன்றாக புரிந்தது அண்ணா! நன்றி மிக்க மகிழ்ச்சி!

**(நாடகம் நிறைவடைகிறது)**

☆ ☆ ☆



www.surabooks.com



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2. வெண்பா, 'வன்பா' என்று ஏன் அழைக்கப்படுகிறது?**

ஏனைய பாக்களை விட வரையறுத்த இலக்கணக் கட்டுக்கோப்பு உடையது வெண்பா, எனவே இது 'வன்பா' என அழைக்கப்படுகிறது.

**3. வெண்பாவிற்கான தளை எது? அதன் வகைகள் யாவை?**

வெண்பாவிற்கான தளை வெண்டளை ஆகும். இது இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என இருவகைப்படும்.

**4. 'தளைத்தல்' என்பதன் பொருள் யாது?**

'தளைத்தல்' என்றால் 'கட்டுதல்' அல்லது 'பிணித்தல்' என்பது பொருளாகும்.

**5. வெண்பாவிற்குரிய எளிய தளை இலக்கணத்தைக் கூறுக.**

(i) மா முன் நிரை (ii) விளம் முன் நேர் (iii) காய் முன் நேர்

**6. வெண்பாவில் வெண்டளை அமைந்து வரும் பாங்கினை எழுதுக.**

| | |
|---|---|
| மா முன் நிரை | இயற்சீர் வெண்டளை |
| விளம் முன் நேர் | |
| காய் முன் நேர் | வெண்சீர் வெண்டளை |

**7. மா, விளம், காய் ஆகிய சீர்களை விளக்குக.**

| | | |
|---|---|---|
| மா | தேமா, புளிமா | ஈரசைச் சீர் |
| விளம் | கூவிளம், கருவிளம் | ஈரசைச் சீர் |
| காய் | தேமாங்காய், புளிமாங்காய்<br>கூவிளங்காய், கருவிளங்காய் | மூவசைச் சீர் |

**8. வெண்பாவின் ஈற்றுச்சீரில் வாய்பாடுகள் அமையும் முறை குறித்து எழுதுக.**

| | |
|---|---|
| ஈற்று அயற்சீர் – மாச்சீர் | மலர் (அ) பிறப்பு |
| ஈற்று அயற்சீர் – விளச்சீர் (அ) காய்ச்சீர் | நாள் (அ) காசு |

**9. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**வெண்பா எழு வகைப்படும். அவை**

(i) குறள் வெண்பா, (ii) நேரிசை வெண்பா (iii) இன்னிசை வெண்பா
(iv) நேரிசைச் சிந்தியல் வெண்பா (v) இன்னிசைச் சிந்தியல் வெண்பா (vi) பஃறொடை வெண்பா
(vii) கலிவெண்பா

**10. தனிச்சீர் குறித்து எழுதுக.**

இரண்டு நாற்சீர்களுக்கு இடையில் இரண்டாவது அடியில் மூச்சீர்களுக்கு அடுத்து, ஒரு சிறு கோடிட்டு தனியாக அமையும் சீர் தனிச்சீர் ஆகும். பாடலின் முதற்சீருக்கு உரிய எதுகை தனிச் சீரில் அமைந்திருக்கும்.

**11. நேரிசை வெண்பாவில் சீர்கள் அமைந்திருக்கும் முறைப் பற்றி எழுதுக.**

**நேரிசை வெண்பா:**

| | |
|---|---|
| முதலாவது அடி | நான்கு சீர்கள் |
| இரண்டாவது அடி | மூன்று சீர்கள் – தனிச் சீர் |
| மூன்றாவது அடி | நான்கு சீர்கள் |
| நான்காவது அடி | மூன்று சீர்கள் |




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

## அறிவை விரிவு செய்

1. நீங்களும் கவிபாடலாம் – கி.வா. ஜகந்நாதன்
2. துறைமுகம் – சுரதா
3. இதுவரை – சி. மணி
4. படைப்புக்கலை – மு. சுதந்திரமுத்து
5. கவிஞராக – அ.கி. பரந்தாமனார்

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### எவ்வகை வாக்கிய என்பதைக் கண்டறிக.

1. **ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?** பிடிஏ–3

   வினா வாக்கியம்.

2. **நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.** பிடிஏ–3

   செய்தி வாக்கியம்.

### கீழ்க்காணும் தொடர்களில் பயின்று வரும் சுவைகளை கண்டறிக.

1. **தென்னிந்தியாவிலேயே முதல் தொடர்வண்டி நிலையம் அமைந்த இடம் இராயபுரமே.** பிடிஏ–3

   பெருமிதம்.

2. **என்னே! யோகாசனத்தின் சிறப்புகள்!** பிடிஏ–3

   மருட்கை.

☆ ☆ ☆




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

நாடென்ப நாட்டின் தலை – நாகரிகம்,தொழில், வணிகம்

# இயல் 5

# மதராசப்பட்டினம்

உரைநடை உலகம்

## பாடச் சுருக்கம்

'தென்னிந்தியாவின் நுழைவு வாயில்' எனப்படும் சென்னை, இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகரமாகவும் விளங்குகிறது.

### சென்னையின் தொன்மை:

| தொல்லியல் சான்றுகள் | |
|---|---|
| சென்னைக்கு அருகிலுள்ள குடியம், அத்திரம்பாக்கம் | இப்பகுதிகளில் நிலவிய மனித நாகரிகத்தின் பழமை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. |
| பல்லாவரத்தில் கல்கோடாரி கண்டுபிடிக்கப்பட்டது. | இந்திய அகழ்வாய்வுத் துறையில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது |
| கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் பகுதிகளில் தொல் பழங்கால எச்சங்கள் கிடைத்துள்ளன. | இப்பகுதியின் பழமையை இந்த ஆய்வுகள் உணர்த்துகின்றன. |
| மயிலாப்பூர் தொன்மை வாய்ந்தது. | கி.பி.2–ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவர் இதனை 'மல்லியர்பா' என்ற துறைமுகமாகச் சுட்டிகாட்டியுள்ளார். |
| திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் | ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்கள். இலக்கியங்களில் இக்கோயில்கள் குறித்த பாடல்கள் உள்ளன. |
| முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னன் பல்லாவரத்தில் அமைத்த குடைவரைக் கோயில் | இங்குள்ள கல்வெட்டு, சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு. |
| திருவல்லிக்கேணியில் நந்திவர்மன் கல்வெட்டு கிடைத்துள்ளது. | பல்லவர் ஆட்சியின் சிறப்பைக் கூறுகிறது. |
| சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு), நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, மாதவரம், கோயம்பேடு, தாம்பரம் போன்ற பகுதிகள். | கிழக்கிந்திய நிறுவனம் வருவதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே 12–13 –ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்ற கிராமங்களாக இருந்துள்ளன. |

### அயலவர் குடியேற்றம்:

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக்கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னையின் தொடக்கமாகும்.

**சான்று:**

கி.பி 1647–இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம் "தொண்ட மண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்"

போர்த்துகீசியர், டச்சுக்காரர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரும், சென்னையில் வணிகத்தை மேற்கொண்டனர்.

கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் **பிரான்சிஸ் டே** என்பவர் மயிலாப்பூருக்கு வடக்கே இருந்த பகுதியை ஆங்கிலேயர் குடியேற்றத்திற்கான இடமாகத் தேர்ந்தெடுத்தார். அவர், விஜயநகர ஆட்சியின் உள்ளூர் ஆளுநர்களாக இருந்த சென்னப்பரின் இருமகன்களிடமிருந்து அந்த இடத்தை வாங்கினார்.

**தெரிந்து தெளிவோம்**

**கூவம் நதி**

வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிக்கரையில் குளித்து விட்டு அருகில் உள்ள கோயிலுக்குச் சென்று வழிபட்டதாக அவரது நாட்குறிப்பில் உள்ளது.

**பக்கிங்காம் கால்வாய்**

பாரதிதாசன், தனது நண்பர்களான மயிலை சீனி. வேங்கடசாமி, ப.ஜீவானந்தம் உள்ளிட்டவர்களுடன் இக்கால்வாயில் பயணம் செய்ததாக 'மாவலிபுரச் செலவு' என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


இயல் 5

நாடென்ப நாட்டின் தலை - நாகரிகம்,தொழில், வணிகம்

# தெய்வமணிமாலை

- இராமலிங்க அடிகள்

கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

திரு + அருள் + பா - திருவருட்பா

இறைவனின் திருவருளை வேண்டி பாடிய பாடல்கள் என்பது இதன் பொருளாகும். இந்நூலில் 5818 பாடல்கள் உள்ளன. இந்நூலின் பிரிவு 'திருமுறை' என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் ஆறு திருமுறைகள் உள்ளன.

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : இராமலிங்க அடிகள்

**பெற்றோர்** : இராமையா - சின்னம்மையார்

**ஊர்** : கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்திலுள்ள மருதூர்

**பிறப்பு** : 05.10.1823

**சிறப்புப் பெயர்கள்** : வள்ளலார், பசிப்பிணி மருத்துவர்

**சிறப்புகள்** : சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவர். பசிப்பிணி போக்கியவர், சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் நிறைந்தவர். ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காகவும் உண்மை நெறி ஓங்கவும் உழைத்தவர்; வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர்.

**இவருடைய பாடல்களின் சிறப்பு :** ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மை உடையவை

**இவருடைய உரைநடை நூல்கள்:** மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்

## பாடப்பகுதி

திருவருட்பாவின் ஐந்தாம் திருமுறையில் உள்ள 'தெய்வமணிமாலை' என்ற பாடல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இப்பாடல் சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டி பாடப்பட்ட பாடலாகும்.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| **ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற<br>உத்தமர்தம் உறவுவேண்டும்<br>உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்<br>உறவுகல வாமைவேண்டும்** | ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிற உத்தமர்களின் உறவு எனக்கு வேண்டும். மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியில் அதற்கு மாறுபாடாக பேசுபவர்களின் உறவு என்னைப் பற்றாதவாறு இருக்க வேண்டும். |

**சொல்லும் பொருளும் :**

ஒருமையுடன் - ஒருநெறிப்பட்ட மனத்துடன்
நினது திருமலரடி - உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை
நினைக்கின்ற - எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும் - உத்தமர்களுடைய உறவு எனக்கு வேண்டும்
உள்ளொன்று வைத்து - மனத்தில் ஒன்றை நினைத்துக் கொண்டு
புறம்பொன்று பேசுவார் - வெளியே அதற்கு மாறுபாடாக பேசுபவர்களின்
உறவு கலவாமை வேண்டும் - உறவு என்னைச் சேராமல் இருக்க வேண்டும்

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. மலரடி - உவமைத்தொகை | 3. வைத்து - வினையெச்சம் |
| 2. நினைக்கின்ற - பெயரெச்சம் | |


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**7. இராமலிங்க அடிகள் எதற்காகவெல்லாம் பாடுபட்டார்?**

(i) இவ்வுலகில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்க வேண்டும்.
(ii) உண்மைநெறி ஓங்க வேண்டும்
(iii) பசிப்பிணி நீங்க வேண்டும் ஆகியவற்றிற்காக இராமலிங்க அடிகளார் பாடுபட்டார்.

**8. இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் எத்தன்மை உடையவை?**

இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் ஊனை (உடலை) உருக்கி, உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை.

**9. எத்தகைய வாழ்வு உடையவனாக தான் வாழ வேண்டும் என்று இறைவனிடம் வள்ளலார் வேண்டுகிறார்?**

சிறந்த அறிவும், இறைவனுடைய கருணையாகிய நிதியும், நோயற்ற வாழ்வும் உடையவனாக தான் வாழவேண்டும் என வள்ளலார் இறைவனிடம் வேண்டுகிறார்.

**10. கந்தக்கோட்டத்துக் கந்தவேளை வள்ளலார் எவ்வாறு புகழ்ந்து உரைத்துள்ளார்?**

குளிர்ந்த முகத் தோற்றத்தை உடைய தூய மாணிக்க மணி போன்றவன்; அம் மணிகளுள் அருள் நிறைந்த சைவ மணியானவன் என்று வள்ளலார் புகழ்ந்து உரைத்துள்ளார்.

## சிறுவினா

**1. இராமலிங்க அடிகளார் – சிறுகுறிப்பு வரைக.**

(i) சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் பிறந்தார்.
(ii) சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார்.
(iii) சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தார்.
(iv) பசிப்பிணி நீக்கினார்.
(v) இவ்வுலகில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும், உண்மை நெறி ஓங்கவும் உழைத்தார்.
(vi) 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார்'
(vii) திருவருட்பா என்ற நூல் இவரால் இயற்றப்பட்டது.
(viii) இவர் எழுதிய உரைநடை நூல்கள் 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவையாகும்.

**2. எவையெல்லாம் தன்னைச் சேராதிருக்க வேண்டும் என்று இராமலிங்க அடிகளார் கூறுகிறார்?**

(i) உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு தன்னைப் பற்றாதிருக்க வேண்டும்.
(ii) பொய் பேசாதிருக்க வேண்டும்.
(iii) மதமான பேய் தன்னை அணுகாதிருக்க வேண்டும்.
(iv) துறவுக்கு எதிரான பெண்ணாசையை, தான் மறக்க வேண்டும்.

**3. இராமலிங்க அடிகள், எவையெல்லாம் தனக்கு வேண்டும் என இறைவனிடம் வேண்டுகிறார்?**

(i) ஒரு நெறிப்பட்ட மனத்துடன் இறைவனுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்.
(ii) பெருமை சான்ற இறைவனின் புகழையே தான் எப்பொழுதும் பேச வேண்டும்.
(iii) சிறந்த வாழ்வியல் நெறியை தான் பின்பற்றுவதற்கு இறைவன் அருள் வேண்டும்.
(iv) இறைவனை என்றும் மறக்காதிருக்க வேண்டும்.
(v) மதியும் (அறிவும்), இறைவனின் கருணையாகிய நிதியும், நோயற்ற வாழ்வும் உடையவனாக தான் இருக்க வேண்டும்.

☆ ☆ ☆




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

இயல் 5

நாடென்ப நாட்டின் தலை - நாகரிகம்,தொழில், வணிகம்

# தேவாரம்

- திருஞானசம்பந்தர் கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

தே + ஆரம் - தேவாரம். 'இறைவனுக்குப் பாமாலை' என்பது இதன் பொருளாகும். 'ஆரம்' என்றால் 'மாலை' ஆகும் என்று ஒருசாராா் கூறுகின்றனா்.

தே + வாரம் - தேவாரம். 'இறைவனிடத்தில் அன்பை விளைவிப்பது' என்பது இதன் பொருளாகும். 'வாரம்' என்றால் 'அன்பு' ஆகும் என்று ஒருசாரார் கூறுகின்றனர்.

இந்நூல் **'மூவர் தமிழ்'** என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூலில் உள்ள பாடல்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூன்று நாயன்மார்களால் பாடப்பெற்றது.

### பன்னிரு திருமுறைகள்:

10ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனின் ஆட்சியின் போது, சிதம்பரம் கோயிலில் கவனிப்பாரற்று கிடந்த திருமுறைகளை இராஜராஜ சோழனும் நம்பியாண்டார் நம்பியும் மீட்டெடுத்தனர். கரையானால் அரிக்கப்பட்டவை போக, எஞ்சியவற்றை **நம்பியாண்டார் நம்பி** 11 திருமுறைகளாகத் தொகுத்தார்.

12ஆம் திருமுறையாக சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் பிற்காலத்தில் 12ஆம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டது.

| திருமுறைகள் | ஆசிரியர்கள் | நூல் |
|---|---|---|
| முதல் மூன்று திருமுறைகள் | திருஞானசம்பந்தர் | தேவாரம் |
| 4,5,6 - ஆம் திருமுறைகள் | திருநாவுக்கரசர் | |
| 7 ஆம் திருமுறை | சுந்தரர் | |
| 8 ஆம் திருமுறை | மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் |
| 9 ஆம் திருமுறை | 9 பேர் பாடியுள்ளனர் | திருவிசைப்பா, திருப்பல்லாண்டு |
| 10 ஆம் திருமுறை | திருமூலர் | திருமந்திரம் |
| 11 ஆம் திருமுறை | 12 பேர் பாடியுள்ளனர் | சைவப் பிரபந்தமாலை (அ) சைவப் பிரபந்த திரட்டு |
| 12 ஆம் திருமுறை | சேக்கிழார் | பெரியபுராணம் |

## ஆசிரியர் குறிப்பு

**பெயர்** : திருஞானசம்பந்தர்
**இயற்பெயர்** : சம்பந்தன்
**பெற்றோர்** : சிவபாத இருதயர் - பகவதி அம்மையார்
**ஊர்** : சீர்காழி
**காலம்** : கி.பி.7-ஆம் நூற்றாண்டு
**இவருடைய பாடல்களின் சிறப்பு** : இசைப் பாடல்களாக அமைந்துள்ளன. சமுதாயத்தின் பொருளாதார, கலை, பண்பாட்டு நிலைகள், தமிழின் உயர்நிலை, இசை தத்துவம், சமயக் கோட்பாடுகள் காணப்படுகின்றன.
**சமகாலத்தவர்** : திருநாவுக்கரசர்
**சிறப்புப் பெயர்கள்** : ஆளுடையபிள்ளை, திராவிட சிசு

## பாடப்பகுதி

இரண்டாம் திருமுறையில் உள்ள 'திருமயிலாப்பூர்' பதிகத்தில் அமைந்துள்ள 7ஆவது பாடலாகும். ஒரு பதிகம் என்பது 10 பாடல்கள் கொண்டது.




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

இயல் 5

நாடென்ப நாட்டின் தலை – நாகரிகம்,தொழில், வணிகம்

# அகநானூறு

– அம்மூவனார் கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

- இது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகும்.
- **பெயர்க்காரணம் :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்ட நூல் ஆதலால், அகநானூறு என அழைக்கப்பெற்றது. இந்நூல் 'நெடுந்தொகை' எனவும் வழங்கப்பெறுகிறது.
- **அடிவரையறை :** 13 அடிகள் முதல் 31 அடிகள் வரை இந்நூலில் பாடல்கள் அமைந்துள்ளன.
- **நூல்அமைப்பு :** இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது.

| வ.எண் | பிரிவு | பாடல்கள் |
|---|---|---|
| 1. | களிற்றியானை நிரை | 120 (1 - 120) |
| 2. | மணிமிடை பவளம் | 180 (121 - 300) |
| 3. | நித்திலக்கோவை | 100 (301 - 400) |

- இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரிகுடி கிழார் மகனார் **உருத்திசன்மர்** ஆவார்.
- இந்நூலைத் தொகுப்பித்தவர் **பாண்டியன் உக்கிரப் பெருவழுதி** ஆவார்.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய **பெருந்தேவனார்** ஆவார்.
- இந்நூலில் உள்ள பாடல்களை பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த **145 புலவர்கள்** பாடியுள்ளனர்.
- சொல்ல வந்த கருத்தை **'உள்ளுறை'** வழியாக உரைப்பது அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பாகும்.

**நூலில் திணை வைப்பு முறை:**

| | |
|---|---|
| 1, 3, 5, 7, 9, ....... என்ற ஒற்றைப்படை எண்கள் கொண்ட பாடல்கள் | பாலைத் திணைப் பாடல்கள் |
| 2,8,12,18,22,28,.... என்ற எண்கள் கொண்ட பாடல்கள் | குறிஞ்சித் திணைப் பாடல்கள் |
| 4,14,24,34,...... என்ற எண்கள் கொண்ட பாடல்கள் | முல்லைத் திணைப் பாடல்கள் |
| 6,16,26,36,...... என்ற எண்கள் கொண்ட பாடல்கள் | மருதத் திணைப் பாடல்கள் |
| 10,20,30,40,50,...... என்ற எண்கள் கொண்ட பாடல்கள் | நெய்தல் திணைப் பாடல்கள் |

## ஆசிரியர் குறிப்பு

- **பெயர்** : அம்மூவனார்
- **காலம்** : சங்ககாலம்
- சங்கத் தொகை நூல்களில் இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 127

| | |
|---|---|
| அகநானூறு | 6 பாடல்கள் |
| ஐங்குறுநூறு | 100 பாடல்கள் |
| குறுந்தொகை | 11 பாடல்கள் |
| நற்றிணை | 10 பாடல்கள் |

- அகப்பாடல்கள் மட்டுமே பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர்.
- நெய்தல் திணைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர்.

### தெரிந்து தெளிவோம்

**உப்பங்கழி:** கடலுக்கு அருகிலுள்ள மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதி **உப்பங்கழி** எனப்படுகிறது. கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடம் **உப்பளம்** ஆகும்.

## பாடல்

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**
**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி**
**என்றூழ் விடர குன்றம் போகும்**
**கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2.** **உப்பங்கழி – குறிப்பு வரைக. (அ) உப்பளம் என்றால் என்ன?** பிடிஏ–2

(i) கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதி 'உப்பங்கழி' எனப்படும்.

(ii) கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட இடம் 'உப்பளம்' ஆகும்.

(iii) உப்பு விளையும் களம் 'அளம்' எனப்படும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1.** **அகநானூறு என்ற நூல் .................. நூல்களுள் ஒன்றாகும்.**
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண் கீழ்க்கணக்கு ஈ) சிற்றிலக்கியங்கள்
**விடை: அ) எட்டுத்தொகை**

**2.** **அகநானூறு .............. பிரிவுகளை உடையது.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
**விடை: ஆ) மூன்று**

**3.** **ஆண்களும் பெண்களும் வணிகம் செய்த செய்தியைச் ............ புலப்படுத்துகின்றன.**
அ) சங்கம் மருவிய பாடல்கள் ஆ) சங்கப்பாடல்கள்
இ) தொடர்நிலைச் செய்யுள் பாடல்கள் ஈ) நீதி இலக்கியங்கள்
**விடை: ஆ) சங்கப்பாடல்கள்**

**4.** **மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகிய தொழில்களுக்குரிய திணை ........... .**
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
**விடை: ஈ) நெய்தல்**

**5.** **'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலை இயற்றியவர் ........... .**
அ) ஔவையார் ஆ) மதுரை மள்ளனார்
இ) அம்மூவனார் ஈ) நக்கண்ணையார்
**விடை: இ) அம்மூவனார்**

**6.** **களிற்றியானைநிரையில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை**
அ) 180 ஆ) 120 இ) 100 ஈ) 140
**விடை: ஆ) 120**

**7.** **மணிமிடை பவளத்தில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை**
அ) 100 ஆ) 120 இ) 180 ஈ) 160
**விடை: இ) 180**

**8.** **நித்திலக்கோவையில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை**
அ) 120 ஆ) 180 இ) 100 ஈ) 130
**விடை: இ) 100**

**9.** **'பெருங்கடல்' இலக்கணக்குறிப்பு தருக.**
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை: அ) பண்புத்தொகை**

**10.** **'உழா அது' என்பது**
அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
**விடை: அ) செய்யுளிசை அளபெடை**

**11.** **'வெரீ இய' என்பது**
அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
**விடை: ஆ) சொல்லிசை அளபெடை**

**12.** **'பெருங்கடல்' புணர்ச்சி விதி கூறுக.**
அ) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'
ஆ) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'
இ) 'தனிக்குறில் முற்று ஒற்று உயிர்வரின் இரட்டும்'
ஈ) 'ஈறுபோதல்' மற்றும் 'இனம் மிகல்'
**விடை: ஈ) 'ஈறுபோதல்' மற்றும் 'இனம் மிகல்'**




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

13. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக விளங்கியது ........... .
அ) அரிசி ஆ) பயிறு வகைகள் இ) உப்பு ஈ) வெல்லம் **விடை: இ) உப்பு**

14. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – பயின்று வந்துள்ள தொடை நயம் யாது?
அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண் **விடை: ஈ) முரண்**

15. பொருத்துக.
அ) செறு 1. எருது
ஆ) கொள்ளை 2. சேறு
இ) அள்ளல் 3. விலை
ஈ) பகடு 4. வயல்
அ) 4,3,2,1 ஆ) 3,2,1,4 இ) 2,1,4,3 ஈ) 3,2,4,1 **விடை: அ) 4,3,2,1**

16. 'பெருங்கடல் வேட்டத்து' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலில் பயின்று வந்துள்ள உவமம் யாது?
அ) வினை உவமம் ஆ) பயன் உவமம்
இ) உள்ளுறை உவமம் ஈ) வடிவு உவமம் **விடை: இ) உள்ளுறை உவமம்**

17. 'உமணர்' என்பவர் ........... .
அ) நெல் வணிகர் ஆ) உப்பு வணிகர்
இ) பொற்கொல்லர் ஈ) மரத்தச்சர் **விடை: ஆ) உப்பு வணிகர்**

18. பழைய திணைப் புனைத்தை தீயிட்டு எரிப்பவர்
அ) உமணர் ஆ) கானவர் இ) ஆயர் ஈ) உழவர் **விடை: ஆ) கானவர்**

19. நும் பாடப்பகுதியில் உள்ள அகநானூற்றுப் பாடலில் அமைந்துள்ள கூற்று யாது?
அ) தலைமகள் தோழிக்கு உரைத்தது ஆ) செவிலித்தாய் தலைமகளுக்கு உரைத்தது
இ) தலைமகன் பாங்கற்கு உரைத்தது ஈ) தோழி தலைமகனுக்கு உரைத்தது
**விடை: இ) தலைமகன் பாங்கற்கு உரைத்தது**

20. 'சாற்றி' என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்
இ) முற்றெச்சம் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**விடை: அ) வினையெச்சம்**

## குறுவினா

1. **அகநானூறு – சிறுகுறிப்பு வரைக.**
(i) அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
(ii) இந்நூல் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்ற மூன்று பிரிவுகளை உடையது.
(iii) இது பாடல் எண்ணிற்கு ஏற்ப திணை வைப்பு முறை அமைந்துள்ள நூலாகும்.

2. **அகநானூற்றிலுள்ள மூன்று பிரிவுகளின் பாடல் எண்ணிக்கையைக் கூறுக. நும் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் எந்தப் பிரிவைச் சேர்ந்தது?**

| வ.எண் | பிரிவு | பாடல்கள் |
|---|---|---|
| (i) | களிற்றியானைநிரை | 120 (1 - 120) |
| (ii) | மணிமிடை பவளம் | 180 (121 - 300) |
| (iii) | நித்திலக்கோவை | 100 (301 - 400) |

பாடப்பகுதியில் 140ஆவது பாடல் இடம் பெற்றுள்ளது. இது மணிமிடை பவளத்தில் அமைந்துள்ளது.

3. **அம்மூவனார் – சிறுகுறிப்பு வரைக.**
(i) அம்மூவனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்
(ii) அகப்பாடல் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர்
(iii) நெய்தல் திணை பாடுவதில் வல்லவர்
(iv) இவரது பாடல்கள் எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

**பொருத்தம்:** "கருஞ்சேற்றில் சிக்கிக் கொண்ட வண்டியை துன்பத்துடன் மீட்க முயன்ற எருதிற்கு அவள் தந்தை உதவி செய்தார். அந்த எருது அடைந்த துன்பம் போல, அவள் கண்களால் நான் துன்புற்றேன்"

**மறைமுகப் பொருள்:** "வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவாயாக" என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

**உள்ளுறைப் பொருத்தம்:**

எருது - தலைவன்; தந்தை - பாங்கன்;

உப்பின் எடையால் எருது வருந்தியநிலை - காதலால் தலைவன் வருந்திய நிலை.

☆ ☆ ☆

நாடென்ப நாட்டின் தலை - நாகரிகம்,தொழில், வணிகம்

# இயல் 5 தலைக்குளம்

- தோப்பில் முகமது மீரான் விரிவானம்

## பாடப் பகுதி

தோப்பில் முகமது மீரான் எழுதிய 'ஒரு குட்டித் தீவின் வரைபடம்' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'தலைக்குளம்' என்ற சிறுகதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

**மையக் கருத்து :** தன் முகவரியை இழந்து நகரமாகிவிட்ட கிராமம்.

## பாடச் சுருக்கம்

**தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க.** பிடிஏ–5

இக்கதையில் வரும் கதாபாத்திரம் நம்மிடம் நேரிடையாக பேசுவது போன்று கதையோட்டம் அமைந்துள்ளது.

குளிர்ச்சியான, எப்போதும் வற்றாத நீர் நிறைந்த தலைக்குளம் அமைந்துள்ள ஒரு கிராமம். அக்குளத்தின் சிறப்பினாலேயே அவ்வூரின் பெயரும் தலைக்குளம் என அழைக்கப்பட்டது. அந்தக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து இயற்கையை அணு அணுவாக நேசித்த மனிதர், காலச் சூழ்நிலையால் நகரவாழ்க்கைக்கு மாறிவிட்டார். இருப்பினும் தன்னுடைய கிராமம், தன்னுடைய அனுபவங்கள் எப்போதும் அவர் மனதில் நீங்கா இடம் பெற்றிருந்தன.

அவர் வாழ்ந்த காற்றோட்டமான வீடு, எப்போதும் நீர் வற்றாத கிணறு, சுவை மிகுந்த கிணற்று நீர், வீட்டின் பின்புறம் தெரியும் மேற்குத் தொடர்ச்சி மலை என்று அவர் அனுபவித்த இன்பங்களை அவரது வாரிசுகள் தொடர விரும்பவில்லை. எனவே கிராமத்திலுள்ள தனது வீட்டை விற்றுவிட தீர்மானித்து பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார். அதைப் பார்த்து விட்டு ரிட்டையர்டு ஜட்ஜ் ஒருவர் வந்தார். தனக்கு கிராம வாழ்க்கை பிடிக்கும் என்பதால் மீதி காலத்தை கிராமத்தில் கழிக்கலாம் என்று முடிவு செய்ததை தெரிவித்தார்.

வீட்டைக் காண்பிப்பதற்காக ஜட்ஜின் காரில் இருவரும் தலைக்குளம் கிராமத்தை நோக்கிச் சென்றார்கள். போகும் வழியில் தன் கிராமத்தின் அழகான விஷயங்களைக் கூறிக் கொண்டே சென்றார். அவற்றைக் கேட்டு மிக உற்சாகத்துடன் ஜட்ஜ் அந்தக் கிராமத்திற்கு வந்தார்.

### தெரிந்து தெளிவோம்

| வட்டார வழக்கு | பொருள் | வட்டார வழக்கு | பொருள் |
|---|---|---|---|
| உம்மா | அம்மா | அடிபற்றி இருக்கும் | அடித்தரை தெரியும்படி இருக்கும் |
| வாப்பா | அப்பா | வேசாடையாக | சற்றுக் கோபமாக |
| கடவு | குளத்தின் படித்துறை | அமானிதம் | பாதுகாக்கப்பட வேண்டிய விஷயம் |
| கன்னியார் கோணம் | ஒரு வயற்காட்டின் பெயர் | ஏலா | பெரிய வயல் |
| பாவாத்து | துணி நெய்ய வேண்டிய நூலுக்குப் பசை சேர்ப்பது | முக்கால் மூண்டானி | ஓர் அளவு |
| சுள்ளைக்கு உள்ளிருந்து | (செங்கல்) நெருப்புச் சுள்ளைக்கு உள்ளிருந்து | புன்ன மூட்டி | புன்னை மரத்தின் நிழல் |

நாடென்ப நாட்டின் தலை


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


**6. சோமசுந்தர பாரதியாருக்கு 'பாரதி' என்ற பட்டம் கிடைத்த நிகழ்வை விளக்குக.**

(i) எட்டையபுர அரண்மனைக்கு வந்திருந்த யாழ்ப்பாண புலவர் ஒருவர் நடத்திய பாடல் இயற்றும் போட்டியில், இருவருடைய பாடல்கள் மட்டுமே சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

(ii) அந்த இரண்டு பாடல்களையும் எழுதியவர்களுக்கு 'பாரதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

(iii) அந்த இரண்டு பேரில் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார், மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்.

**7. சோமசுந்தர பாரதியாரின் பன்முக சிறப்புகளைக் கூறுக.**

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர், எழுத்தாளர், தமிழ்த்துறைத் தலைவர், வழக்கறிஞர், இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்.

**8. வ.உ.சிதம்பரனார் மீது சோமசுந்தர பாரதியார் கொண்டிருந்த பற்றிற்கு சான்றுகள் தருக.**

(i) வ.உ.சிதம்பரனாரின் அழைப்பை ஏற்று தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

(ii) வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக சோம சுந்தரபாரதியார் வாதாடினார்.

**9. சோமசுந்தர பாரதியார் குறித்து வ.உ.சி. அவர்கள் கூறியதை எழுதுக.**

"என்னிடம் இரண்டு சரக்குக் கப்பல்களோடு, மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது" என்று வ.உ.சி. அவர்கள் பெருமிதத்துடன் சோமசுந்தர பாரதியார் பற்றி கூறியுள்ளார்.

**10. சோமசுந்தர பாரதியாரின் படைப்புகளில் ஒரு சிலவற்றை எழுதுக.**

(i) தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

(ii) தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.

**11. சோமசுந்தர பாரதியார் ஒரு சமூக சீர்திருத்தவாதி - நிறுவுக.**

சமூக சீர்த்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டிருந்த சோமசுந்தர பாரதியார் சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தி வைத்தார்.



## தமிழாக்கம் தருக

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-rooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

**விடை:**

பெரியார் ஒரு பெரிய சமூக புரட்சியாளர் மட்டுமல்லர், அதற்கும் மேலானவர். பெரியார் வரும் வரையில் சாதி வேறுபாடுகள் நம் சமுதாயத்தில் நிரந்தரமாக வேரூன்றி இருந்தன. அவர் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாடுபட்டவர். அவர் எந்த ஒரு காரியத்தில் இறங்கினாலும், அதில் ஆழமாய் ஈடுபட்டு, ஆராய்ந்து நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை விடமாட்டார்.

## இலக்கிய நயம் பாராட்டுக.

படிவு-4

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

– கவிமணி தேசிக விநாயகம்


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

சிறுகை அளாவிய கூழ் – கலை, அழகியல், புதுமைகள்

# இயல் 6

# திரைமொழி

உரைநடை உலகம்

**பாடச் சுருக்கம்**

அசையும் உருவங்களைப் படம் பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் **தாமஸ் ஆல்வா எடிசன்**. பிரான்சு நாட்டைச் சேர்ந்த **லூமியர் சகோதரர்கள்** படப்பிடிப்புக் கருவியோடு, திரையிடும் கருவியையும் கண்டுபிடித்தனர். திரைப்படத்தில் கதை சொல்லும் முறையைக் கண்டறிந்தவர் **ஜார்ஜ் மிலி** ஆவார்.

### திரைப்பட உத்திகள்:

| 1. காட்சி மறைவு | 2. காட்சி உதயம் | 3. கலவை / கூட்டு | 4. அழிப்பு |
|---|---|---|---|
| ஒரு காட்சியை சிறிது சிறிதாக மங்கலாங்கிப் பின் முழுமையாக இருளாக்கிக் காட்டுவது ஆகும். | இருளாக இருந்த பகுதி சிறிது சிறிதாக வெளிச்சமாக மாறி, பின் முழுக் காட்சியும் வெளிப்படுவது ஆகும். | ஒரு காட்சி மறையும் போதே அடுத்தக் காட்சி தெரிவது ஆகும். | பழைய காட்சியை அழித்துக் கொண்டே புதிய காட்சி தோன்றுவது ஆகும். |

### ஒற்றைக் கோணக்கலை:

நாடகம் என்பது ஒரு காட்சியை ஒற்றைக் கோணத்தில் மட்டும் காண்பதாகும். எனவே இது ஒற்றைக் கோணக்கலை எனப்படுகிறது.

### முப்பரிமாணக் கலை:

திரைப்படத்தில் நடிப்பவரை முன், பின், மேல் என்று பல கோணங்களில் படப்பிடிப்பு கருவியால் மாற்றி மாற்றிப் படம்பிடித்துத் திரையில் காட்ட முடியும். எனவே இது முப்பரிமாணக் கலை எனப்படுகிறது.

### நேரேட்டர்:

மவுனப் படங்கள் எடுக்கப்பட்ட காலத்தில் திரையரங்கில் படம் ஓடும் போது திரைக்கு அருகே ஒருவர் நின்று ஒலிவாங்கியைப் பிடித்து கதை சொல்வார். ஆங்கிலத்தில் அவரை 'நேரேட்டர்' (கதைசொல்லி) என்று அழைப்பார்கள்.

### காட்சிமொழி:

| மீசேய்மைக் காட்சித் துணிப்பு (Extreme long shot) | சேய்மைக் காட்சித் துணிப்பு (Long shot) | நடுக்காட்சித் துணிப்பு (Mid shot) | அண்மை காட்சித் துணிப்பு (Close up shot) | மீ அண்மைக் காட்சித் துணிப்பு (Extreme closeup shot) |
|---|---|---|---|---|
| நம் கண்கள் தாமாகவே அகண்ட கோணத்தைத் தேர்வு செய்து கொண்டு பார்ப்பது ஆகும் | நம் கண்கள் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவில் இருந்து பார்த்துப் பதிவு செய்வது ஆகும். | எந்த ஒரு பொருளையும் கண்கள் முழுமையாகப் பார்த்தாலும் கவனம் பாதியளவே இருப்பது ஆகும். | எந்த ஒரு பொருளையும் கண்கள் முழுமையாகப் பார்த்தாலும் கவனம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே இருப்பது ஆகும். | நம் கண்கள் ஒரு குறிப்பிட்ட பொருள் ஒன்றை மட்டுமே முழுமையாகப் பார்ப்பது ஆகும். |
| (எ.கா) கடற்கரையில் நின்று கடலைப் பார்ப்பது ஆகும். | (எ.கா) சாலையைக் கடக்கும் போது கண்கள் சுருங்கி பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்ப்பது ஆகும். | (எ.கா) தெருவில் நடந்து வரும் ஒருவரை பார்க்கும் போது, கவனம் இடுப்பு வரை மட்டுமே எடுத்துக் கொள்கிறது. | (எ.கா) வீட்டிற்குள் நுழைந்து அம்மாவைப் பார்க்கும் போது, அம்மாவின் முகம் மட்டுமே நமக்குள் பதிவாகிறது. | (எ.கா) வாசலில் நின்று செருப்பை கழற்றி விடும்போது, கண்கள் கீழே குனிந்து செருப்பை மட்டும் பார்க்கின்றன. |

பிடிஏ–5



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

| | |
|---|---|
| பாடிய வாரத்து ஈற்றில் நின்று | – பாடலின் முடிவில் |
| கூடிய குயிலுவக் கருவிகள் | – இசைப்பதற்கு உரிய கருவிகள் |
| எல்லாம் இசைக்கும் | – அனைத்தும் இசைத்தன |

**பொருளுரை :**

அரசன் முதலானோர் யாவரும் தத்தம் தகுதிக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தனர். அதனருகே இசைக்கருவிகளை வாசிப்போர், நிற்க வேண்டிய முறைப்படி அவரவர்க்கு உரிய இடத்தில் நின்றனர். அதன்பின்பு அரங்கேற்றம் செய்ய வேண்டிய நாடகக் கணிகையாகிய மாதவி, அரங்கில் வலது காலை முன் வைத்து ஏறி, பொருமுக எழினிக்கு நிலையிடனான வலத்தூண் அருகே மரபின்படி நின்றாள். அவ்வாறு ஆடலில் தேர்ச்சி பெற்று அரங்கேறிய தோரிய மகளிரும் ஒருமுக எழினிக்கு நிலையிடனான இடத்தூண் அருகே போய் மரபுப்படி நின்றனர். நன்மை பெருகவும் தீமை நீங்கவும் வேண்டி, 'ஓரொற்றுவாரம்', 'ஈரொற்றுவாரம்' என்னும் தெய்வப் பாடல்களைப் பாடினர். பின் அப்பாடலின் முடிவில் இசைப்பதற்கு உரிய இசைக்கருவிகள் அனைத்தும் கூட்டாக இசைக்கப்பட்டன.

**விரிவான விளக்கம் :**

அரங்கத்தின் வலதுபுறத் தூணின் பக்கமாகச் சென்று ஆடுபவர் நிற்க வேண்டும் என்பது மரபாகும். இதேபோல் தோரிய மகளிர், இசைக்கருவிகளை இசைப்பவர்கள் அனைவரும் நிற்கவேண்டிய இடங்கள் குறித்த விதிகள் அக்காலத்தில் இருந்தன. புதிதாக ஆடல்மகள் ஒருவள் அரங்கேற்றம் செய்யும்போது ஏற்கனவே அரங்கேற்றம் செய்த ஆடல் மகளிர் மேடையில் ஏறி தெய்வப்பாடல்கரைள பாடுவது வழக்கமாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. குயிலுவ மாக்கள் – இசைக் கருவிகள் வாசிப்போர் | 3. வாரம் – தெய்வப்பாடல்கள் |
| 2. தோரிய மகளிர் – ஆடலில் தேர்ந்த பெண்கள் | 4. தொல்நெறி – பழமையான நெறிமுறைகள் |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. தொல்நெறி – பண்புத்தொகை (பிடிஎ–6) | 2. நீங்க, பாடிய, இசைக்கும், கூடிய – பெயரெச்சங்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

| | |
|---|---|
| **நீங்க – நீங்கு + அ**<br>நீங்கு – பகுதி<br>அ – பெயரெச்ச விகுதி | **இசைக்கும் – இசை + க் + க் + உம்**<br>இசை – பகுதி<br>க் – சந்தி<br>க் – எதிர்கால இடைநிலை<br>உம் – பெயரெச்ச விகுதி |
| **பாடிய – பாடு + இ(ன்) + ய் + அ**<br>பாடு – பகுதி<br>இ(ன்) – இறந்தகால இடைநிலை 'ன' கரம் புணர்ந்து கெட்டது<br>ய் – உடம்படுமெய் சந்தி<br>அ – பெயரெச்ச விகுதி | |

**புணர்ச்சி விதி :**

1. **வழக்கென** – வழக்கு + என

இது **குற்றியலுகரப் புணர்ச்சி** ஆகும்.

**விதிகள்:** வழக்கு + என

(i) '**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**' விதிப்படி **வழக்க்+ என** என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**வழக்கென**' என்றானது.

**பாடல்** **இசைக்கருவிகள் ஒலித்த முறை**

**குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்**
**தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்**
**பின்வழி நின்றது முழவே, முழவொடு**
**கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை**

பா வகை : **ஆசிரியப்பா**

சிறுகை அளாவிய கூழ்


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


இயல் 6

சிறுகை அளாவிய கூழ் - கலை, அழகியல், புதுமைகள்

# மெய்ப்பாட்டியல்

- தொல்காப்பியர் கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலாகும்.

தொன்மை + காப்பியம் - தொல்காப்பியம். மிகவும் தொன்மையான காப்பிய நூல் ஆகும்.

**நூலமைப்பு :**

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று அதிகாரங்களை இந்நூல் கொண்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டுள்ளது.

**எழுத்ததிகாரம் :** தனிமொழியிலும் புணர் மொழியிலும் உள்ள எழுத்துகளைப் பற்றி கூறுகிறது.

**சொல்லதிகாரம் :** மொழித்தொடர் அமையும் பாங்கினைக் கூறுகிறது.

**பொருளதிகாரம் :** கவிதைகளுக்கான பொருண்மை, உறுப்புகள், உத்திகள், அழகு ஆகியவற்றைக் கூறுகிறது.

**நூலின் சிறப்பு:** இந்நூல் பழந்தமிழரின் நாகரிகச் செம்மையினைத் தெளிவாக விளக்கும் ஒப்பற்ற சிறப்புடையது.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | : தொல்காப்பியர் |
| **இயற்பெயர்** | : அறியப்படவில்லை |
| **சிறப்புப் பெயர்** | : ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியன் |
| **ஊர்** | : கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது |
| **காலம்** | : இவரது காலம் இன்றளவும் சரியாகக் கணிக்கப்படவில்லை |

**தொல்காப்பியரின் காலம் குறித்த பல்வேறு கூற்றுகள்:**

(i) தொல்காப்பியர் பதஞ்சலி முனிவர் காலத்தைவிட (கி.மு. 200) முற்பட்டவர் - கே.எஸ் சீனிவாச பிள்ளை (நூல் - தமிழ் வரலாறு)

(ii) வியாச முனிவர் வேதத்தைப் பகுத்ததற்கு முந்தைய காலம் - டாக்டர் உ.வே.சாமிநாதர் (நூல்-சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்)

(iii) தொல்காப்பியனார் கி.மு. 4 ஆம் நூற்றாண்டினர் - எம்.சீனிவாச ஐயங்கார் (நூல் - தமிழ் ஸ்டடீஸ்)

(iv) வேதகாலமாகிய கி.மு. 1500 ஆம் ஆண்டிற்கும் முற்பட்டவர் - மறைமலை அடிகள்

(v) தொல்காப்பியனார் கி.மு. 1500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டவராதல் இயலாது - வித்வான் க.வெள்ளை வாரணர் (நூல் - தமிழ் இலக்கிய வரலாறு)

(vi) தொல்காப்பியர் தலைச்சங்க இறுதியிலும் இடைச்சங்கத் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் - நக்கீரனார் (நூல் - இறையனார் அகப்பொருள் உரை) நக்கீரனாரின் கூற்றுப்படி தொல்காப்பியரின் காலம் கி.மு.4200-க்கும் முந்தையது.

(vii) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவிலூர் திருமடமும் இணைந்து தொல்காப்பியர் காலம் கி.மு.711 என்று தீர்மானித்துள்ளன.

**நூல் அரங்கேற்றம் :**

நிலந்தரு திருவிற்பாண்டியன் என்ற மன்னன் அவையில் அதங்கோட்டாசிரியரின் முன்பாகத் தொல்காப்பியம் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று இந்நூலுக்கு **பனம்பரனார்** எழுதிய பாயிரம் மூலம் அறிய முடிகிறது. பனம்பரனார் என்பவர் தொல்காப்பியருடன் பயின்ற ஒருசாலை மாணக்கர் ஆவார்.

இப்பாயிரத்தில் **'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'** என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் தொல்காப்பியர் வடமொழியையும் நன்கு அறிந்தவர் என்று புலப்படுகிறது.

**தொல்காப்பிய உரையாசிரியர்கள் :**

இளம் பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச் சிலையார், நச்சினார்க்கினியர், பேராசிரியர்

இளம்பூரணர் - தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதலாக உரை எழுதியவர்.

பேராசிரியர் - பொருளதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளார்.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

பெரிய நாட்டியக் கலைஞராக இருந்தாலும் மற்றவர்களுக்கு அவர் கொடுக்கும் மரியாதை என்னை வியக்க வைத்தது. தன் உடன் பிறந்தோர் போல் உபசரித்தார். நாட்டியம் என்பது உடல் அசைவுகளாலும் முக பாவனைகளாலும் கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்து பார்ப்பவர் உள்ளம் மகிழும்படி அமைய வேண்டும் என்று கூறுவார்.

"ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒன்றை நான் புதிதாக கற்றுக் கொண்டே இருப்பேன். நாட்டியத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பது எனது ஆசை" என்று கூறினார். தனக்குள் தேடல் இருக்கும் பொழுது ஒவ்வொரு மனிதனும் எதையாவது ஒன்றை தினம் தினம் கற்றுக் கொள்கிறான் என்று அழகாக சொன்னார்.

**முடிவுரை:**

அவரைப் பார்த்த நேரங்களும் பேசிய நொடிகளும் மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவரிடம் பேசியதையும் பார்த்ததையும் விவரிக்க வார்த்தைகள் இல்லை.

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**

வை.மு. கோதைநாயகி (1901-1960)


வை.மு. கோதைநாயகி (1901–1960)

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. (வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்) ஆவார்.

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

**அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று :**

என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம்... உலகம் பலவிதம்... என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே, பாட்டி சொல்லிய வசனங்களைவிடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள்... நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே!.. என்ன உலக விசித்திரம்!.. என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்." ('தபால் வினோதம்' குறுநாவலில் இருந்து)

## வினாக்கள் :

1. **'இந்திர மோகனா' என்ற நூலின் ஆசிரியர் ................... .**

அ) வை.மு.கோதைநாயகி அம்மாள் ஆ) அம்புஜத்தம்மாள்
இ) அஞ்சலையம்மாள் ஈ) நீலாம்பிகை அம்மையார்

**விடை: அ) வை.மு.கோதைநாயகி அம்மாள்**

2. **'இந்திர மோகனா' என்பது ................ .**

அ) கவிதை நூல் ஆ) நாடக நூல்
இ) புதின நூல் ஈ) சிறுகதைத் தொகுப்பு

**விடை: ஆ) நாடக நூல்**


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


இயல் 6 வாழ்வியல்

# திருக்குறள்

செய்யுள்

## 43. அறிவு உடைமை

**1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.**

**சொல்லும் பொருளும் :**
அறிவு - அறிவு என்பது
அற்றம் - அழிவு
காக்கும் கருவி - வராமல் பாதுகாக்கும் கருவியாகும்
செறுவார்க்கும் - பகைவராலும்
உள் அழிக்கல் ஆகா - அழிக்க முடியாத
அரண் - பாதுகாப்பு அரணாகும்

**பொருளுரை :** அறிவு என்பது அழிவு வராமல் பாதுகாக்கும் கருவியாகும். அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

**விரிவான விளக்கம் :** புத்திசாலித்தனம்தான் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதற்கான ஆயுதமாகும். அது மனதுக்குள் இருப்பதால் பகைவர்களாலும் புகுந்து அழித்து விட முடியாது. அறிவு என்பது நம் மனதிற்குள் இருப்பது. அதனால் தான் 'உள் அழிக்கல் ஆகா' என்று வள்ளுவர் கூறியுள்ளார். வெளியில் கட்டும் பாதுகாப்புச்சுவர் போன்றவற்றை எதிரிகள் அழிக்க முடியும். நம் மனதிற்குள் இருக்கும் அறிவை அவர்களால் அழிக்க முடியாது. எனவே அதனை சிறந்த கருவி என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள் :** அற்றம் - அழிவு ; கருவி - ஆயுதம் ; செறுவார் - பகைவர்
ஆகா - முடியாத ; அரண் - பாதுகாப்புச் சுவர்

**இலக்கணக்குறிப்பு :** காக்கும் - 'செய்யும்' எனும் வாய்பாட்டு பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம் :** **காக்கும் - கா + க் + க் + உம்**
கா - பகுதி
க் - சந்தி
க் - எதிர்கால இடைநிலை
உம் - பெயரெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :** **அறிவற்றம்** - அறிவு + அற்றம். இது **முற்றியலுகரப் புணர்ச்சி** ஆகும்.
**விதிகள்:** அறிவு + அற்றம் -
(i) '**முற்றும் அற்று ஒரோவழி**' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள 'உகரம்' கெட்டு **அறிவ் + அற்றம்** என்றானது.
(ii) '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து '**அறிவற்றம்**' என்றானது.

**2. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

**சொல்லும் பொருளும் :**
சென்ற இடத்தால் - மனதை அது செல்லும் இடத்திற்கு
செலவிடா - செல்லவிடாமல்
தீது ஒரீஇ - தீமையிலிருந்து விலக்கி
நன்றின் பால் - நல்லவற்றை நோக்கி
உய்ப்பது அறிவு - செலுத்துவதே அறிவாகும்

**பொருளுரை :** மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**விரிவான விளக்கம் :** மனமானது, ஒரு வழியில் செல்லாமல் பல வழிகளிலும் செல்லும். அதனால்தான் 'மனம் ஒரு குரங்கு' என்ற பழமொழி ஏற்பட்டது. குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல் மனம் வேறுவேறு விஷயங்களை நோக்கிச் செல்லும். தீயவற்றை விலக்கி நல்லவழியை நோக்கி மனதைச் செலுத்துவதே அறிவாகும்.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

அருமை உடைய செயல் - நாடு, அரசு, சமூகம், நிருவாகம்

இயல் 7

# இலக்கியத்தில் மேலாண்மை

- வெ.இறையன்பு இ.ஆ.ப உரைநடை உலகம்

## பாடப்பகுதி

'இலக்கியத்தின் மேலாண்மை' என்ற நூலில் இருந்து எழுத்தாளப்பட்டுள்ளது.

## பாடச் சுருக்கம்

மனித இனம் தோன்றியபோதே 'மேலாண்மை' என்ற பண்பும் துளிர்க்கத் தொடங்கிவிட்டது. பண்டை மனிதனிடம் ஆரம்பித்த தலைமைப் பண்பும் வழிநடத்தும் இயல்புகளும் அவன் சந்தித்த இடங்களைக் கடப்பதற்கு உதவின.

### நேர மேலாண்மை:

மனிதன் தன்னுடைய ஓய்வுநேரத்தை உருவாக்கத் தொடங்கிய போதே அவனுடைய மேலாண்மை பண்பு உருவானது.

**திருவள்ளுவர் நேர மேலாண்மை குறித்துக் கூறுவது யாது?** பிடிஏ–3

| இலக்கியம் | சான்று | பொருள் |
|---|---|---|
| திருக்குறள் | **நேர மேலாண்மையை குறிக்கும் குறளை எழுதுக.** பிடிஏ–4<br>ஞாலம் கருதினும் கைகூடும் காலம்<br>கருதி இடத்தால் செயின். (குறள் 484) | உரிய காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து அறிந்து செயல்பட்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும். |
| புறநானூறு | **400 ஆவது பாடல்**<br>பலர் துஞ்சவும் தான் துஞ்சான்<br>உலகு காக்கும் உயர் கொள்கை<br>கேட்டோன், எந்தை என் தெண்கிணைக்<br>குரலே. | இரவின் கடையாமத்தில் பலரும் உறங்கிக் கொண்டிருக்க, நலங்கிள்ளி மட்டும் உறங்கவில்லை. உலகைக் காக்க வேண்டிய பொறுப்பு அவனிடம் உள்ளது. அவன் என் இசையைக் கேட்டான். அவன்தான் என் தலைவன். |

### சீன இலக்கியம்:

சீனத்தில் வழங்கும் கதையொன்றில், தன்னுடைய இடுப்பில் கட்டியிருந்த, ஆயிரம் பொற்காசுகளால், வேகமாக நீந்த முடியாமல் தன் உயிரை நீத்த நீச்சல் வீரன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நேர மேலாண்மையில் எது முக்கியம் என்று சரியான முடிவெடுக்க வேண்டும். உரிய நேரத்தை மிகச் சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

### வேளாண் மேலாண்மை:

| இலக்கியம் | சான்று | பொருள் |
|---|---|---|
| கம்பராமாயணம் | **பாலகாண்டம் - 179 ஆவது பாடல்**<br>வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்<br>செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்<br>– கம்பர் | வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச் சிறந்த முறையில் தசரதன் தன் நாட்டை செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்தான்,<br>**கூறப்பட்ட கருத்து:**<br>வேளாண் நிலத்தை ஒவ்வொரு கட்டத்திலும் பொறுப்புணர்வுடன் நிருவாகம் செய்ய வேண்டும். |



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**சிறுவினா**

**1. கவிஞர் தமிழ்நதியின் படைப்புகள் குறித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| சிறுகதைகள் | – | நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது |
| கவிதைகள் | – | சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி, |
| குறுநாவல் | – | கானல் வரி |
| நாவல் | – | ஈழம்: கைவிட்ட தேசம், பார்த்தீனியம் |
| கவிதைத் தொகுப்பு | – | அதன் பிறகும் எஞ்சும். |

**2. 'அதிசய மலர்' என்ற கவிதையின் மூலமாக கூறப்பட்ட கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

(i) குண்டு மழை பொழிந்து நிலங்கள் அழிக்கப்பட்டன.

(ii) மனதில் அழுந்திய துயரங்களுடனும் எஞ்சிய மனிதர்களுடனும் இந்த நிலத்தில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

(iii) பசுமையை இழந்த நிலத்தில் யானையின் எச்சத்தின் மூலமாகவோ அல்லது யாருடைய காலணியின் மூலமாகவோ விழுந்த விதை செடியாக முளைத்தது.

(iv) அந்தச் செடியில் பூத்த மலரானது, பிறந்த குழந்தையின் புன்னகையைப் போல் அழகாக இதழ்கள் விரிந்து காணப்பட்டது.

(v) அந்த மலரைத் தேடி இன்று வண்ணத்துப்பூச்சி ஒன்று வந்தது. நாளை பறவைகளும் வரலாம்.

(vi) அந்தச் செடியின் மூலமாக நாளை பெருங்காடு உருவாகலாம். பெருமழை பெய்யலாம்.

(vii) அந்தப் பூவின் புன்னகை, நாடு பற்றிய நம்பிக்கையை, சிதறிய மனிதர்களிடத்தில் பரப்புகிறது.

☆ ☆ ☆



அருமை உடைய செயல் – நாடு, அரசு, சமூகம், நிர்வாகம்

# இயல் 7 தேயிலைத் தோட்டப் பாட்டு

– முகம்மது இராவுத்தர்

கவிதைப்பேழை

**நூற்குறிப்பு**

19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினால் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலிகளாக புலம் பெயர்ந்தனர்.

அவர்கள் பட்ட இன்னல்கள் குறித்து பாரதியார் உள்பட கவிஞர்கள் பலர் கவிதைகள் இயற்றியுள்ளனர்.

அக்கவிதைகள் வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள், காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள், பெரிய எழுத்துப் புத்தகங்கள், தெருப்பாடல்கள் என்ற பெயர்களில் சிறுசிறு நூல்களாக வெளிவந்துள்ளன.

செவ்வியல் இலக்கிய மரபு பாடாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களை இத்தகைய நூல்கள் பாடுபொருள்களாக்கின.

**பாடப்பகுதி**

'பாரத மக்களின் பரிதாபச்சிந்து' என்ற நூலில் அமைந்துள்ள 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்ற கும்மிப் பாடல்கள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன. இப்பாடலை முகம்மது இராவுத்தர் இயற்றியுள்ளார்.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 1. **ஆதியிலே நம திந்திய தேசத்தில்<br>ஆன பலவிதக் கைத்தொழில்கள் – மிக<br>சாதன மாகவே ஓங்கிக் குடிகொண்டு<br>சாலைச் சிறப்புடனே திகழ்ந்தே** | பழங்காலத்தில் நமது இந்திய நாட்டில் பலவிதமான கைத்தொழில்கள் வாழ்வாதாரமாக மிகவும் சிறப்புடன் உயர்வான நிலையில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. |


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**விதிகள்:** குறை + இல்லா

(i) 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி குறை + ய் + இல்லா என்றானது.

(ii) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து குறையில்லா என்றானது.

4. **ஏற்றமுள்ள** – ஏற்றம் + உள்ள இது மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகும்.

**விதி:** ஏற்றம் + உள்ள – 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து ஏற்றமுள்ள என்றானது.

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியில் உள்ள வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, சிறப்பு மலர் உருவாக்குக.**

| பாடல்கள் | |
|---|---|
| "மாசி மழை பெய்யாதோ<br>மலையின் வெள்ளம் சாயாதோ<br>ஏத்து மீன் ஏறாதோ<br>எங்க பஞ்சம் தீராதோ." | "ஆற்றுக்குள் போன வண்டி<br>சேற்றுக்குள்ளே நிற்கையிலே<br>கொண்டை போட்டுத் தள்ளுராளே!<br>தள்ளுவதற்குக் கூடத் துணை<br>யாருமில்லை அந்தப் பக்கம்<br>சீக்கிச் சத்தம் கேட்கிறது.<br>சின்னப் பையன் வாரானோ?" |
| **விடுகதைகள்** | |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும்,<br>காய் காப்பது கண்ணுக்குத் தெரியாது அது என்ன? – வேர்க்கடலை | நான்கு கால்கள் உள்ளவன்<br>இரண்டு கைகள் உள்ளவன்<br>உட்கார்ந்து கொண்டிருப்பான்<br>உட்கார இடம் கொடுப்பான் அவன் யார்?<br>– நாற்காலி |
| **பழமொழிகள்** | |
| 1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.<br>2. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும்.<br>3. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.<br>4. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.<br>5. தருமம் தலை காக்கும். | |

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்ற கவிதையை இயற்றியவர் ............... .**
அ) முகம்மது இராவுத்தர் ஆ) முகம்மது காசிம்
இ) முகம்மது ரஹ்மான் ஈ) அப்துல் ரஹ்மான் **விடை: அ) முகம்மது இராவுத்தர்**

2. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள 'தேயிலைத் தோட்டப் பாட்டு' அமைந்துள்ள வகைப்பாடு ........**
அ) தாலாட்டுப் பாடல் ஆ) கும்மிப் பாடல்கள்
இ) நையாண்டிப் பாடல்கள் ஈ) கதைப்பாடல்கள் **விடை: ஆ) கும்மிப் பாடல்கள்**

3. **பஞ்சத்தினால் தமிழர்கள் ............... நூற்றாண்டில் புலம் பெயர்ந்தனர்.**
அ) 17 ஆம் ஆ) 18 ஆம் இ) 19 ஆம் ஈ) 20 ஆம் **விடை: இ) 19 ஆம்**

அருமை உடைய செயல்

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


இயல் 7

அருமை உடைய செயல் - நாடு, அரசு, சமூகம், நிர்வாகம்

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

- ஐராவதம் மகாதேவன் விரிவானம்

## பாடப் பகுதி

'கல்வெட்டு' என்ற இதழில் வெளிவந்த ஐராவதம் மகாதேவன் அவர்களின் கட்டுரை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடச் சுருக்கம்

தொல்லியல் துறையில் மிகவும் ஆர்வம் கொண்ட ஐராவதம் மகாதேவன் 1962-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை கைத்தறித் துறை இயக்குநராகப் பணியாற்றினார். இருப்பினும் தனது சொந்த முயற்சியில் பிராம்மிக் கல்வெட்டுகள் குறித்து ஆய்வுகளைச் செய்து வந்தார்.

இரண்டு காரியங்கள் குறித்து அவரது நெடுநாள் விருப்பங்கள் நிறைவேறாமல் இருந்தன.

(i) தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளை சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்.

(ii) சங்ககாலத் தமிழ் மன்னர்களின் பெயர்கள் மற்றும் குறிப்புகளைக் கல்வெட்டுகளில் காண வேண்டும்.

### தெரிந்து தெளிவோம்

தென் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளில் இருந்த பிராம்மி எழுத்துகளுக்கும் அசோகர் காலத்திய பிராம்மி எழுத்துகளுக்கும் உள்ள முரண்பாடுகளை ஐராவதம் மகாதேவன் கண்டறிந்து அவற்றைத் தன்னுடைய **'எர்லி தமிழ் எபிகிராபி'** என்ற நூலில் தெளிவுப்படுத்தியுள்ளார்.

தமிழ்மொழியில் எழுதப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தை 'தமிழ்ப் பிராம்மி' என்று அழைக்காமல், 'தமிழி' என்றோ 'பழந்தமிழ்' என்றோ அழைக்க வேண்டும் என இவர் கூறுகிறார்.

இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் 1927-28 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி இவர் அறிய நேர்ந்தது.

அந்த அறிக்கையில் அந்தக் கல்வெட்டில் பிராம்மி வடிவில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ளதாகவும் கல்வெட்டு பழுதடைந்த நிலையில் இருப்பதால் படிக்க இயலவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அதில் **ஆதன்** என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. தன்னுடைய நெடுநாளைய ஆசைகள் இக்கல்வெட்டு மூலம் நிறைவேறப் போவதாக எண்ணி ஐராவதம் மகாதேவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

1965 ஆம் ஆண்டு பிப்பரவரி மாதம் முதல் தேதியன்று நண்பர்கள் சிலருடன் கரூரை அடுத்து உள்ள புகளூரில் ஆறுநாட்டான் குன்றிற்கு மிகவும் கடினமான பாதை வழியாகச் சென்றடைந்தார். படிக்க முடியாது என்ற தொல்லியல் துறையினரால் கூறப்பட்ட எழுத்துகளை அவர் மிகவும் எளிதாகப் படித்து, பொருளைப் புரிந்து கொண்டார்.

**கல்வெட்டு குறித்து அவர் வெளியிட்ட செய்திகள்:**

(i) அந்தக் கல்வெட்டு கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது.

(ii) அந்த மன்னர்கள் குறித்து பதிற்றுப்பத்திலும் ஏனைய சங்க இலக்கியங்களிலும் பாடப்பெற்றுள்ளது.

(iii) அது ஏறத்தாழ கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டாகும்.

**இவருடைய கண்டுபிடிப்பு குறித்த பாராட்டுரைகள்:**

(i) வரலாற்றுப் பேராசிரியர் திரு.நீலகண்ட சாஸ்திரி ஐராவதம் மகாதேவன், புகளூரில் கண்டுபிடித்த கல்வெட்டு வாசகத்தைக் குறித்துப் பாராட்டியுள்ளார்.

### தெரிந்து தெளிவோம்

**உண்மையை ஏற்றுக் கொள்ளும் ஐராவதம் மகாதேவனின் உயர்ந்த பண்பு**

புகளூர் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 6, 7 மற்றும் 8 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் எழுதியிருந்தார். மாணவர் ஒருவர் அதனை மறுத்து அந்த மன்னர்கள் 7, 8 மற்றும் 9 ஆவது பாட்டுடைத் தலைவர் என விளக்கினார். அதனை சரியென்று உணர்ந்த மகாதேவன், முதலாவது உலகத் தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் முன்னிலையில் மாணவரின் கருத்தை ஏற்றுக் கொண்டார்.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

4. **பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.**
அ) அறம் - 1) கர்ணன்
ஆ) வலிமை - 2) மனுநீதிச்சோழன்
இ) நீதி - 3) பீமன்
ஈ) வள்ளல் - 4) தருமன்
அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 1, 2 விடை: **ஆ) 4, 3, 2, 1**

5. **தொன்மம் - விளக்கம் தருக.**
கடவுளர்கள், தேவர்கள், மக்கள், விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே 'தொன்மம்' என்பர்.
(i) பழங்கதை
(ii) புராணம்
(iii) கருத்துவடிவம் என்ற பொருள்களும் உண்டு.

6. **பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**
(i) "துரியோதனன் வருகிறான்".
(ii) "ஹிட்லர் செல்கிறான்".

7. **உன் மனம் ஒரு பாற்கடல்**
**அதைக் கடைந்தால்**
**அமுதம் மட்டுமல்ல**
**ஆலகாலமும் வெளிப்படும் என்பதை**
**நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**
இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம்
(i) பாற்கடல்
(ii) அமுதம்
(iii) ஆலகாலம் ஆகியனவாகும்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் தொன்மம் என்பது ................ .**
அ) தொன்மை ஆ) தோல் இ) இயைபு ஈ) விருந்து விடை: **அ) தொன்மை**

2. **தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**
அ) சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன
ஆ) உவமைக் கதைகளாக வெளிப்படுத்தப்படுகின்றன
இ) மெய்யியல் உருவகங்களாக வெளிப்படுத்தப்படுகின்றன
ஈ) தொன்மம் கடந்த காலத்தை மட்டும் கூறுகிறது. விடை: **ஈ) தொன்மம் கடந்த காலத்தை மட்டும் கூறுகிறது**
(குறிப்பு: தொன்மம் கடந்தகாலத்தையும் இக்காலத்தையும் இணைத்துக் கூறுகிறது.)

3. **உலகின் பெரும்பாலான தொன்மங்கள் .................... மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.**
அ) சிறுகதைகள் ஆ) கவிதைகள் இ) புதினங்கள் ஈ) கட்டுரைகள்
விடை: **ஆ) கவிதைகள்**

4. **இராமாயணத்தின் ................ கதையை வைத்து புதுமைப்பித்தன், சாபவிமோசனம் என்ற கதையைப் படைத்தார்.**
அ) சபரி ஆ) ஊர்மிளா இ) அகலிகை ஈ) மண்டோதரி விடை: **இ) அகலிகை**

5. **விட்டக்குறை, வெந்தழாலால் வேகாது ஆகிய சிறுகதைகளை அழகிரிசாமி எந்த நூலின் அடிப்படையாகக் கொண்டு படைத்தார்?**
அ) கந்தபுராணம் ஆ) கம்பராமாயணம்
இ) திருவிளையாடற்புராணம் ஈ) பெரிய புராணம் விடை: **இ) திருவிளையாடற்புராணம்**

அருமை உடைய செயல்


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

இயல் 8

எல்லா உயிரும் தொழும் - மனிதம், ஆளுமை

# நமது அடையாளங்களை மீட்டவர்

உரைநடை உலகம்

**பாடச் சுருக்கம்**

(i) இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி தமிழ் இன வரலாற்றை எழுதிய முக்கிய ஆளுமைகளுள் முக்கியமானவர் மயிலை சீனி.வேங்கடசாமி.

(ii) இதழாசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

(iii) அவர் எழுதிய நூல்கள் தமிழரின் பழம் பெருமையை உணர உதவும் புதையல்களாக விளங்குகின்றன.

**இளமைக்கால வாழ்க்கை:**

(i) மயிலை சீனி.வேங்கடசாமியின் தந்தை சீனிவாசன் சித்த மருத்துவராகவும் சகோதரன் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியதால் இளமையிலேயே தமிழ்ப்பற்று உடையவராக வளர்ந்தார்.

(ii) விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியனார், திரு.வி.க., தெ.பொ.மீ, ச.த.சற்குணர் போன்ற அறிஞர்களுடன் தொடர்பில் இருந்தார்.

**மயிலை சீனி.வேங்கடசாமியின் ஆய்வுக் கட்டுரைகள் எந்தெந்த இதழ்களில் வெளிவந்தன?** பிடிஏ–4

(iii) இவரது ஆய்வுக் கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளிவந்தன.

**தொடக்ககால ஆய்வுகள்:**

(i) தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் **ச.த.சற்குணர்** கிறித்தவமும் தமிழும் என்ற பொருள் குறித்து உரையாற்றியதைக் கேட்ட மயிலையார் **கிறித்தவமும் தமிழும்** என்ற நூலை எழுதினார்.

(ii) தமிழின் தொல் இலக்கியம், தொல்கலை, தொல்லெழுத்து ஆகியவற்றின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக **'பௌத்தமும் தமிழும்' 'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களை எழுதினார்.

(iii) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளில் கவனம் செலுத்தினார்.

(iv) **வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி** ஆகியவற்றில் புலமை பெற்றிருந்ததால் சாசனங்களை அவரால் எளிதாகப் படிக்க முடிந்தது.

**வரலாற்று ஆய்வுகள்:**

கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த மன்னர்களைப் பற்றி ஆய்வில் ஈடுபட்டார். மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகிய பல்லவ மன்னர்கள் குறித்து நூல்களை எழுதியுள்ளார்.

மூன்றாம் நந்திவர்மனைப் பற்றி இவர் எழுதிய நூல், அம்மன்னனைப் பற்றி எழுதப்பட்ட முதல் நூல் ஆகும்.

மேலும் சங்ககால மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர்கள் ஆகிய மன்னர்கள் குறித்தும் இலங்கை நாட்டின் வரலாறு குறித்தும் ஆய்வு செய்து நூல்களை எழுதியுள்ளார்.

**தெரிந்து தெளிவோம்**

சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றுப் பாடல் 162-இல் இருப்பதை முதன்முதலில் வெளிப்படுத்தியவர் மயிலை. சீனி.வேங்கடசாமி.

களப்பிரர்களின் ஆட்சிக்காலத்தை **'தமிழகத்தின் இருண்ட காலம்'** என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருந்தனர். இவர் மாறுபட்ட கோணத்தில் ஆய்வினை மேற்கொண்டு **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்ற நூல் மூலம் களப்பிர மன்னர்கள் குறித்து எழுதியுள்ளார்.

**கலையியல் ஆய்வுகள்:**

இளமைப் பருவத்தில் மயிலையார் ஓவியக் கல்லூரியில் பயின்றது அவருடைய கலையியல் ஆய்வுகளுக்கு உதவியாக அமைந்தது. இவர் எழுதிய **'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'** என்னும் நூல், கவின்கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூலாகும். இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றது.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. "என் முகத்தை நான் தேடியாக வேண்டும் இப்பொழுதேனும்'' இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? அதன் ஆசிரியர் யார்? பிடிஏ–4

"என் முகத்தை நான் தேடியாக வேண்டும் இப்பொழுதேனும்" இவ்வடிகள் இடம் பெற்ற நூல் முகம். இதன் ஆசிரியர் சுகந்தி சுப்பிரமணியன்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. 'முகம்' என்ற கவிதையின் ஆசிரியர் .............
அ) சுகந்தி சுப்ரமணியன் ஆ) அய்யப்ப மாதவன்
இ) நகுலன் ஈ) தமிழ்நதி
**விடை: அ) சுகந்தி சுப்ரமணியன்**

2. 'முகம்' என்ற கவிதை இடம்பெற்றுள்ள நூல் .............
அ) புதையுண்ட வாழ்க்கை ஆ) மீண்டெழுதலின் ரகசியம்
இ) சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள் ஈ) அதன்பிறகும் எஞ்சும்
**விடை: இ) சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்**

3. 'ஆலாந்துறை' என்ற கிராமம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
அ) மதுரை ஆ) திருநெல்வேலி
இ) கன்னியாகுமரி ஈ) கோவை (கோயம்புத்தூர்)
**விடை: ஈ) கோவை (கோயம்புத்தூர்)**

4. 'ஆலாந்துறை' என்ற கிராமத்தைச் சேர்ந்த கவிஞர் யார்?
அ) தமிழ்நதி ஆ) உமாமகேஸ்வரி
இ) சுகந்தி சுப்பிரமணியன் ஈ) தாமரை
**விடை: இ) சுகந்தி சுப்பிரமணியன்**

5. சுகந்தி சுப்பிரமணியம் சிறந்த கவிஞராக உருவாவதற்கு அவருக்கு நம்பிக்கை அளித்தவர் அவருடைய ........... .
அ) தந்தை ஆ) சகோதரர் இ) கணவர் ஈ) ஆசிரியர் **விடை: இ) கணவர்**

6. தனது முகம் ............. போனது என்று சுகந்தி சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.
அ) முகவரியற்று ஆ) இயல்பற்று இ) மகிழ்வற்று ஈ) நிம்மதியற்று
**விடை: அ) முகவரியற்று**

7. "எல்லா முகமும் அதனதன் கோணத்தில் இயல்பற்று ................. கிடந்தது"
அ) வாடி ஆ) இறுகி இ) மூடி ஈ) சுருங்கி **விடை: ஆ) இறுகி**

8. சுகந்தி சுப்பிரமணியனின் கவிதைகளில் நிரம்பியுள்ளவை ................. .
அ) தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்கள்
ஆ) வேலைக்குச் செல்லும் பெண்ணின் அனுபவங்கள்
இ) சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பெண்ணின் அனுபவங்கள்
ஈ) குடும்பத் தலைவியின் அனுபவங்கள் **விடை: அ) தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்கள்**

9. 'சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளவை
அ) கவிதைகள் ஆ) சிறுகதைகள் இ) புதினங்கள் ஈ) (அ), (ஆ) இரண்டும்
**விடை: ஈ) (அ), (ஆ) இரண்டும்**

10. 'புதையுண்ட வாழ்க்கை' என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்
அ) நகுலன் ஆ) உமா மகேஸ்வரி
இ) சுகந்தி சுப்பிரமணியன் ஈ) தமிழ்நதி
**விடை: இ) சுகந்தி சுப்பிரமணியன்**




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**குறுவினா**

1. **சுகந்தி சுப்பிரமணியனின் கவிதைத் தொகுப்புகள் யாவை?**
   (i) புதையுண்ட வாழ்க்கை
   (ii) மீண்டெழுதலின் ரகசியம்

2. **'முகம்' என்ற கவிதையின் மையக்கருத்து யாது?**
   'தனது தனித்தன்மையை இழந்துவிட்ட பெண் அதனை மீட்கத் துடிப்பது' முகம் என்ற கவிதையின் மையக் கருத்தாகும்.

3. **சுகந்தி சுப்பிரமணியம் – குறிப்பு வரைக.**
   (i) தமிழின் நவீன பெண் கவிஞர்களுள் ஒருவரான இவர், தனது கணவரான சுப்ரபாரதி மணியன் அளித்த நம்பிக்கையில் எழுதத் தொடங்கினார்.
   (ii) உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முழுமை செய்யாத நிலையில் திருமணமாகிச் சென்றவர்.
   (iii) தனித்து விடப்பட்ட பெண்களின் அனுபவங்களை கவிதைகளாக எழுதியுள்ளார்.
   (iv) கோவை மாவட்டம் புறநகரின் ஆலாந்துறை கிராமத்தைச் சேர்ந்தவர்.

4. **முகத்தைத் தொலைத்தவராகக் கருதப்படுபவர் யார்?**
   தனித்தன்மை என்ற அடையாளத்தை இழந்த ஒருவர், முகத்தைத் தொலைத்தவராகக் கருதப்படுகிறார்.

**சிறுவினா**



1. **'எனக்குள்ளே என்னைத் தொலைத்த பின்**
   **எனது முகம் முகவரியற்றுப் போனது' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**
   இடம் : 'சுகந்தி சுப்பிரமணியன் படைப்புகள்' என்ற நூலில் உள்ள **முகம்** என்ற கவிதையில் இந்த அடிகள் இடம்பெற்றுள்ளன.
   பொருள் : எனக்குள்ளாக என்னை நான் சுருக்கிக் கொண்ட பின்பு எனது முகம் முகவரியில்லாமல் போய்விட்டது.
   விளக்கம் : தன்னுடைய விருப்பங்களை வெளியில் கூறாமல் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டு வாழ்வதில் தன்னுடைய தனித்தன்மை என்ற அடையாளத்தை இழந்துவிட்டதாக ஆசிரியர் கூறியுள்ளார்.

2. **'எல்லா முகமும் அதனதன் கோணத்தில் இயல்பற்று இறுகிக் கிடந்தது' என்ற அடிகள் மூலம் கவிஞர் கூறியுள்ள கருத்தை விளக்குக.**
   சமூகத்தின் இறுக்கமான சூழ்நிலையில் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று ஒரு தனித்தன்மையின்றி இயல்பற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

☆ ☆ ☆

இயல் 8 — எல்லா உயிரும் தொழும் – மனிதம், ஆளுமை

# இரட்சணிய யாத்ரிகம்

– எச்.ஏ.கிருட்டிணனார் — கவிதைப்பேழை

**நூற்குறிப்பு**

'இரட்சணிய யாத்திரிகம்' என்பதன் பொருள் 'உயிர் தன்னைக் காக்க வேண்டி, இறைவனை நோக்கி செல்லும் பயணம்' என்பதாகும்.

ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் (Pilgrims progress) என்னும் ஆங்கில நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **நூல் அமைப்பு** | : இது பெரும் உருவகக் காப்பியம் ஆகும். |
| **காப்பியத்தின் பேருறுப்புகள்** | : 1. ஆதிபருவம், 2. குமாரபருவம், 3. நிதான பருவம், 4. ஆரணிய பருவம், 5. இரட்சணிய பருவம் |
| **காப்பியத்தின் சிற்றுருப்பு** | : படலம் |
| **பாடல்களின் எண்ணிக்கை** | : 3766 |


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| பெயர் | : ஹென்றி ஆல்பர்ட் கிருட்டிணனார் (எச். ஏ. கிருட்டிணனார்) |
| பெற்றோர் | : சங்கர நாராயணர் – தெய்வநாயகி அம்மாள் |
| ஊர் | : திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு என்ற ஊரின் அருகிலுள்ள ரெட்டியாபட்டி |
| காலம் | : 23.04.1827 முதல் 03.02.1900 வரை |
| ஆற்றிய பணி | : சாயர்புரம் பள்ளி தமிழாசிரியர் |
| படைப்புகள் | : இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய குறள், இரட்சணிய சரிதம், இரட்சணிய பால போதனை, போற்றித் திரு அகவல், இலக்கண சூடாமணி (இலக்கண நூல்) |
| சிறப்புப் பெயர் | : கிறித்துவக் கம்பர் |

## பாடப்பகுதி

குமாரபருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம்பெற்றுள்ள இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

### தெரிந்து தெளிவோம்

1. திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' என்னும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.
2. இந்நூல் 1894 ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

### பாடல் இறைமகனின் எளிய நிலை

1. **பாசம்என உன்னலிர் பிணித்தமை பகைத்த**
**நீசமனு மக்களை நினைத்து உருகும் அன்பின்**
**நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி**
**ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்** –1421

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| பிணித்தமை | – இறைமகனை பிறர் கயிற்றால் கட்டியது |
| பாசம் என உன்னலிர் | – அன்பு என்று எண்ணாதீர்கள் |
| பகைத்த | – பகை கொண்ட |
| நீச மனு மக்களை | – இழிவான மனிதர்களை |
| நினைந்து உருகும் | – நினைத்து இரக்கப்படும் தன்மை |
| அன்பின் நேசம் எனும் | – அன்பெனும் |
| வல்லியதை நீக்க | – உறுதியான கட்டிலிருந்து விடுபட |
| வசம் இன்றி | – வழியில்லாமல் |
| ஓர் ஏழையென | – ஓர் ஏழையைப் போல |
| ஈசன் மகன் நின்றனர் | – இறைமகன் நின்றார் |
| ஓர்மின் | – ஆராய்ந்து பாருங்கள் |

**பொருளுரை :**

இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்ற செயலானது, இயல்பாக மனிதர்களிடம் காட்டும் அன்பான செயல் என்று எண்ண வேண்டாம். தம் மீது பகைகொண்டு தன்னை இழிவுப்படுத்திய இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் துன்பப்படுவார்களே என்று எண்ணி, அவர்களுக்காக இரக்கப்படுகின்ற தன்மையே ஆகும். அந்த அன்பு எனும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல், எந்த உதவியையும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல் இறைமகன் நின்றதை எண்ணிப் பாருங்கள்.

**விரிவான விளக்கம் :**

பாவத்தில் கட்டுண்டு கிடந்த மக்களை நல்வழிப்படுத்த முயற்சி செய்த இயேசுபிரானின் மீது வீண்பழி சுமத்தி அவரைக் கயிற்றால் கட்டி, இழிவான வார்த்தைகளைப் பேசி நீதிமன்றத்திற்கு இழுத்து வருகின்றனர். தன்னை துன்பப்படுத்திய மக்களுக்காக, அவர்கள் தம் பாவச் செயல்களுக்குத் தண்டனை அனுபவிப்பார்களே என்று எண்ணி, இயேசு அவர்கள் மீது இரக்கம் கொள்கிறார்.

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. உன்னலிர் – எண்ணாதீர்கள் | 4. நேசம் – அன்பு |
| 2. பிணித்தமை – கட்டியமை | 5. வல்லியதை – உறுதியை |
| 3. நீச – இழிந்த | 6. ஓர்மின் – ஆராய்ந்து பாருங்கள் |

எல்லா உயிரும் தொழும்



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. பகைத்த, நீக்க – பெயரெச்சங்கள் | 3. நினைந்து – வினையெச்சம் |
| 2. உன்னலிர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று | 4. ஓர்மின் – ஏவல் பன்மை வினைமுற்று |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**பகைத்த – பகை + த் + த் + அ**
பகை – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**நீக்க – நீக்கு + அ**
நீக்கு – பகுதி
அ – பெயரெச்ச விகுதி

**நினைந்து – நினை + த்(ந்) + த் + உ**
நினை – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**புணர்ச்சி விதி :**

**ஏழையென** – ஏழை + என இது **உடம்படுமெய் புணர்ச்சி** ஆகும்.

**விதிகள்:** ஏழை + என

(i) '**இஈஐ வழி யவ்வும்**' என்ற விதிப்படி இடையில் யகரம் தோன்றி **ஏழை + ய் + என** என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **ஏழையென** என்றானது.



**பாடல்**

2. **பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி**
**ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற**
**வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்**
**நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி** –1448

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| பாதகர் குழுமி | – கொடியவர்கள் ஒன்று கூடி |
| சொற்ற பழிப்புரை | – கூறிய இகழ்ச்சி மொழி |
| என்னும் கொள்ளி | – என்ற நெருப்புக் கொள்ளியானது |
| ஏதமில் | – குற்றமில்லாத |
| கருணைப் பெம்மான் | – இரக்கமுடைய இறைமகன் |
| இருதயத்து ஊன்ற ஊன்ற | – இதயத்தில் அழுந்த |
| வேதனை உழந்து | – மிகுந்த வேதனையடைந்து வருந்தி |
| சிந்தை வெந்து | – மனம் நோக |
| புண்பட்டார் அல்லால் | – புண்பட்டாரே அல்லாமல் |
| நோதகச் சினந்து ஓர் | – தன்னை வேதனைப் படுத்தியவர்கள் மீது கோபப்பட்டு ஒரு |
| மாற்ற நுவன்றிலர் | – மறுபேச்சு எதுவும் பேசாமல் நின்றார் |
| கரும நோக்கி | – தான் வந்த செயல் நிறைவேறுவதற்காக |

**பொருளுரை :**

கொடியவர்கள் ஒன்றுகூடிக் கூறிய இகழ்ச்சி மொழி என்னும் தீக்கொள்ளியானது குற்றமில்லாத அருள் நிறைந்த இறைமகன் இதயத்தில் அழுந்தியது. அதனால் அவர் மிகுந்த வேதனையுற்று மனம் நொந்து புண்பட்டாரே அல்லாமல் தன்னைத் துன்புறுத்தியவர்கள் மீது சினம் கொண்டு, ஒரு மறு சொல் கூட கூறாமல் நின்றார். தாம் கருதி வந்த வேலை நிறைவேறுவதற்காக அவர் அமைதி காத்தார்.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**விரிவான விளக்கம் :**

பாவம் செய்கின்ற மக்களை அதிலிருந்து மீட்க வேண்டும் என்று பரமபிதா தனக்குக் கட்டளையிட்டு இந்தப் பூமிக்கு அனுப்பி வைத்த வேலை நிறைவேற வேண்டுமே என்பதற்காக தன்னை துன்பப்படுத்தியவர்கள் மீது கோபம் கொண்டு வருந்தக் கூடிய சொல் எதையும் கூறாமல், இயேசு அமைதியாக நின்றார்.

**அருஞ்சொற்பொருள் :**

| | |
|---|---|
| 1. பாதகர் – கொடியவர் | 5. ஊன்ற – அழுந்த |
| 2. குழுமி – ஒன்று கூடி | 6. மாற்றம் – சொல் |
| 3. பழிப்புரை – இகழ்ச்சியுரை | 7. நுவன்றிலர் – கூறவில்லை |
| 4. ஏதமில் – குற்றமில்லாத | |

**இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| 1. சொற்ற – பெயரெச்சம் | 3. ஊன்ற ஊன்ற – அடுக்குத்தொடர் |
| 2. பாதகர் – வினையாலணையும் பெயர் | 4. வெந்து, நோக்கி – வினையெச்சங்கள் |

**புணர்ச்சி விதி :**

**பழிப்புரை** – பழிப்பு + உரை

இது **குற்றியலுகரப் புணர்ச்சி** ஆகும்.

**விதிகள்:** பழிப்பு + உரை

1. '**உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்**' என்ற விதிப்படி **பழிப்ப் + உரை** என்றானது.
2. '**உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **பழிப்புரை** என்றானது.

**பாடல்** **ஆளுநர் முன் நிறுத்துதல்**

3. **எண்ணமிட்டவர் பொந்தியு பிலாந்தேனும் இறைமுன்**
**அண்ணலைத் தனி நிறுவவும் ஆக்கினைத் தீர்ப்புப்**
**பண்ணவும் என நிண்ணயம் பண்ணினர் பகைகொண்டு**
**ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க!** –1464

**சொல்லும் பொருளும் :**

எண்ணமிட்டவர் – இறைமகனைக் கொல்ல வேண்டும் என்று எண்ணம் கொண்டவர்கள்
பகை கொண்டு – பகை உணர்வுடன்
பொந்திய பிலாத்தேனும் – போந்திய பிலாத்து என்னும்
இறைமுன் – ஆளுநர் முன்னர்
அண்ணலைத் தனி நிறுவவும் – பெருந்தகையரான இறைமகனைத் தனியே நிறுத்தினர்
ஆக்கினைத் தீர்ப்புப் பண்ணவும் – அவருக்குத் தண்டனைப் பெற்றுத் தரவேண்டும்
என நிண்ணயம் பண்ணினர் – என்பதில் உறுதியாக இருந்தனர்
வறுங் கூவலுக்கு – வற்றிய சிறிய கிணற்றுக்குள்
உததியை ஒடுக்க – கடலை அடக்கி வைக்க
ஒண்ணுமோ – முடியுமோ?

**பொருளுரை :**

பெருந்தகையரான இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் பகை உணர்வுடன், போந்திய பிலாத்து என்னும் ஆளுநர் முன் தனியாக நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத் தரவும் உறுதியாக இருந்தனர். வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா? முடியாது.

**விரிவான விளக்கம் :**

இறைமகன் மீது பழி சுமத்திய கொடியவர்கள் அவருக்குத் தண்டனைப் பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் அந்நகரின் ஆளுநராக இருந்த போந்திய பிலாத்துவின் முன் நிறுத்தினர்.

வற்றிய கிணற்றுக்குள் கடலை அடக்க முடியாது. அதுபோல இறைமகனுக்கு யாராலும் தண்டனை தரமுடியாது. அவராகவே தாம் கருதி வந்த வேலை முடிவதற்காக கட்டுப்பட்டால் மட்டுமே முடியும்.


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

**சிறுவினா**

**1. 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று பழமொழி நானூறு கூறும் கருத்து யாது?**

(i) முல்லைக்கொடி படரத் தேர் தந்த பாரியின் செயலும், மயிலுக்குத் தன் ஆடையைத் தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்யப்பட்டவையல்ல.

(ii) இஃது அவர்களின் ஈகை உணர்வின் காரணமாகச் செய்யப்பட்டதேயாகும். இச்செயலே இவர்களின் பெருமைக்குப் புகழ் சேர்ப்பதாகிவிட்டது.

(iii) இதையே 'பழமொழி நானூறு' அறிமடமும் சான்றோர்க்கு அணி என்று கூறுகிறது.

**2. தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல் குறிப்பு வரைக.**

(i) புறநானூறு குறிப்பிடும் மற்றொரு வள்ளல் குமணன். இவன் முதிர மலையை (பழனி மலைத் தொடர்களில் ஒன்று) ஆட்சி செய்த குறுநில மன்னனாவான். தன் தம்பியாகிய இளங்குமணனிடம் நாட்டைக் கொடுத்துவிட்டுக் காட்டில் மறைந்து வாழ்ந்தான். இளங்குமணன் அண்ணனின் தலையைக் கொய்து தருவோர்க்குப் பரிசில் அறிவித்திருந்தான்.

(ii) அப்போது தன்னை நாடிப் பரிசில் பெற வந்த பெருந்தலை சாத்தனார் எனும் புலவர்க்குக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லாமையால், தன் இடைவாளைத் தந்து தன் தலையை அரிந்து சென்று இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச்செல்லுமாறு கேட்டுக்கொண்டான்.

(iii) இதனால் இவன் 'தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல்' என்று போற்றப்படுகிறான். புறநானூறு 158–164,165 ஆகிய பாடல்களிலும் இவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

**3. 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற நூலில் மா.இராசமாணிக்கனார் 'சிறுபாணன்' பயணம் செய்த வழியை எவ்வாறு கூறியுள்ளார்?**

(i) சிறுபாணன் **நல்லூர்** என்ற இடத்தில் தன் பயணத்தைத் தொடங்கி 8 கல் தூரம் பயணம் செய்து **எயிற்பட்டணத்தை** அடைந்தான்.

(ii) எயிற்பட்டணத்திலிருந்து 12 கல் தூரம் பயணம் செய்து **வேலூர்** சென்றான்.

(iii) வேலூரிலிருந்து 11 கல் தூரம் பயணம் செய்து **ஆமூரை** வந்தடைந்தான்.

(iv) ஆமூரிலிருந்து 6 கல் தூரம் பயணம் செய்து **கிடங்கில்** என்ற ஊருக்கு வந்து தன் பயணத்தை முடித்துக் கொண்டான்.

☆ ☆ ☆

இயல் 8 — எல்லா உயிரும் தொழும் – மனிதம், ஆளுமை

# கோடைமழை

– சாந்தா தத்

விரிவானம்

**பாடப் பகுதி**

அமுதசுரபி என்ற மாத இதழில் வெளியான சாந்தா தத் அவர்கள் எழுதிய 'கோடைமழை' என்ற சிறுகதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

**பாடச் சுருக்கம்**

ஆறுமுகம் என்ற முதியவர், தனது மகனும் மருமகளும் இறந்துவிட்ட பின்பு மகனின் ஆறுமாதக் குழந்தையை வைத்து கொண்டு மிகவும் துன்பப்பட்டார். குழந்தையைப் பராமரிப்பது வயதான காலத்தில் அவருக்குக் கடினமாக இருந்தது.

அந்த ஊரில் டீக்கடை வைத்திருந்த பாபு என்பவர், குழந்தையில்லாத ஒரு தம்பதியர் அந்தக் குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள முன்வந்திருப்பது குறித்து ஆறுமுகத்திடம் கூறினார். ஆனால் தன்னுடைய பேரக்குழந்தையைப் பிரிய மனமில்லாத ஆறுமுகம் தத்துக் கொடுக்க மறுத்துவிட்டார்.

ஒருநாள் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே, மருத்துவமனைக்கு குழந்தையை எடுத்துச் சென்றார். அழுகையை நிறுத்தாத குழந்தையைப் பார்த்துக் கொள்ள மிகவும் சிரமப்பட்டார். தனக்கும் வயதாகிவிட்டது,





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

தனக்குப் பின் அந்தக் குழந்தையை யார் பார்த்துக் கொள்வார்கள் என்ற சிந்தனை அவருக்குள் தோன்றியது. குழந்தைக்குக் கண்டிப்பாக பெற்றோர் அரவணைப்பு தேவை என்பதை உணர்ந்து கொண்டார்.

பாபுவிடம் அந்தத் தம்பதியரை மறுநாள் வரும்படி கூறினார். குழந்தையைப் பிரிவது தனக்குத் துன்பத்தைத் தரும் என்றாலும், குழந்தை நல்லபடியாக வளரும் என்பதால் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

மறுநாள் அந்தத் தம்பதியர் வந்தனர். அவர்களைப் பார்த்ததும் அவர் மனத்தில் நிம்மதி ஏற்பட்டது. அவர்கள் மிகவும் நல்லவர்களாக இருந்தனர். அவர்கள் ஆறுமுகத்திடம் தங்கள் வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்தனர். மேலும் அவரையும் தங்கள் கூட வந்து இருக்குமாறு வேண்டினர். அவர் கூட இருந்தால் தங்கள் மூவருக்கும் பெரிய துணையாக இருக்கும் என்றும் கூறினார்கள்.

எதிர்பாராத ஆனந்தத்தால் கண்ணீர் மல்க, ஒரே நாளில் தன்னுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்ததை எண்ணி, அவர்களை நோக்கி கைகூப்பினார் அந்த முதியவர்.

**ஆசிரியர் குறிப்பு**

**பெயர்** : சாந்தா தத்

**சொந்த ஊர்** : காஞ்சிபுரம்

**வாழிடம்** : ஹைதராபாத்

**பிற தகவல்கள் :**

(i) சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என இலக்கியத் துறையில் தன் பங்களிப்பை செய்து வருகிறார்.

(ii) பல விருதுகளைப் பெற்றுள்ள இவர் ஹைதராபாத்தில் வெளியாகும் **'நிறை'** என்ற மாத இதழின் ஆசிரியராக உள்ளார்.

(iii) **'திசை எட்டும்'** என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார்.

(iv) இவருடைய மொழிபெயர்ப்புகளை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது.

(v) அமுதசுரபியில் வெளியான **'கோடை மழை'** என்னும் சிறுகதை **'இலக்கியச் சிந்தனை'** அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதினைப் பெற்றுள்ளது.

(vi) இவருடைய கதைகளில் **'மனிதநேயம்'** என்ற பண்பு வெளிப்படும்.

## கற்பவை கற்றபின்

**1. பொது இடங்களில் நீவிர் பார்த்த மனிதநேய நிகழ்வை வகுப்பறைச் சூழலில் பகிர்ந்து கொள்க.**

நானும் என் நண்பனும் கல்லூரிக்குச் சென்று கொண்டு இருந்தோம். அப்போது சாலையில் வயதான பாட்டி நடந்து வந்தார். திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்ததால் தலையில் அடிபட்டு இரத்தம் வெள்ளமாக ஓடியது. நானும் என் நண்பனும் பயந்து விட்டோம். ஆனால் 40 வயது மதிக்கத்தக்க வகையில் வெள்ளை சட்டையும் கறுப்பு பேண்ட்டும் அணிந்திருந்தார் ஒருவர். அவர் அந்த பாட்டியைத் தூக்கி தான் வைத்திருந்த கைக்குட்டையால் காயம்பட்ட இடத்தில் கட்டினார். அவரது சட்டை, பேண்ட், கை, கால்கள் எல்லா இடங்களிலும் இரத்தமாக மாறியது.

அவர் அந்தப் பாட்டியை அருகிலிருந்த அரசு மருத்துவமனையில் சேர்த்தார். அந்தப் பாட்டியை பரிசோதனை செய்த மருத்துவர் விரைவாக இரத்தம் வேண்டும் என்றும் இல்லையென்றால் பாட்டி உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்றும் கூறவே, அந்த மனிதர் சற்றும் யோசிக்காமல் தன்னுடைய இரத்தத்தைக் கொடுக்க விழைந்தார். பாட்டியின் இரத்தமும் இவரது இரத்தமும் ஒரே குரூப் என்று கண்டறியப்பட்ட பிறகு பாட்டிக்கு இரத்த தானம் செய்தார்.

அந்தப் பாட்டி கண் விழிக்கும்வரை மருத்துவமனையிலேயே இருந்தார். கண் விழித்துப் பார்த்ததும் அவருடைய முகவரியைக் கேட்டு அவருடைய பிள்ளைகளுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்துவிட்டு கிளம்பினார். இந்த மனிதநேய செயலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தோம்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. 'கோடைமழை' என்ற சிறுகதையின் ஆசிரியர் .............. .**

அ) சாந்தா தத் ஆ) சுகந்தி சுப்பிரமணியன்

இ) அனுராதா ரமணன் ஈ) சிவசங்கரி

விடை: அ) சாந்தா தத்

2. ‘கோடைமழை’ என்ற சிறுகதை வெளியான தமிழ் இதழின் பெயர் .................... .
அ) திசை எட்டும் ஆ) அமுதசுரபி
இ) கல்கி ஈ) கணையாழி
விடை: ஆ) அமுதசுரபி

3. “கோடைமழை” என்ற சிறுகதை பெற்று விருது ............. .
அ) சாகித்திய அகாதெமி விருது ஆ) ஞானபீட விருது
இ) இலக்கிய சிந்தனை அமைப்பின் விருது ஈ) தமிழ் வளர்ச்சித் துறை விருது
விடை: இ) இலக்கிய சிந்தனை அமைப்பின் விருது

4. சாந்தா தத் எந்த ஊரைச் சேர்ந்தவர்?
அ) தஞ்சாவூர் ஆ) காஞ்சிபுரம்
இ) திருநெல்வேலி ஈ) புதுக்கோட்டை
விடை: ஆ) காஞ்சிபுரம்

5. சாந்தா தத் ஆசிரியராகப் பணியாற்றும் இதழின் பெயர் ..................... .
அ) திடை எட்டும் ஆ) அமுத சுரபி
இ) நிறை ஈ) மனிதம்
விடை: இ) நிறை

6. ‘நிறை’ என்ற மாத இதழ் எங்கிருந்து வெளியாகிறது?
அ) ஹைதராபாத் ஆ) செகந்திராபாத்
இ) குண்டூர் ஈ) திருப்பதி
விடை: அ) ஹைதராபாத்

7. ‘திசை எட்டும்’ என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் ........ . அரையாண்டுத் தேர்வு 2019
அ) தமிழ்நதி ஆ) சாந்தா தத்
இ) நகுலன் ஈ) உத்தமசோழன்
விடை: ஆ) சாந்தா தத்

8. சாந்தா தத் அவர்களின் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ள அமைப்பு
அ) ஞான பீடம் இலக்கியப் பேரவை ஆ) அகில இந்திய எழுத்தாளர் சங்கம்
இ) சாகித்திய அகாதெமி ஈ) உலகத் தமிழாய்வுச் சங்கம்
விடை: இ) சாகித்திய அகாதெமி

9. சாந்தா தத் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பு ............ .
அ) தன்னம்பிக்கை ஆ) மனிதநேயம்
இ) உழைப்பாளர்களின் வேதனைகள் ஈ) பெண்களின் முன்னேற்றம்
விடை: ஆ) மனிதநேயம்

10. ‘ஏதிலிக் குழந்தைகள்’ பொருள் யாது?
அ) தாய் தந்தை இல்லாத குழந்தைகள் ஆ) மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள்
இ) உடல்நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஈ) குழந்தைத் தொழிலாளர்கள்
விடை: அ) தாய் தந்தை இல்லாத குழந்தைகள்

## குறுவினா

1. ‘கோடை மழை’ – என்ற சிறுகதையின் மையக் கருத்து யாது?
ஏதிலிக் குழந்தைகள் மற்றும் ஏதிலி முதியோர்களை அரவணைத்துக் காப்பாற்றுவது மனிதநேயம் ஆகும்.

2. ஆறுமுகம் குழந்தையை தத்துக் கொடுக்க முதலில் ஏன் மறுத்தார்?
பெற்றோர் இல்லாத தன் பேரக் குழந்தையைப் பிரிந்து இருக்க முடியாத நிலையினால் குழந்தையைத் தத்துக் கொடுக்க மறுத்தார்.

3. ஆறுமுகத்தின் மனமாற்றத்திற்கான காரணங்கள் யாவை?
தன்னுடைய தள்ளாமை மற்றும் குழந்தைக்குப் பெற்றோரின் அரவணைப்பு தேவை ஆகியவை ஆறுமுகத்தின் மனமாற்றத்திற்கான காரணங்களாகும்.

4. ‘கோடைமழை’ கதையில் மனிதநேயம் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது?
ஆறுமுகத்தின் பேரக் குழந்தையைத் தத்தெடுக்க வந்த தம்பதியர், ஆறுமுகத்தையும் அரவணைத்து உடன் அழைத்துச் சென்றனர்.

☆ ☆ ☆

எல்லா உயிரும் தொழும்


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


எல்லா உயிரும் தொழும் - மனிதம், ஆளுமை

# இயல் 8

# குறியீடு

இனிக்கும் இலக்கணம்

**பாடச் சுருக்கம்**

(i) கவிதைத் துறையில் வழங்கி வரும் **குறியீடு** என்ற உத்தி ஆங்கிலத்தில் **'Symbol'** எனப்படுகிறது. இதற்கு 'ஒன்றுசேர்' என்பது பொருளாகும்.

(ii) இரண்டு பொருள்களுக்கு இடையேயுள்ள உருவ ஒற்றுமை, அருவமான பண்பு போன்ற உறவுகள் குறியீடுகளாகக் கருதப்படுகின்றன.

(எ.கா)

| பொருள் | குறியீடு |
|---|---|
| பெண் | விளக்கு |
| வெண்புறா | சமாதானம் |
| தராசு | நீதி |
| சிங்கம் | வீரம் |

(iii) ஒரு பொருளை குறிப்பால் உணர்த்தும் மற்றொரு பொருள் **குறியீடு** ஆகும்.

(iv) குறியீட்டால் பொருளை உணர்த்துவது **குறியீட்டியம்** (Symbolism) ஆகும்.

(v) 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

(vi) **இக்கோட்பாட்டை விளக்கி வளர்த்தவர்கள்:** பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே.

(vii) தமிழ் மொழியில் **தொல்காப்பியர் காலம்** முதலே இக்கோட்பாடு இருந்து வந்துள்ளது.

(viii) சங்க இலக்கியத்தில் குறியீடுகள் **'உள்ளுறை உவமம்'** என்ற உத்தியில் இடம்பெற்றுள்ளன.

(ix) "தமிழின் செல்வாக்கினால்தான் வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது" – **ஹார்ட்டின் கூற்று**

(x) உவமையை மட்டும் கூறி, உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு விட்டுவிடுவது உள்ளுறை உவமத்தின் அடிப்படையாகும். இதுவே குறியீட்டின் அடிப்படையும் ஆகும்.

**எ.கா: 1** **கலித்தொகை**

**"உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்**
**கறுவு கொண்டு, அதன் முதல் குத்திய மதயானை**
**நீடு இரு விடர் அகம் சிலம்பக் கூய்த் தன்**
**கோடு புய்க்கல்லாது, உழக்கும் நாட! கேள்"** – **கபிலர்**

**பொருளுரை:**

"பூத்திருந்த வேங்கை மரமானது, புலியைப் போல் காட்சியளித்ததால், அதனைப் புலி என்று எண்ணிய யானை, கோபத்தால் அந்த மரத்தைக் குத்தியது. அதனுடைய தந்தம் மரத்தில் ஆழப் பதிந்து விட்டது. தந்தத்தை எடுக்கமுடியாமல் மலைக்குகைகளில் எதிரொலிக்கும்படி யானை முழங்கியது. அத்தகைய நாட்டை உடையவனே! கேள்" என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

**உள்ளுறை உவமம் பயின்று வந்துள்ள முறை :**

| நிகழ்வு | குறியீடு |
|---|---|
| 'தலைவியை திருமணம் செய்க' என்ற தோழியின் கூற்றை தலைவன் மறுத்தல் | யானை வேங்கை மரத்தை குத்தியது |
| தோழியின் கூற்றை வேண்டாததாக எண்ணி தலைவன் வருந்துதல் | தந்தத்தை எடுக்க இயலாமல் யானை தவிப்பது |


Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


**ஆறுமுகத்தின் நம்பிக்கை :**

பாபுவுடன் வந்த தம்பதியினரைப் பார்த்தபோது, பிள்ளைப் பாக்கியம், ஏக்கம்... தவிப்பு, எதிர்பார்ப்பு அத்தனையும் அம்முகங்களில் உணர்ந்தபோது பிள்ளையின் பாதுகாப்புக் குறித்த நம்பிக்கை வலுத்தது. அவருடைய நெருடல் எல்லாம் பிள்ளையைப் பிரிந்து இருக்க வேண்டுமே எனும் உதிரத்தை உறைய வைக்கும் உறுத்தல் மட்டுமே இருந்தது.

**வந்தவரின் பரிவுரை :**

“உங்களுக்குக் கவலையே வேணாம் ஐயா!” அப்பா என அழைக்கப்பட இருப்பவன் ஓரிரு கணம் போல் தயங்கி, “ஐயா ரொம்ப ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்து இருக்கிறீங்க. நன்றி கூறுவதைவிட உதவி கேட்கிறேன். நீங்களும் எங்களுடன் வந்துவிடுங்கள். எங்க மூணு பேருக்குமே துணையா இருக்கும். நீங்க எதுக்கும் தயங்காதீங்க. சரின்னு சொல்லுங்க ஐயா!” என்றார்.

**முடிவுரை :**

இறைஞ்சும் தன்மையில் கேட்டதும் ஆறுமுகம் அதிர்ந்து போனார். யாருக்கு யார் உதவி? மலை போன்ற அத்தனை பிரச்சனைகளும் எப்படி இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன், தன்னையும் சுவீகரித்துக் கொண்டு என எண்ணியபடி கண்ணீருடன் கைகூப்பினார் ஆறுமுகம். பெற்றோர் இல்லாத பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாத பெற்றோரும் ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தான். அவர்களையும் ஏற்று அரவணைக்கும் இக்கதைமாந்தர் போல் இருந்தால் மனித நேயம் மேம்படும்.

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**


வ.சுப. மாணிக்கம்

பர்மாவில் ரங்கூன் நகரில் உள்ளவொரு கடையில் அடிப்பையனாகப் (உதவியாள்) பணியாற்றினான் ஒரு சிறுவன். அவனிடம், கடை முதலாளி ஒரு பெயரைக் குறிப்பிட்டு, அந்த நபர் வந்து தன்னை எங்கே என்று கேட்டால், ‘முதலாளி இல்லை’ என்று சொல்லுமாறு வற்புறுத்தினார். அந்தச் சிறுவனோ, நீங்கள் வெளியிலிருந்தால் அவ்வாறு கூறலாம். இல்லாதபோது எப்படிப் பொய் சொல்வது? சொல்ல மாட்டேன் என்று பிடிவாதமாகக் கூறினார். அவர், வ.சுப. மாணிக்கம்.

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் ‘தமிழ் இமயம்‘ என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப. மாணிக்கம். ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற கொள்கையைப் பறைசாற்றுவதற்காகத் ‘தமிழ்வழிக் கல்வி இயக்கம்‘ என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர். அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றியபோது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன் அங்குத் தமிழாய்வு நடைபெறவும் வழிவகுத்தார். திருவனந்தபுரத்தின் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளராகப் பணிபுரிந்தபோது தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

சங்கப் பாடல்களின் நுட்பங்களைக் கட்டுரைகளாக எழுதுவதில் ஆற்றல் மிக்கவரான இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர். தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும் உவமைகளையும் உருவாக்கித் தருவதில் தனி ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தவர். ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமையான அவருக்குத் தமிழக அரசு அவருடைய மறைவிற்குப் பிறகு, திருவள்ளுவர் விருது வழங்கியதுடன் 2006ஆம் ஆண்டு அவருடைய நூல்களை நாட்டுடமையாக்கிச் சிறப்புச் செய்தது.

அவருடைய தமிழ்த்திறத்துக்கு ஒரு பதம்.

“ஐந்து கோடித் தமிழர் தொகை இருந்தும், ஆயிரம் படிகள் விற்பதற்கு மாமாங்கம் ஆகின்றது. வாங்காற்றல் மக்களிடம் இல்லை என்று சொல்லுதற்கில்லை. எத்துணையோ புதுக்கோலங்கட்கும் கேளிக்கைகட்கும் தலைகால் தெரியாமல் செலவு செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். நூல்கள் வாங்கும் அறிவுப் பழக்கத்தை மக்களிடம் பரப்ப வேண்டும்.”

### வினாக்கள் :

**1. ‘தமிழ் இமயம்’ என்று தமிழறிஞர்களால் போற்றப்பட்டவர் .................. .**

அ) வ.சுப.மாணிக்கம் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) இரா.பி.சேதுப்பிள்ளை ஈ) ந.மு.வேங்கடசாமி

**விடை: அ) வ.சுப.மாணிக்கம்**




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# மொழித்திறன் பயிற்சிகள்

## கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக

1. **ஒடம்பு வலிக்கு வெண்ணீர் ஒத்தடம் கொடுத்தாங்க.**
உடல் வலிக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுத்தார்கள்.

2. **காத்தாலேயே கண்ணாம்பூச்சி ஆட்டம் ஆடலாமா?**
காலையிலேயே, கண்ணாம் பொத்தி ஆட்டம் ஆடலாமா?

3. **ஒம் புள்ள ரொம்ப அமக்களம் பண்றான்.**
உன் பிள்ளை, நிரம்ப அமர்க்களம் பண்ணுகிறான்.

4. **மூணு கேழ்வி, கேட்டதும் திருடன்தடமாட்டமடைந்தான்.**
மூன்று கேள்வி கேட்டதும், திருடன் தடுமாற்றமடைந்தான்.

5. **வலது பக்கம் சுவற்றில் எழுதாதே.**
வலப் பக்கச் சுவரில் எழுதாதே.

6. **மழைக்குக் கொடை பிடிச்சான்**
மழைக்குக் குடை பிடித்தான்.

7. **நம்ம நாட்டுல சோத்துச் சண்டையே பெரிசா இருக்கு.**
நம் நாட்டிலே, சோற்றுச் சண்டையே பெரிதாக இருக்கிறது.

8. **குளந்த ஏன் அளுவுறா?**
குழந்தை, ஏன் அழுகிறான்.

9. **அவிக வந்தாதே.**
அவர்கள் வந்தார்கள்.

10. **தெருவுல அமக்களம் நடக்குது.**
தெருவில் அமர்க்களம் நடக்கிறது.

11. **நெல்லு, நல்லா விளைஞ்சிருக்கு.**
நெல், நன்றாக விளைந்திருக்கிறது.

12. **கஞ்சித் தண்ணி இருந்தா குடும்மா.**
கஞ்சித் தண்ணீர் இருந்தால் கொடு அம்மா.

13. **பசி வந்தா பத்தும் பறந்து பூடும்.**
பசி வந்தால், பத்தும் பறந்துவிடும்.

14. **பொளப்பு நடக்கிறது ரொம்ப கஷ்டம்.**
பிழைப்பு நடத்துவது மிகவும் கடினம்.

15. **ஆத்துல தண்ணி கலங்கலா போவுது.**
ஆற்றில், தண்ணீர் கலங்கலாகப் போகிறது.

16. **ஒளச்சாத்தான் உசரலாம்.**
உழைத்தால்தான் உயரலாம்.

17. **கதவைத் தாப்பாள் போட மறந்துட்டேன்.**
கதவைத் தாழ்ப்பாள் போட மறந்து விட்டேன்.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## ஏற்ற வினா அமைத்து எழுதுக

1. **'இரட்டைக் காப்பியங்கள் என்பவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும்.**
இரட்டைக் காப்பியங்கள் யாவை?

2. **திருக்குறள் உலகப்பொதுமறை என அழைக்கப்படுகிறது.**
உலகப்பொதுமறை என அழைக்கப்படும் நூல் எது?

3. **கயல்விழி தன்தாயிடம் தானும் மதுரை வருவதாகக் கூறினாள்.**
கயல்விழி தன் தாயிடம் என்ன கூறினாள்?

4. **எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்களாகும்.**
சங்க இலக்கியங்கள் யாவை?

5. **உழுதுண்டு வாழ்பவரே வாழ்வார்.**
வாழ்வார் யார்?

6. **மணிமேகலையை இயற்றியது மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.**
மணிமேகலை இயற்றியது யார்?

7. **கம்பராமாயணம் ஆறு பிரிவுகளைக் கொண்டது.**
கம்பராமாயணம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது.

8. **பகைவரால் கைப்பற்ற முடியாத மதில் சூழ்ந்த அழகிய நகரம் ஜெருசலேம்.**
ஜெருசலேம் எப்படிப்பட்ட நகரம்?

9. **தாவீதன் போரிடச் சென்றவுடன அவ்விடத்தில் கூடியிருந்த மக்கள் பேரொலி உண்டாகுமாறு ஆரவாரம் செய்தனர்.**
தாவீதன் போரிடச் சென்றபோது அங்கு நிகழ்ந்தது யாது?

10. **தேம்பாவணியின் பாட்டுடைத்தலைவர் இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசை மாமுனிவர்.**
தேம்பவாணியின் பாட்டுடைத் தலைவர் யார்?

11. **கொன்ஸ்டன் என்னும் சொல்லுக்குப் பொருள் அஞ்சாதவன்.**
கொன்ஸ்டன் என்னும் சொல்லின பொருள் யாது?

12. **பாரதிதாசனின் பிசிராந்தையார் என்னும் நூல் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது.**
பாரதிதாசனின் எந்நூல் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது. (அ) பாரதிதாசனின் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல் எது?

13. **சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.**
சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

14. **அந்தாதி = அந்தம் + ஆதி எனப் பிரியும்.**
அந்தாதி எவ்வாறு பிரியும்?

15. **செய்யுளில் அடிதோறும் முதற்சீர் முதலெழுத்துத் தவிர, மற்ற எழுத்துகள் ஒன்றி வந்து வேறுவேறு பொருளைத் தருவது திரிபணி எனப்படும்.**
திரிபணி எனப்படுவது யாது?

16. **சைவ, வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியம் கொண்ட நூல் முக்கூடற்பள்ளு.**
சைவ, வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியம் கொண்ட நூல் எது?

17. **முதிர்ந்த மரப்பட்டைகள் முதலையின் உடல்போல் இருக்கும்.**
முதிர்ந்த மரப்பட்டைகள் எவ்வாறு இருக்கும்?

18. **உரைநடையின் சிக்கனமே கவிதை.**
உரைடையின் சிக்கனம் எது?

மொழித்திறன் பயிற்சிகள்

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com


# அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுதல்

| அரபு எண் | தமிழெண் | |
|---|---|---|
| 0 | 0 | ஓ! |
| 1 | க | கவிதா |
| 2 | உ | உணவை |
| 3 | ங | நன்றாக |
| 4 | ச | சமைத்து |
| 5 | ரு | ருசித்து |
| 6 | சு | சுடச்சுட |
| 7 | எ | என் |
| 8 | அ | அண்ணிக்கு |
| 9 | கூ | கூடுத்தாள் |
| 10 | க0 | |

(மேற்கண்ட சொற்களை நன்றாகப் படித்து முதல் எழுத்துக்களை நினைவில் வைக்க)

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 21 | உக | 41 | சக | 61 | சுக | 81 | அக |
| 2 | உ | 22 | உஉ | 42 | சஉ | 62 | சுஉ | 82 | அஉ |
| 3 | ங | 23 | உங | 43 | சங | 63 | சுங | 83 | அங |
| 4 | ச | 24 | உச | 44 | சச | 64 | சுச | 84 | அச |
| 5 | ரு | 25 | உரு | 45 | சரு | 65 | சுரு | 85 | அரு |
| 6 | சு | 26 | உசு | 46 | சசு | 66 | சுசு | 86 | அசு |
| 7 | எ | 27 | உஎ | 47 | சஎ | 67 | சுஎ | 87 | அஎ |
| 8 | அ | 28 | உஅ | 48 | சஅ | 68 | சுஅ | 88 | அஅ |
| 9 | கூ | 29 | உகூ | 49 | சகூ | 69 | சுகூ | 89 | அகூ |
| 10 | க0 | 30 | ங0 | 50 | ரு0 | 70 | எ0 | 90 | கூ0 |
| 11 | கக | 31 | ஙக | 51 | ருக | 71 | எக | 91 | கூக |
| 12 | கஉ | 32 | ஙஉ | 52 | ருஉ | 72 | எஉ | 92 | கூஉ |
| 13 | கங | 33 | ஙங | 53 | ருங | 73 | எங | 93 | கூங |
| 14 | கச | 34 | ஙச | 54 | ருச | 74 | எச | 94 | கூச |
| 15 | கரு | 35 | ஙரு | 55 | ருரு | 75 | எரு | 95 | கூரு |
| 16 | கசு | 36 | ஙசு | 56 | ருசு | 76 | எசு | 96 | கூசு |
| 17 | கஎ | 37 | ஙஎ | 57 | ருஎ | 77 | எஎ | 97 | கூஎ |
| 18 | கஅ | 38 | ஙஅ | 58 | ருஅ | 78 | எஅ | 98 | கூஅ |
| 19 | ககூ | 39 | ஙகூ | 59 | ருகூ | 79 | எகூ | 99 | கூகூ |
| 20 | உ0 | 40 | ச0 | 60 | சு0 | 80 | அ0 | 100 | க00 |

**சான்று :**

100 – க00
120 – கஉ0
589 – ருஅகூ
333 – ஙஙங
200 – உ00
150 – கரு0
460 – சசு0
300 – ங00
654 – சுருச
111 – ககக
400 – ச00
510 – ருக0
155 – கருரு




Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# கவிதைகள்

## வானவில்

இராமனின் கை வில் இலங்கையை அழித்தது
அர்ச்சுனன் கை வில் பாரதம் படைத்தது
அரசர்கள் கை வில் ஆபத்தை விளைத்தது
ஆயினும் ஓர்வில் அன்பினை வளர்த்தது!
வண்ணங்கள் நிறைந்த வில் எண்ணங்கள் நிறைந்தவில்
வானத்தில் உள்ளவில் வானவில் அந்தவில்
கன்னங்கள் கனியெனும் கன்னியர் புருவவில்
கார்முகில் கிழித்திடும் கனமழை அழைத்திடும்!

## அந்திமாலை (பிடிஎ–4)

மயக்கும் மாலைப் பொழுதினிலே
மதியம் வந்து தோன்ற
வியக்கும் படியே ஆச்சுதென்றே
வியந்து நாங்கள் கூற
நயக்கும் குயில்கள் பாடினவே
நன்றாய் மயில்கள் ஆடினவே
தயக்கம் காட்டி இரவே
தாங்கள் ஓடித் தூங்கினவே!

## முயற்சி

மரத்தில் தொங்கியது அழகிய கூடு
தூக்கணாங் குருவியின் முயற்சி கண்டு வியந்தேன்
சுவரின் மூலையில் பின்னலான வலை
சிலந்தியின் முயற்சி கண்டு வியந்தேன்
கற்காலம் மாறியது நவீன யுகமாய்
மனிதனின் முயற்சி கண்டு வியந்தேன்
வியந்தால் போதுமா வெற்றி வேண்டாமா?
தோல்வி விதையில் முயற்சியெனும் உரமிட்டு
வெற்றிப் பயிரை அறுவடை செய்ய
நான் தயாராகிவிட்டேன். நீங்கள்?

## உழைப்பு

உழைப்பு இல்லையேல்
உணவும், மகிழ்ச்சியும்
இல்லை இன்று
உழைத்தால் வயதான போது
உட்கார்ந்து உண்ணலாம்
உழைக்க வேண்டிய காலத்தில்
உழைக்கவில்லை என்றால்
ஓய்வு எடுக்க வேண்டிய
காலத்தில் உழைக்க வேண்டும்
உயிரினங்கள் கூட உழைக்கின்றன
கையிருந்தும் உழைக்காமல்
இருந்தால் வாழ்க்கை இல்லாமலாகும்.

## இயற்கை அன்னை

நிலமெனும் மடியினில் சுமந்து
நிலவெனும் அழகினைக் காட்டி
வானமெனும் தொட்டில் கட்டி
தென்றலெனும் தாலாட்டு பாடி
இயற்கை அன்னை வளர்க்கச்
செயற்கை கண்டு மயங்குவதேன்?

## கல்வி (பிடிஎ–4)

கல்வி நம் வாழ்வைச் சிறப்பிக்கும்
சிலையாய் நம்மைச் செதுக்கும் – நல்ல
கலையாய் நம்மை ஆக்கும்
கேள்வி கேட்கும் ஞானம் – அங்குப்
பதிலைக் கொடுக்கத் தோன்றும்
வேற்றுமை அகற்றும் பந்தம்.

## பூஞ்சோலை

இதயங்களை கவர்ந்து
இழுக்கும் பூஞ்சோலையே. . .
உன்னை இறைவன் படைத்தானா?
இயற்கை அன்னை படைத்தாளா?
சின்னஞ்சிறு குழந்தைகளுக்கும்
மகிழ்ச்சியை ஏற்படுத்தும் – நீ
சின்னஞ்சிறு வண்டினங்களுக்கும்
உணவளித்து அட்சயபாத்திரமாய்
விளங்குகிறாயே . . .
என்னே ! உன் பெருந்தன்மை?

## மழை (பிடிஎ–3)

பொய்யாமொழிப் புலவர் சொன்னது–பொய்யாகுமா?
நீயின்றி பயிரில்லை
பயிரின்றி உயிரில்லை
பாலூட்டி வளர்ப்பவள் மட்டுமல்ல–அன்னை
அமிழ்தம் போன்ற நீரைக் கொடுக்கிற
நீயும் ஓர் அன்னையே!
மழையாய்ப் பொழிந்து
ஆறுகளாய் ஓடி
கடலில் சங்கமித்து
வாழ்வியலைக் கற்றுத்தரும்
நீயும் ஓர் ஆசிரியையே!





www.surabooks.com

**திரண்ட கருத்து:**

குற்றமில்லாத நல்ல தன்மை உடைய வீணையை உருவாக்கி, அதை யாராவது புழுதியில் எறிவார்களா? சொல்வாய் சிவசக்தி, என்னை மிகுந்த அறிவாற்றலுடன் படைத்துவிட்டாய் இந்தத் தமிழ் மாநிலத்தைப் பயன் மிக்கதாக மாற்றும் ஆற்றல் தாராயோ? சொல்வாய் சிவசக்தியே. இந்தப் பூமிக்குச் சுமையாக வாழ செய்துவிடுவாயோ என்னை? சுவரில் அடித்த பந்து திரும்புவது போல, என் உடலானது உள்ளம் சொன்னபடி இயங்க வேண்டும். வஞ்சமில்லாத மனம் வேண்டும். தினமும் புதிதாய் மிளிரும் உயிர் வேண்டும். நெருப்பால் கேடு என்னைச் சூழ்ந்தாலும், சிவசக்தியே உன்னைப் பாடும் மனம் வேண்டும். குழப்பமில்லாத மனம் வேண்டும். நான் கேட்டதைக் கொடுப்பதில் உனக்கென தடை? எனப் பாரதியார் சக்தியைப் பாடிப் பரப்புகிறார்.

**மையக் கருத்து:**

நன்றாக என்னைப் படைத்தாய். நான் இந்த உலகிற்குப் பயன்படும்படி வாழவிடு. அதற்கேற்ற ஆற்றலைத் தா. நல்ல உள்ளமும், உடலும் கொடு. எத்தகைய துன்பம் ஏற்படினும் உன்னை. மறக்காமல் பாடும் மனம் கொடு என சிவசக்தியை நெஞ்சுருகப் பாடுகிறார் பாரதியார்.

**மோனை** : நல்லதோர், நலங்கெடங், நசையறு, நவமெனச், அசைவறு, அருள்வதில்

**எதுகை** : நல்லதோர், சொல்லடி, வல்லமை, விசையறு, நசையறு, தசையினைத்

**இயைபு** : கேட்டேன், கேட்டேன் என்ற இயைபுத்தொடை இப்பாடலில் வந்துள்ளது.

**அணி** : 'போல்' வெளிப்படையாக வந்துள்ளதால் உவமை அணி ஆகும்.

**சந்தச் சுவை** : இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு ஆகியவை பயின்று வந்துள்ளதால் இனிய சந்தம் நம் செவிகளுக்குத் தேனாக இப்பாடல் அமைந்துள்ளது.

## பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும்

### பிடிஎ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **"முயற்சி திருவினையாக்கும்"** பிடிஏ–2

**பழமொழி விளக்கம் :**

முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செயலை செய்து வந்தால் வாழ்வில் உயர்வு அடையாளம் என்பதே இப்பழமொழியின் விளக்கம்.

**வாழ்க்கை நிகழ்வு :**

சங்கீதா ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி படிப்பில் சுமார். ஆசிரியர் வகுப்பில் சங்கீதாவை எழுப்பி தமிழ் பாடத்தைப் படிக்கச் சொன்னார். அவள் தவறாக படித்ததைக் கேட்டு வகுப்பு மாணவிகள் சிரித்தனர். ஆனால் அவள் அதற்காக வெட்கப்படவில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகத்தை எடுத்து படித்துப் பார்த்தாள். பள்ளியில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக சங்கீதா தன் பெயரைக் கொடுத்த போது அனைத்து மாணவிகளும் அவளைப் பார்த்து ஏளனம் செய்தனர். இவளா பேசப் போகிறாள் என்று கூறி அவள் மனதைப் புண்படுத்தினர். வீட்டில் பேசிப் பழகினாள். நடந்த பேச்சுப் போட்டியில் சிறப்பாகப் பேசி முதல் பரிசைப் பெற்றாள். அனைவரும் அவளை பாராட்டினார்கள். முயற்சி செய்தால் முடியாத காரியம் ஒன்றும் இல்லை.

**நீதி:**

'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதை உணர்ந்து தொடர்ந்து முயற்சி செய்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதி.

2. **"சிறுதுரும்பும் பல்குத்த உதவும்"** பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019

**பழமொழி விளக்கம் :**

எந்தவொரு சின்னச் செயலுமே பயனுள்ளதாக அமையும் என்பதனை உணர வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு :**

நான் பள்ளியில் படிக்கும் போது என்னுடன் கந்தன் என்ற மாணவனும் படித்து வந்தான். ஓரளவு படிக்கும் மாணவன், ஆனாலும் தினந்தோறும் பள்ளிக்கு வந்து போகும் போது மாணவர்கள் பயன்படுத்தி வீணாக்கிய காகிதங்களைப் பொறுக்கிச் செல்வான்.

"ஏன்டா இந்தக் குப்பைக் காகிதங்களைப் பொறுக்கிற?" என்று நான் அவனிடம் கோபப்பட்டதுண்டு. ஆனால் கந்தன் சிரித்துக் கொண்டே அந்தக் காகிதத் துண்டுகளைத் தனது கூடைக்குள் அள்ளிச் செல்வான். நான் கூட





Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

# 12ஆம் வகுப்பு - பொது தேர்வு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு

அரசாணை (2t) எண். 13 (20-02-2018)

**மொத்த மதிப்பெண்கள் - 100**

எழுத்துதேர்வு 90 மதிப்பெண்கள் ← → அகமதிப்பீடு 10 மதிப்பெண்கள்

## அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு (அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்)

| மாணவர்கள் வருகைப் பதிவு<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள் | உள்நிலைத் தேர்வுகள்<br>அதிகபட்சம் 4 மதிப்பெண்கள் |
|---|---|
| 80 சதவீதத்திற்கு மேல் வருகை - 2 மதிப்பெண்கள்<br>75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை - 1 மதிப்பெண் | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். |
| **ஒப்படைவு/செயல்திட்டம்/களப்பயணம்<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** | **கல்வி இணைச் செயல்பாடுகள்<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** |
| ஒப்படைவு/ செயல்திட்டம்/களப்பயணம் இவை மூன்றில் ஏதேனும் ஒன்று - உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். | * கல்வி இணைச் செயல்பாடுகளுள் ஏதேனும் மூன்று |

## * கல்வி இணைச் செயல்பாடுகள்

1. மரம் வளர்த்தல்
2. இலக்கிய மன்றம்
3. கணித மன்றம்
4. இயற்பியல் மன்றம்
5. வேதியியல் மன்றம்
6. உயிரியல் மன்றம்
7. வணிகவியல் மன்றம்
8. பொருளியல் மன்றம்
9. வரலாற்று மன்றம்
10. அறிவியல் மன்றம் - அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள்
11. தேசிய பசுமைப்படை
12. சாரண சாரணியர் இயக்கம்
13. நாட்டு நலப் பணித் திட்டம்
14. தேசிய மாணவர் படை
15. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்
16. சுற்றுச்சூழல் மன்றம்
17. நுண்கலை மன்றம்
18. முதலுதவி மன்றம்
19. உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம்
20. நுகர்வோர் மன்றம்
21. கலாச்சார மன்றம்
22. நாடக மன்றம்
23. தொன்மை பாதுகாப்பு மன்றம்
24. தகவல் தொழில்நுட்ப மன்றம்
25. நூலக மன்றம்
26. இதழியல் மன்றம்
27. இசை மன்றம்
28. கவின் கலை மன்றம்
29. செஞ்சுருள் சங்கம்
30. வினாடி வினா மன்றம்
31. சாலைப் பாதுகாப்புப் படை
32. விளையாட்டுச் செயல்பாடுகள்
33. தொழிற்கல்வி மன்றம்

## அகமதிப்பீடு மதிப்பெண்கள்

| வருகைப் பதிவு | உள்நிலைத் தேர்வுகள் | | | | ஒப்படைவு/ செயல்திட்டம்/ களப்பயணம் | கல்வி இணைச் செயல்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | தேர்வு -1 | தேர்வு -2 | தேர்வு -3 | தேர்வு -4 | | | |
| .................... | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். | | | ................. | ................. | ................. | ................. |



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com

12ஆம் வகுப்பு

# அரசு மாதிரி வினாத்தாள் - 2019-20

## தமிழ்

**நேரம் : 15 நிமிடங்கள் + 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. [14 × 1 = 14]

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்
2. கடலின் பெரியது
   அ) உற்ற காலத்தில் செய்த உதவி
   ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
   இ) தினைமளவு செய்த உதவி
   ஈ) மறந்து விட்ட உதவி
3. தேயிலைத் தோட்டப்பாட்டு என்னும் நூலின் ஆசிரியர்
   அ) முகம்மது இபுராகிம்
   ஆ) முகம்மது அப்துல் காதர்
   இ) முகம்மது இராவுத்தர்
   ஈ) அப்துல் ரகுமான்
4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
   அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
   ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
   இ) காலநிலை மாறுபடுகிறது
   ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
5. **கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
   **காரணம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணம் தவறு
   ஈ) கூற்று சரி, காரணம் சரி
6. ச.ந.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி
   அ) பௌத்தமும் தமிழும்
   ஆ) இசுலாமும் தமிழும்
   இ) சமணமும் தமிழும்
   ஈ) கிறித்துவமும் தமிழும்
7. இயற்சீர் வெண்டளை என்பது
   அ) மாமுன் நிரை ஆ) காய்முன் நேர்
   இ) மாமுன் நேர்
   ஈ) விளம் முன் நிலை
8. Metro Train - என்பதன் தமிழ்ச்சொல்
   அ) நகரத் தொடர்வண்டி
   ஆ) மின் தொடர்வண்டி
   இ) மாநகரத் தொடர்வண்டி
   ஈ) நவீனத் தொடர்வண்டி
9. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
   ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
   இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
   ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின
10. வளர்தலம் - என்பதன் இலக்கணக் குறிப்பு.
    அ) வேற்றுமைத் தொகை
    ஆ) வினைத் தொகை
    இ) பண்புத் தொகை
    ஈ) உவமைத் தொகை
11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.
    அ) “தமிழ் இமயம்” என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சு.ப.மாணிக்கம்
    ஆ) இவர் தமிழ்க்காதல் வள்ளுவம், உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர்.
    இ) ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமை கொண்டவர்.
    ஈ) ‘தமிழ்வழிக் கல்வி இயக்கம்’ என்ற அமைப்பை, நிறுவித் தமிழ்ச் சுற்றுலா மேற்கொண்டவர்.



Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
Sample Materials www.surabooks.com



(v) அக்கருத்தை மறுத்த மாணவர் ஒருவர். அம்மன்னர்கள் முறையே 7,8 மற்றும் 9 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் எனக் கூறினார். மாணவர் கூறிய கருத்தே சரியென்பதை உணர்ந்து கொண்ட மகாதேவன் அவர்கள், முதலாம் உலகத் தமிழ் மாநாட்டில், மாணவரின் கருத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார்.

(vi) ஐராவதம் மகாதேவனின் இந்த அரியக் கண்டுபிடிப்பினால், சங்ககாலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய புறச் சான்றுகள் எதுவுமே கிடைக்கவில்லை என்ற குறை நீங்கியது.

46. அ)

**முன்னுரை:**

'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன எவை என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

**சாலை விபத்து பற்றி ஒரு கண்ணோட்டம் :**

நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு. ஏறக்குறைய 55 இலட்சம் கிலோமீட்டர் சாலைகள் நம் நாட்டில் உள்ளன. 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் நம் நாட்டில் உள்ளன. ஓர் ஆண்டில் ஏறக்குறைய 5 இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.

**சாலை விபத்தைத் தடுக்கும் முறைகள் :**

சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக்காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்பச் சாலையைப் பயன்படுத்த வேண்டும். நடைமேடை, நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக்கூடாது.

சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும். எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கும் வழிவிட வேண்டும். தேவையெனில் வேகம் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும். பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுப்பது சிறந்தது. இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. குறியீடுகளை மூன்றாகப் பிரித்து அறியலாம். அவையாவன: உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகள்.

**முடிவுரை:**

சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும் பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.

(அல்லது)

ஆ) 'நடிப்புலகின் சக்கரவர்த்தி' என்று அனைவராலும் போற்றப்படுகின்ற நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் பழகுவதற்கு மிகவும் எளிமையானவர். அவரின் இயற்பெயர் சின்னையா கணேசன். விழுப்புரத்தில் பிறந்த அவர், சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தனது தந்தையை தனது ஒன்பதாவது வயதில்தான் முதன் முதலில் பார்த்தார். தனது ஐந்தாவது வயதிலேயே வறுமை காரணமாக நாடகக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். படிப்படியாக உயர்ந்து திரையுலகிற்கு வந்தார். நடிப்பின் இமயம் என்று போற்றப்பட்டார்.

அண்ணாதுரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அவர் நடிப்பைக் கண்டு வியந்த ஈ.வெ.ரா. பெரியார், 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டார். அன்று முதல் அந்தப் பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. 'பராசக்தி' என்ற திரைப்படம்தான் அவர் நடித்த முதல் திரைப்படம் ஆகும். திரைப்படத்தில் நடித்தாலும், நாடக உலகை மறக்காமல், நாடகங்களிலும் நடித்து வந்தார். திரைப்படத்தை விட நாடகங்களையே அவர் மிகவும் நேசித்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற திரைப்படம் அவரை உலகப் பிரசித்தி பெற்ற நடிகனாக மாற்றியது. இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், சிவபெருமான், அப்பர், சுந்தரர், கர்ணன், பாரதியார் என்றதுமே நம் கண்முன்னே வந்து நிற்பது அந்தந்த கதாபாத்திரங்களாகவே மாறிவிட்ட சிவாஜியின் உருவமே ஆகும். அவர் நடிக்கும் போது 'சிவாஜி கணேசன்' என்ற நடிகர் நம் கண்முன்னே இருக்கமாட்டார். அந்தக் கதாபாத்திரம்தான் நமக்குத் தெரியும்.

ஒருமுறை இயக்குநர் ராஜீவ் நாத் சிவாஜி அவர்களிடம் மலையாளப் படத்திற்கான கதையினை கூற அவரின் வீட்டிற்குச் சென்றார். இயக்குநர் கதையினை கூறும்போது உடன் சென்ற பாலசந்திரன் சுள்ளிக்காடு என்பவர் சிவாஜியின் முக அசைவுகளை கூர்ந்து கவனித்து பின்வருமாறு அதை குறிப்பிடுகிறார். "கதையினை கேட்கும் சிவாஜி அவர்களின் தோற்றம், ஊழித்தாண்டவமாடும் ருத்திரன், கவச குண்டலம் கொடுத்தகர்ணன், காளமேகத்தில்கவிதைததும்பச்செய்த கவிகுல குரு காளிதாசன், அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த்தமிழ் மண்ணின் வீரதீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜ சோழன், என நடிகர் திலகத்தின் கதாபாத்திரங்கள் தன் மன அடுக்குகளில் மின்னி மறைந்ததாக" கூறியுள்ளார். எனவே சிவாஜி அவர்களுக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் பொருத்தமானதே.

47. அ)

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**பாவகை : கலிவிருத்தம்**

ஆ) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

☆☆☆

Ph: 9600175757 / 8124201000 orders@surabooks.com
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com